# த.ச.பே. நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

தொகுதி 47 எண்-2

12, மார்ச் -1992

யீடு 18-9-1992 Issued 18-9-1992

26 மார்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

யாழக்கிழமை மார்ச் 12, 1992 - தொகுதி 17 - எண் 2
ursday the 12th March, 1992 - Volume 17 · No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

லை ரூ. 3-00] [Price Rs. 3-00

(3C௫)

## உள்ளடக்கம்.

**12—3—1992**


பக்கங்கள்

**1. வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 129—170

**2. உரிமைப் பிரச்சினை—**

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து 'மாலை முரசு' 5—2—1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பேரவைத்தலைவர் அளித்த நீர்ப்புரை. 170—172

**3. அறிக்கை அளித்தல்—**

மனுக்கள் குழு 172

**4. வரவு - செலவுத் திட்டம், 1992–93—பொது விவாதம்—(தொடர்ச்சி)—**

திரு. வி. தண்டாயுதபாணி 173—178

திரு. கி. இராஜன் பாபு (எ) தணிகைபாபு 178—182

திரு. கே. முனிவெங்கடப்பன் 182—185

டாக்டர் தே. குமாரதாஸ் 185—193

*திரு. ப. ரங்கநாதன் 195—200

திரு. எம்.ஜி. சேகர் 200—203

செல்வி கோ. மல்லிகா 203—207

திரு. கே. செல்வராஜ் 207—210

திரு. இளம் வழுதி 210—221

*திரு. செ.து. வரதராஜன் 222—225

திரு. ஆர். கோடிமாரி 225—230

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் 230—234

திருமதி ரெ. சியாமளா 236—239

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. சா. பன்னீர்செல்வம் | 239—243 |
| திரு. ஆ. சுப்புரத்தினம் | 243—247 |
| திரு. சி. ஞானசேகரன் | 248—253 |
| திரு. பி. ஈஸ்வரமூர்த்தி | 254—257 |
| திரு. எஸ். அன்பழகன் | 257—260 |
| திரு. கோ. ஜானகிராமன் | 260—263 |
| *திரு. ஆ.கு. சீனிவாசன் | 263—265 |
| திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் | 265—269 |
| *திரு. கே. ஆர். ராஜு | 269—281 |

5. அறிவிப்பு—

| | |
|---|---|
| (அ) பேரவை அலுவல்கள் குறித்து .. | 234 |
| (ஆ) பார்வையாளர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கும்போது உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து. | 247—248 |

| | |
|---|---|
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 272 |


D
V211,31 N92
N92-17.2
163173

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

மாசி 29, பிரஜோற்பத்தி, திருவள்ளுவர் ஆண்டு–2023.

1992, மார்ச் 12, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்''.

சொற்களில் பயனுடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும் ; பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்வதைத் தவிர்க்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள் :

### உடுக்குறியிட்ட வினாக்கள் :

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள். வினா எண். 179, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

79—

### குத்தகைதாரர்கள் வழக்குகள்.

*** 5028—திரு. வி.கே. சின்னசாமி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் வட்ட அளவில் நடைபெறும் குத்தகைதாரர்கள் வழக்குகள் வட்டாட்சியரிடம் பல வருடங்களாக முடிக்கப்படாமல் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 மார்ச் 12

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). இதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் குத்தகைதாரர்கள் வழக்கு என்பது வட்டாட்சியர் அளவில் நடைபெறுகின்ற ஒரு வழக்காகும். இதில் பல ஆண்டுகள் காலதாமதம் ஏற்படுவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நடந்து நடந்து அவர்கள் நிலைமையே மோசமாகின்ற அளவுக்கு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்றைய தினம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரு வழக்கைப் பதிவு செய்தால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, இவ்வளவு மாதங்களுக்குள்ளாக அதை முடிக்க வேண்டுமென்று இன்றைக்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களே யானால் அது விவசாயிகளுக்கு ஏற்றதாக இருக்கும். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி காலதாமதம் ஆகாமல் இருப்பதற்காக வட்டாட்சியரிடம் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், நிலுவையைக் குறைக்க ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் கால முறை அறிக்கை தர வேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது. 31-1-1992 வரையில் 1,14,760 பேர்களுக்கு அதை வரை முறைப்படுத்தி குத்தகைப் பதிவு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நிலுவையில் உள்ளது 4,128 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 4,000 மனுக்கள் நிலுவையில் இருக்கிறதென்று சொல்கிறார்கள். இதில் காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்றே புரியவில்லை. யார் நிலத்தின் சொந்தக்காரர்கள், யார் உழுகிறார்கள் என்ற ரிக்கார்டுகள் எல்லாம் வருவாய்த் துறையில் உள்ள வி.ஏ.ஓ. வைத்திருக்கிறார். எனவே இதில் காலதாமதம் ஏற்படுவதால் உண்மையான குத்தகை விவசாயிக்குப் பாதகம் ஏற்படும் நிலைமை ஏற்படுகிறது. . ..



1992 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குத்தகை விவசாயிகளைப் பற்றிய எல்லா விளக்கங்களையும் இங்கே சொல்ல வேண்டுமென்று இல்லை. துணைக் கேள்வி கேட்கத் தான் உங்களை அனுமதித்து இருக்கிறேன். நீங்கள் கேட்கிற கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால தாமதம் ஆகாமல் இருப்பதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில நேரங்களில் தகுதியற்றவர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடுமோ என்பதை ஆராய்வதில் தான் காலதாமதம் இருக்கிறது. அந்த காலதாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக இப்போது கால முறை அறிக்கை தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், வட்டாட்சியருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை வழக்குகள் காலதாமதம் ஆகிறதென்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டாக வேண்டும். இதை விரைவுபடுத்துவதற்கு குழுக்கள் அமைத்து, இந்த வழக்குகளை விரைவாகப் பைசல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட காலதாமதத்தைத் தடுப்பதற்காகவும் தகுதியற்றவர்களுக்குப் போய்ச் சேராமல், முறையற்ற முறையில் நடக்காமல் தடுப்பதற்காகவும் 5 பேர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்க அரசு உத்தேசித்து உள்ளது. அப்படி 5 பேர்களைக் கொண்ட குழுவை அமைக்கும் போது அந்த 5 உறுப்பினர்களில் ஒருவர் குத்தகைதாரராக இருப்பார். இன்னொருவர் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருப்பார். 3 பேர்கள், சமுதாயப் பணியாளர்கள் (Social workers) ஆக இருப்பார்கள். இப்படி ஐந்து பேரைக் கொண்ட குழு, வட்ட அளவில், ஒவ்வொரு வட்டத்திற்கும் குழு அமைக்கும் எண்ணம் அரசின் கவனத்தில் இருக்கிறது. விரைவில் இது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது காலதாமதமும் நீக்கப்படும். தகுதி உள்ளவர்களுக்கும் கிடைக்கும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலமுறை அறிக்கையை வரவைப்பதாகச் சொன்னார்கள். ஆறு மாத காலத்திற்குள் இது போன்ற ஒரு விவகாரம், அதாவது குத்தகைதாரர்களுடைய வழக்குகள் வருமானால் அதை தாசில்தார் முடிக்க வேண்டும் என்ற அறிவுரையை அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி காலதாமதத்தைப் போக்கடிப்பதற்காகத் தான் இன்றைக்கு 5 பேர்களைக் கொண்ட குழு அமைக்க இருக்கிறோம். அப்படி 5 பேர்கள் என்பதில் குத்தகைதாரர்களும் வந்து விடுகிறார்கள். ஆகவே அது விரைவில் போடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குத்தகைதாரர்களுடைய வழக்குகளில் சில வழக்குகளை உள் குத்தகைதாரர்கள் தொடருகிறார்கள். மூலக் குத்தகைதாரர்கள் ஒரு புறம் இருக்க, இந்த உள் குத்தகைதாரர்கள் தங்களுக்கு ஏதோ பாத்தியதை இருப்பதாகக் கொண்டாடிக் கொண்டு வழக்குகள் தொடருகிறார்கள். இதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள், உள் குத்தகைதாரர்கள் என்ற நிலைமை இருப்பதைத் தவிர்ப்பதற்காகத் தான் அந்தப் பகுதியில் உள்ளவர்களை அடக்கிய 5 பேர் கொண்ட குழுக்களை போடுகிற போது, இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் தேங்கிக் கிடக்கும் குத்தகைதாரர்கள் வழக்குகளை விரைவில் முடிக்க ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் அல்லது இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஒருவராக, வட்டாட்சியர் அந்தஸ்தில் தனி அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படுத்தாமல் இருக்கிற குத்தகைதாரர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. எந்த வட்டத்திலாவது எண்ணிக்கை மிக அதிக



மாக இருந்தால், அங்கே இருக்கிற வட்டாட்சியர்களால் பார்க்க முடியாது என்று அரசு கருதினால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த வட்டத்தில் உள்ள அரசு, கோவில் நிலங்களை பல ஆண்டுகளாக அவர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். அதே நேரத்தில் அந்த நிலத்தை அவர்களே கிரயம் செய்கிறோம் என்று மார்க்கெட் ரேட்டில் என்ன விலைக்குப் போகிறதோ, அதை விட கொஞ்சம் குறைத்து 75 சதவீதத்திற்கு விற்பனை செய்கிறார்கள். இது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம் மாதிரியாக தவறுசெய்வது என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. ஆனால் யார் நிலச் சொந்தக்காரர்களோ அவர்கள் தான் விற்க முடியும். வாங்குகிறவர்களும் மூலப் பத்திரத்தைப் பார்த்துத் தான் வாங்குவார்கள். மூலப் பத்திரம் இல்லாவிட்டால் வாங்குவதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். இப்படி தவறாக எங்கே நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டு அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 180. திரு. தே. ஜனார்த்தனன். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

180—

## வளவனூரில் பிற்பட்டோர் மாணவர் விடுதி

*1810—திரு. தே. ஜனார்த்தனன்:
மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வளவனூரில் பிற்பட்டோர் மாணவர் விடுதி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது அப்படித் துவங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கப்பட்டிருக்கிற வளவனூர் பகுதியில் முன்பே 6 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களும், இரண்டு ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களும் இருக்கின்றன. இந்த ஆண்டு 13 விடுதிகள்தான் திறப்பதாக அரசு திட்டமிட்டிருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டிலேயாவது இந்தப் பகுதியில் திறக்க முடியுமா என்பதைப் பற்றி இப்போது கூற இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ். இது வளவனூர் பற்றியது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் கேள்வியைத் தெரிந்து கொண்டு துணைக் கேள்வி கேளுங்கள் என்றேன். கட்டிடம் கட்டுகிற பிரச்சினையே இதில் இல்லை. அந்த ஊரில் ஒரு மாணவர் விடுதி ஆரம்பிப்பதுபற்றிக் கேள்வி. அது நீக்கப்படுகிறது.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 181, திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

181—

## திருத்துறைப்பூண்டியில் தொழில்நுட்பக் கல்லூரி.

*2140—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. இடையில் 1990ஆம் ஆண்டு அது மாற்றப்பட்டதாக அறிகிறேன். மன்னார்குடி, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம், வேதாரண்யம் போன்ற இடங்களில் அநேகமாக அது போன்ற தொழில்நுட்பக் கல்லூரி கிடையாது. நாகப்பட்டிணத்திலே மட்டும் தனியார் ஐ.டி.ஐ. இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய கிராமப்புறத்து மக்கள் படிக்க அரசு நிச்சயமாக பரிசீலனை செய்து அதைக் கொண்டுவர முயற்சி செய்யுமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கல்வி சார்பான கல்வி நிறுவனங்கள் அந்தப் பகுதியிலே தேவையென்று கேட்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இப்போது இருக்கின்ற நிதிநிலையில் அரசாங்கம் தன் சார்பில் அங்கே தொழில்நுட்ப கல்வி நிலையத்தை ஆரம்பிக்கிற சாத்தியக்கூறு இல்லை என்பதைத்தான் கூறுகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே அதற்கான இடம் எல்லாம் கூட அரசு மூலமாக சர்வே செய்யப்பட்டு அந்த இடம் அரசாங்கத்தினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருந்தது; முழுமையாக பார்வையிடப்பட்ட இடம் அது, ஏதோ ஒரு அரசியல் காரணத்தால் 1990 ஆம் ஆண்டு அது நிறுத்தப்பட்டது, அங்கேயிருந்து திருவாரூருக்கு மாற்றப்பட்டதாக நான் கருதுகிறேன், ஆகவே மீண்டும் அந்த இடத்திலேயே துவங்குவதற்கு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிறுவனமோ அல்லது அமைப்போ ஓரிடத்திலே துவங்குவதாக இருந்து அது வேறு ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கலாம். அங்கே துவங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கலாம், இப்போது மறுபடியும் பழைய இடத்திலே ஒன்று தேவையென்றால், புதிதாக கேட்பது போலத்தான் ஆகுமே தவிர வேறு ஓர் இடத்திற்குப் போனதை

மூடி அதை இங்கே திரும்ப கொண்டு வர வேண்டுமென்றால் அது இருக்கிற பிரச்சினையை இன்னும் சிக்கலாக்கக் கூடிய ஒரு கருத்தாகும், ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறபடி அந்தப் பகுதியிலே தொழில் நுட்பக் கல்லூரியோ அல்லது பாலிடெக்னிக் கோ அல்லது ஐ.டி.ஐ.யோ திறக்கப்பட வேண்டுமென்று கருது வாரேயானால், தனிப்பட்டவர்கள் யாராவது அதற்கான முயற்சி களை எடுப்பார்களேயானால், அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும். தனியார் என்று சொல்லுகிறபோது நூற்றுக்கு 50 சதவீதம் இடங்கள் அரசாங்கம்தான் பூர்த்தி செய்கிறது, அரசாங்கம்தான் தேர்ந்தெடுக்கிறது, அரசாங்கம் தேர்ந்தெடுக் கிற மாணவர்களைத்தான் அனுப்புகிறோம், மீதி 50 சதவீதம் தான் அவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு போடுவார்கள், ஆகவே ஒரு தனியார் தொழில் நுட்பக் கல்லூரியைத் துவங்கினால் அரை அரசாங்க கல்லூரி துவங்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கொள்ளலாம்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 182, திரு. இரா. நடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,

182—

<u>குலசேகரம் மற்றும் அருமனை அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதியை உயர்த்துதல்</u>,

*8 <u>திரு. இரா. நடேசன்</u> :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனை மற்றும் அருமனை அரசு மருத்துவமனைகளை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை யாக உயர்த்தும் அரசின் நடவடிக்கை எந்த அளவில் உள்ளது ?

(ஆ) எப்போது நிறைவேற்றப்படும் ?.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

<u>திரு. இரா. நடேசன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த அமைச்சரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள், இல்லை என்ற சொல்லே இல்லா





மல் இருக்க வேண்டும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மலைகள் நிறைந்த இடம். ஏழையெளிய தொழிலாளர் கள் கூடுதலாக உள்ள இடம், அவர்களுக்கு அரசாங்க மருத்துவ மனை ஒன்றுதான் மருந்து வாங்க வேண்டுமென்றால் உதவி செய்யக்கூடியது, ஆனால் குலசேகரத்திலும் அருமனையிலும் இரண்டு அரசாங்க மருத்துவமனைகள் இருந்தாலும், குலசேகரத் தில் தினமும் 100 உள் நோயாளிகளும். ஆயிரத்திற்கு மேற்பட்ட புறநோயாளிகளும் வந்து செல்கிறார்கள், ஆனால் அருமனை மருத்துவமனையில் அங்கே உள்ள டாக்டர்கள் ஒழுங்காக செயல் படாத காரணத்தால் கொஞ்சம் குறைவான எண்ணிக்கையில் நோயாளிகள் வருகிறார்கள், ஆகவே 'இல்லை' என்ற சொல்லை மாற்றிவிட்டு, உடனடியாக இல்லாவிட்டாலும், வருங் காலத்திலேயாவது 50 படுக்கைகளாக உயர்த்திதர அரசு முன் வருமா, அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 9-45

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமனை என்ற இடத்திலே நோயாளிகள் இல்லை, எனவேதான் அங்கே படுக்கைகள் அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது, உள்நோயாளிகள் 2 பேர்தான் இருக்கிறார்கள், வெளிநோயாளி கள் ஒரு நாளைக்கு 135 பேர்தான் வருகிறார்கள், எனவே அங்கே அதிகமாக படுக்கைகள் ஏற்படுத்த வேண்டுமா என்று ஒரு யோசனை இருக்கிறது, குலசேகரத்தைப் பொறுத்தவரை ஓரளவிற்கு 16 படுக்கைகள் வைத்து இருக்கிறோம், உள்நோயாளி கள் 45 பேர் வருகிறார்கள் என்ற கணக்கைச் சொல்லி இருக் கிறார்கள், வெளி நோயாளிகள் 135 பேர் வருவதாகக் கணக்கு சொல்லி இருக்கிறார்கள், எனவே இந்த அருமனையைப் பொறுத்தவரை அங்கே படுக்கைகள் அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் மருத்துவர்கள் வராமல் இருந்தால் அங்கே வந்து ஒழுங்காக வேலை செய்வதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம், குலசேகரத்தைப் பொறுத்தவரையில் 16 படுக்கைகள் போதுமா என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்லிய கருத்தின் அடிப்படையிலே ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுக்கலாம்,

<u>திரு. இரா. நடேசன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமனையிலே மருத்துவமனைக்கு சொந்தமான 4 ஏக்கர் பூமி இருக்கிறது, அதை அதிகாரிகள் ஒழுங்காகக் கவனிக் காததால், நாலா பக்கமும் அதை அபகரித்துக்கொண்டு இருக் கிறார்கள், அதுமட்டுமல்லாமல் அங்கே குடிப்பதற்கோ அல்லது அங்குள்ள நோயாளிகள் உபயோகம் பண்ணுவதற்கோ தண்ணீர் வசதி இல்லை, அங்கே தண்ணீர் வசதி இல்லாத காரணத்

துனால் அங்கு சுகாதாரம் மோசமாக போகின்றது, மேலும் அங்கே டாக்டர்கள் ஒழுங்காக இல்லாததால், அங்கே வரவர நோயாளிகள் குறைந்து வருவது உண்மைதான், ஆனால் குல சேகரத்தை பொறுத்தவரையில் அங்கேயும் தண்ணீர் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா, நடேசன், குலசேகரத்தை அமைச்சர் ஒத்துக்கொண்டார், நீங்கள் இந்த அருமனையைப் பற்றி வற்புறுத்துவதோடு நிறுத்துங்கள்,

திரு. இரா, நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமனையிலே சுகாதார வசதி, தண்ணீர் வசதி உடனடியாகச் செய்வதாக இருந்தால் கூடுதலாக நோயாளிகள் வருவார்கள், காரணம் அங்கே நிறைய ஏழை எளிய மக்கள் வசித்து வருகிறார்கள், அருமனையில் அருணை கூர்ந்து இந்த வருடம் இல்லாவிட்டாலும் அடுத்த வருடமாவது படுக்கைகள் அதிகப்படுத்தி வசதி செய்து தருவார்களா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்ப, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமார தாஸ்,

டாக்டர் தே, குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் எந்தெந்தத் தகுதியின் அடிப்படையில் 'அப்கிரேட்' செய்யப் படுகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, குமாரதாஸ், இது அருமனையில் படுக்கை வசதியைக் கூட்டுவது பற்றிய கேள்வி, நீங்கள் ஆரம்ப சுகாதார நிலையம் 'அப்-கிரேட்' செய்வது பற்றிக் கேட்கிற துணைக் கேள்வி இதிலே வராது, அதனால், அருமனையைப் பற்றி ஏதாவது கேள்வி இருந்தால் கேளுங்கள், (குறுக்கீடு) நேரம் போய்க் கொண் டிருக்கிறது, நீங்கள் எல்லாவற்றையும், துறைக்கு சம்பந்தப்பட் டதை பூராவையும் எடுத்துக் கொண்டால் நான் 20 கேள்விகளை முடிக்க முடியாது, உட்காருங்கள்,

டாக்டர் தே, குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு



திரு, நடேசன் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள், இதேபோல் பல பகுதிகளில் பல ஆண்டுகளாக, ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநோயாளிகள் வந்து செல்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, அவைகளை எல்லாம் எந்த இலக்கின் அடிப் படையில் 'அப்-கிரேட்' செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடம் இருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, இக்கேள்விக்கு உரிய துணைக் கேள்வியாக இருக்காது. அடுத்து, வினா எண் 183. திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

183—

## ஆலங்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக்கழகப் பணிமனை.

*4799—திரு, எஸ், சண்முகநாதன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு நீண்ட நாட்களாகியும், பணிமனை அமைக்கப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஆலங்குடியில் பணிமனை ஒன்று அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டபின் பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால், மருதுபாண்டியர் பணிமனை விரைவிலே அமைக்கப் படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கக்கூடிய ஆற்றல்மிக்க முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வருகிற ஆண்டிலே நிறைவேற்றித் தரப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 184, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

184—

ஸ்ரீபெரும்புதூருக்கு தனிப்பேருந்துகள்.

*5923—திரு, சி, ஞானசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அமரர் ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடமான ஸ்ரீபெரும்புதூருக்கு சென்னையிலிருந்தும், வேலூரிலிருந்தும் மற்ற மாவட்டத் தலைநகர்களிலிருந்தும், தனிப்பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முன்னாள் பாரதப் பிரதமரும், பாரத ரத்னாவாக இருந்த எங்கள் இதய தெய்வம் ராஜீவ் காந்தி அவர்கள் இறந்த ஸ்ரீபெரும்புதூருக்கு பலதரப்பட்ட இலட்சக் கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அன்றாடம் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் பஸ் நிற்காத காரணத்தினால் அவர்கள் அல்லலுக்கு ஆட்படுகிறார்கள். அதை கருத்தில் கொண்டு சென்னையில் இருந்தும் மாவட்ட தலைநகரங்களிலிருந்தும் செல்கின்ற பஸ்கள் நிற்பதற்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், எதையும் நினைத்ததை சாதிக்கக்கூடிய வல்லமை படைத்தவர், இதையும் செய்து முடிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 9-50

மாண்புமிகு திரு, கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்னையிலிருந்து வேலூருக்கு ஸ்ரீபெரும்புதூர் வழியாக 107 நடைகளும், சென்னையிலிருந்து காஞ்சிபுரம் வழியாகச் செல்கிற பேருந்துகள் ஸ்ரீபெரும்புதூருக்கு 120 நடைகளும். திருவண்ணாமலையிலிருந்து 21 நடைகளும் அங்கே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐந்து நிமிடங்களுக்கு ஒரு பேருந்து அந்த வழியாக நின்று செல்கிற காரணத்தால் மேலும் பேருந்துகளை இயக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேருந்துகள் அடிக்கடி அந்த வழியாகச் செல்வது உண்மைதான், ஆனால் ஒரு பேருந்துகூட அந்த இடத்தில் நிறுத்து என்றால் நிறுத்தாமல் செல்கிற காரணத்தால் எல்லா பேருந்துகளும் அந்த இடத்தில் நின்று செல்லவேண்டுமென்ற உத்தரவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நாளை மறுதினத்திலிருந்து அந்தப் பகுதியில் எல்லா பேருந்துகளும் நிறுத்தப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 185. திருமதி ரெ. சியாமளா. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்,

185—

கைத்தறி நெசவுத் தொழிலை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம்.

1136—திருமதி ரெ. சியாமளா :

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவுத் தொழிலை ஊக்குவிக்க அரசு சிறப்புத் திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கைத்தறி தொழிலை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு நெசவாளர்கள் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நெசவாளர்கள் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்புத் தொகையை ரூபாய் 10,000-லிருந்து தாயுள்ளம் கொண்ட தலைவியான புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 15,000 ஆக உயர்த்தியுள்ளார்கள், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள, நெசவாளர்கள் பணிக்காலத்தில் இறந்துவிட்டால் அவர்களது குடும்பத்திற்கு மாதம் ரூபாய் 250 வீதம் பத்து ஆண்டுகள் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் தீட்டப்பட்டுள்ளது, ரூபாய் 25,000 செலவில் தகுதியுள்ள நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, கைத்தறி நெசவுத் தொழிலை ஊக்குவிக்க பழைய முறையில் துணி நெய்யக்கூடிய முறையை மாற்றி புதுமைப்படுத்தி, நவீன விசைத்தறிகளை ஏற்படுத்திக் கொடுத்தும், நூல் விலையை கட்டுப்படுத்தியும், நெசவாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி தரவும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 5,000 கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்,

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த தொழில் இப்போது நசிந்து கொண்டிருக்கிறது. இதை மாற்றுவதற்கு ரிபேட் தொகையை உடனடியாக கொடுக்க ஏற்பாடு செய்யவும், கோ-ஆப்டெக்ஸ் வாங்கிய துணிகளுக்கு உடனடியாக கிரயத் தொகையைக் கொடுக்கவும். நூல் வாங்க வேண்டுமென்றால் அந்த சொசைட்டி காசு கொடுத்து தான் வாங்க வேண்டியிருப்பதால் அந்த நிலைமையைச் சரி செய்து கொடுத்தாலே ஊக்குவிக்கிற நிலைமை ஏற்படும், அந்த



நிலைமையை உடனடியாகச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கூட்டுறவில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு கூட்டுறவின் கீழ் இருக்கிற அனைத்து சலுகைகளும் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலோடு தொடர்புடைய பாவு பதப்படுத்தல், அச்சுப்பதித்தல். நூல் நூற்றல், பாவு சுற்றுதல் போன்ற வேலைகளைச் செய்பவர்களுக்கு வாழ்வு வளம்பெற ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா ? மற்றும் பாரம்பரியமாக உள்ள கலை சிறப்புமிக்க சேலை ரகங்கள் அழிந்து போகாமல் பாதுகாக்க அரசு முயற்சியெடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கைத்தறி தொழிலை ஊக்குவிப்பதற்காக இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். இதோடு சேர்த்து புரட்சித்தலைவி அவர்கள் 5,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றவும், 5,000 கைத்தறிகளை நவீனப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து ஊக்குவித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி,

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெசவாளர்களுக்கு வர வேண்டிய ரிபேட் மத்திய அரசாங்கத்திடமிருந்து முறையாக வராத காரணத்தால் பல நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் தொகை போய்ச் சேராமல் அந்தத் தொழில் நலிவடைகிற நிலையில் இருப்பதாகத் தகவல் சொல்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழக அரசுக்கு வர வேண்டிய ரிபேட் தொகை மொத்தம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நெசவாளர்களுக்கான சலுகைகளைக் குறித்தது. ரிபேட் தொகையைப் பற்றி

தனிக் கேள்வி போட்டால், தனி பதில் வரும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. மு. நடேசன்.

<u>திரு. மு. நடேசன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசோசியேசன் என்ற பெயரில், தனியார்கள் நூலை வாங்கி அவர்களே விற்கின்ற நிலை இந்த கைத்தறித் தொழிலிலே இருந்து கொண்டிருக்கிறது. அதை இந்த அரசு அறியுமா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே உள்ளவர்களுக்கு கூட்டுறவின் வாயிலாக நூல் தருவதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார், தனியார் துறையில் வாங்குகிறார்கள். அப்படி ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. கே. செல்வராஜ்.

<u>திரு. கே. செல்வராஜ்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுடைய முக்கிய கோரிக்கையான, நீண்டகால பிரச்சினையான, நூல்களை மானிய விலையில் அவர்களுக்கு அளித்து, அந்தத் தொழில் நசியாமல் இருக்க, ஒவ்வொரு தர நூலுக்கும் இன்ன விலை என்று நிரந்தரமாக, நூல் விலை ஏறுகின்றபோதும், இறங்குகின்றபோதும் இல்லாமல், முறையாக ஒரே விலைக்கு சீராகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு சலுகை விலையில் நூல், கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக தரப்படுகிறது, தனியார்களைப் பொறுத்தவரையில் ஹேண்ட்லூம் டெவலப்மென்ட் கார்ப்பரேசன் வாயிலாகத் தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது ஏற்றுமதிக் கொள்கையின் காரணமாக பஞ்சு விலை உயர்ந்திருக்கிறது. பஞ்சு விலை உயர்ந்தவுடன், நூல் விலை உயரத்தான் செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால்—அதற்கான குறிப்புகள் இப்போது இல்லை—தக்க பதில் அதற்குத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ஓ. எஸ். அமர்நாத்.

<u>திரு. ஓ. எஸ். அமர்நாத்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழிலாளர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே, சில சலுகைகளை இந்த அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களின் வாயிலாக, பட்டு நூல், சாதாரண நூல், முறுக்கு நூல் போன்றவை, அரசாங்கம் கொடுக்கின்ற கோட்டாவின் அடிப்படையில் அந்தச் சங்கத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. மதுரையிலே பல சங்கங்கள் இருக்கின்றன. அரசு மூலமாக அந்தந்த கைத்தறித் துறை அதிகாரிகளுக்கு நூல் வந்து சேருகிறது. உறுப்பினர்களுக்கு அந்த நூல் சரியாக வினியோகம் செய்யப்படவில்லை என்று பல புகார்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அதை அரசு அறியுமா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் ஏற்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தருவார்களானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 186. திரு. சி. சுவாமிநாதன். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

186—

<u>ஆழ்குழாய்க்கிணறுகளுக்கு மின் இணைப்பு</u>

* 2049—<u>திரு. சி. சுவாமிநாதன் :</u>

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆழ் குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு வேண்டி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆழ்குழாய்க்கிணறுகளுக்கு மின் இணைப்புக்கோரி வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 933 ஆகும்.

(ஆ) இவற்றில் காவிரி டெல்டாப் பகுதிகள் அடங்கிய அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், ஆலங்குடி ஆகிய வட்டங்களில் 674 மனுக்களும், ஏனைய பகுதிகளில் 259 மனுக்களும் ஆழ்க்குழாய்க்கிணறுகளுக்கு மின் இணைப்புக்கோரி வந்துள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது மிகவும் வறண்ட மாவட்டம் என்பதை எனக்கு அருகாமையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். இந்த நாட்டில் விவசாயிகள், முதுகெலும்பைப் போன்றவர்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உணவு உற்பத்திக்கு சிறப்பு முன்னுரிமைத் திட்டம் என்கிற வகையில், அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்து, உடனடியாக மின்சாரம் வழங்குகிறார்கள். அதற்கு அருகாமையில் இருக்கிற மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம். எங்கள் மாவட்டத்திலே ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியும் என்கிற புள்ளிவிவரத்தை நிலத்தடி நீர் ஊற்று நிபுணர்கள் தெளிவாகச் சொல்வதன் அடிப்படையில், பிராக்டிகலாக அங்கே தண்ணீர் நிறைய இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட விவசாயப் பெருங்குடி மக்கள்....

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக்கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : நில வள வங்கிகளில் கடன்களைப் பெற்று, ஒவ்வொரு ஆழ் குழாய்க் கிணறுக்கும் ஏறத்தாழ ரூ. 1-1/2 இலட்சம், ரூ. 2 இலட்சம் செலவு செய்து காத்திருப்போர் பட்டியலில், இரண்டு, மூன்று ஆண்டுகளாக அவர்கள் மின் இணைப்பு கிடைக்காமல் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுவரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியது போல் 900 மனுக்களைப் பெற்றிருக்கிறார்கள். இதில் எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்





கப்பட்டிருக்கிறது? எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்கின்ற விவரத்தினை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் 31-8-1991 அன்றைய நிலவரப்படி, பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கோருகின்ற விண்ணப்பங்கள் ஏறத்தாழ 15,900 வந்துள்ளன. அவற்றில் 933 விண்ணப்பங்கள் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு கோருகின்ற விண்ணப்பங்களாகும். அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், ஆலங்குடி ஆகிய காவிரி டெல்டா பகுதியிலிருந்து 674 விண்ணப்பங்களும், ஏனைய பகுதிகளிலிருந்து 259 விண்ணப்பங்களும் வந்திருக்கின்றன. மொத்தம் 933 விவசாய மின் இணைப்புக்கான மனுக்கள் வாரியத்திடம் நிலுவையில் இருக்கின்றன. இம்மாவட்டத்திற்கு 1340 பம்புசெட்டுகளுக்கு 1991-92 ஆண்டுக்கான இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 30-9-1991 முடிய ஏறத்தாழ 458 பம்புசெட்டுகளுக்கு தரப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் இப்போது தொடர்ந்து மின் இணைப்பு தந்து கொண்டிருக்கிறோம். தற்சமயம் 1984-85 ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் மின் இணைப்பு பெறத் தகுதியுடையனவாக இருக்கின்றன. இதில் அரசு ஆணைப்படி காவிரி டெல்டா பகுதி அடங்கிய ஆவுடையார்கோவில், அறந்தாங்கி, ஆலங்குடி வட்டங்களிலுள்ள குழாய்க் கிணறுகள், துளை குழாய்க் கிணறுகளுக்கு, ஆண்டின் இலக்காக மின் இணைப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசின் பேரிலே இங்கே அதற்கு முன்னுரிமை தரப்படுகின்றது. ஆனால் இது வரையிலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முன்னுரிமை கடிதம் வாரியத்திற்கு வரவில்லை. அப்படி வருகின்ற நேரத்திலே, அதற்கான முன்னுரிமை கொடுத்து உரிய நடவடிக்கைகளை மின் வாரியம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகளைப் பொறுத்தவரையில் இப்போது நம்முடைய அரசு அறிவித்திருக்கிற அவசர மின் இணைப்பு வேண்டுமென்ற பட்டியல்படி ரூ. 25,000 செலுத்தினால், உடனடியாக மின்சாரம் கிடைக்குமென்ற அறிவிப்பினை நம்முடைய அரசு இப்போது அறிவித்திருக்கிறார்கள் இந்த ரூ. 25,000 என்பது அதாவது ஒரு போர்வெல்லுக்கு மின் இணைப்பு கிடைக்கவேண்டுமென்று சொன்னால் 10 போல் அல்லது 4 போல்கள் இருக்கக் கூடிய ஒரு குறைந்த செலவில் மின் இணைப்பு பெறக் கூடிய அந்த போர்வெல்காரர்கள் கூட ரூ. 25,000 செலுத்த வேண்டியிருக்கிறது. ரூ. 25,000-க்கு மேலே செலவாகுமென்று சொன்னால், அதையும் விவசாயிகள் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறபோது, இதில்

[1992 மார்ச் 12

அரசு சிறப்பு முன்னுரிமை கொடுத்து, சிறப்பு அனுமதி கேட்டு மின் இணைப்பை வேண்டுவோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு, எவ்வளவு ரூபாய் செலவாகிறதோ, அந்தத் தொகையை மட்டும் வசூலித்துக்கொண்டு, அதற்குரிய எஸ்டிமேட் பெற்று, அதற்குரிய தொகையை மட்டும் பெற்றுக் கொண்டு, அந்த ஆழ்குழாய்க் கிணறுகளுக்கான மின் இணைப்பைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு வேண்டி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை? அவற்றின் விவரம் என்ன என்பதுதான். ஆகவே அது சம்பந்தமான பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தந்திருக்கிறேன். இருந்தாலும் அவர்கள் இப்போது ரூ. 25,000 செலுத்தி, மின் இணைப்பு பெறுகின்ற விவரம் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இதில் ஒரு முடிவு எடுத்து, நம்முடைய அரசு சில பேர் உடனடியாக பணம் கட்டினால், மின் இணைப்பு கிடைக்குமென்ற எண்ணத்தோடு, அணுகியிருக்கின்ற காரணத்தால் அந்த அடிப்படையிலே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அது தவிர எப்போதும் உள்ள வழக்கம்போல் கொடுக்கப்படுகின்ற மின் இணைப்புகளையும் தந்துகொண்டிருக்கிறோம். ஆகவே ரூ. 25,000 கட்டினால் மின் இணைப்புக் கொடுப்பது, அதற்கு மேலே செலவாகின்ற தொகையின் அளவிற்கு அந்த மின் இணைப்பு வேண்டுவோரிடமிருந்தே பெற்றுக்கொள்வது என்று தெளிவாக அறிவித்திருக்கிறோம். ஒரு போல் சிஸ்டம் என்று சொல்கின்ற நேரத்திலே உடனடியாக அதற்கு மின் இணைப்பு வழங்குகின்றோம். அவர்கள் 4 போல்கள், 5 போல்கள் என்று சொல்கிறார்கள். அவற்றுக்கு எல்லாம் விதிவிலக்கு தருவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே ஏற்கெனவே அரசு எடுத்திருக்கின்ற முடிவு, பல்வேறு விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று எடுத்திருக்கின்ற முடிவு ஆகும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதுசம்பந்தமான நடவடிக்கைகள் ஏற்கெனவே விவரமாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசின் பேரில் ஆழ்குழாய்



1992 மார்ச் 12]

கிணறுகள் அமைப்பதற்கு முன் உரிமை கொடுப்பதாக கூறுகிறார்கள். அரசாங்கம் அமைக்கும் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்வார்கள். ஆனால் தனியார்கள் அமைக்கும் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் தான் சிபாரிசு செய்ய வேண்டுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே அமைக்கப்படுகின்ற ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைகளின் பெயரிலே மின் இணைப்புகளை வழங்குகின்றோம். அது போல தனியார்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லலாம். அரசிடமும் நேரிடையாக தங்களுடைய பிரச்சினைகள் இன்னின்ன இருக்கிறது என்று எடுத்துச் சொல்லலாம். எப்படி கேட்டாலும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப முன்னுரிமை கொடுத்து மின்சாரம் வழங்குவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு கொடுக்கிறபோது அந்த வரிசையில் திறந்தவெளி கிணறுகளுக்கும் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கும் ஒரே பட்டியலில் வைத்து முன் உரிமை கொடுக்கப்படுகிறதா அல்லது தனித் தனியாக கொடுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு சம்பந்தமான கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் இது சம்பந்தமாக விவரம் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்பது ஆழ்குழாய்க் கிணற்றுக்கும், ஓப்பன் வெல்லுக்கும் பிரையாரிட்டி லிஸ்ட் ஒரே லிஸ்ட்தான் வைத்திருக்கிறீர்களா என்றுதான் கேட்கிறார். அது தொடர்புடையதாகத்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மொத்தத்திலே இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வருடத்திற்கு இவ்வளவு என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆழ்குழாய்க் கிணறுகள்

என்று சொன்னாலும் சரி ஒப்பன் கிணறுகள் என்றாலும் சரி, குறிப்பிட்ட தொகையைக் கட்டி கேட்கிற நேரத்திலே அதற்கான மின் இணைப்பு உரிய முறையில் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே ஆரம்பித்த ஆழ்குழாய்க் கிணறுகள் வறண்ட பகுதியாகிய புதுக்கோட்டை வரைக்கும் இப்பொழுது விஸ்திரணம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போன்ற மிகவும் வறண்ட பகுதியாகிய, தண்ணீரே இல்லாமல், 300 அடி 400 அடி போர் போட்டால் கூட தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற பகுதியான நிலக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகளிலே எந்தப் பகுதியாக இருந்தாலும் அதிலே இந்த அரசு மின் இணைப்பு தருவதிலே தயக்கம் காட்டுவது இல்லை. எந்தப் பகுதி என்று பிரிவினை கிடையாது. எந்தப் பகுதியிலே இருந்தாலும் மின் இணைப்பு தருவதற்கு முன்னுரிமைப்படி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கிணறுகள் அமைப்பது சம்பந்தமான கேள்வி என்று சொல்லுகிறார். அதற்குத் தனிக் கேள்வி போடவும். இது கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான கேள்வியே தவிர கிணறுகள் அமைப்பது சம்பந்தமான கேள்வி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 187, திரு. து. மூர்த்தி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

187—

சீர்காழி தொகுதியிலுள்ள ஏரிகளை ஆழப்படுத்துதல்

*3567—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள நீர்ப்பாசன ஏரிகளான திருவாலி, பெருந்தோட்டம் ஏரிகளை நடப்பு நிதியாண்டில் ஆழப்படுத்தும் பணி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாலி ஏரியை மண்வாரி இயந்திரம் மூலம் தூர் வாரி எடுப்பதற்காக ஏறக்குறைய 1 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு கடந்த கோடையில் கரையினுடைய ஒரு பகுதி சீர் செய்யப்பட்டது. வருகின்ற கோடையிலே மீதம் உள்ள வேலைகள் எடுத்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருந்தோட்டம் ஏரியினுடைய ஒரு பகுதி சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 1991 ஆம் ஆண்டு புல்டோசர் கொண்டு ஒரு பகுதி வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள பணிகள் வரும் கோடை ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நாகை—காயிதே மில்லத் மாவட்டம் என்ற எனது சீர்காழி தொகுதியில், திருவாலி, பெருந்தோட்டம் என்ற இரண்டு ஏரிகளின் கீழ் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுடைய விளை நிலங்கள் இருக்கின்றன. அந்த ஏரிகள் இரண்டையும் தூர் வாரி ஒரு பகுதியிலே வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. முழுவதுமாக அதனை செயல்படுத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை விவசாயிகளுடைய விளை நிலங்களில் சிறப்பான முறையிலே விவசாயம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு விவசாயிகளுடைய நலனைக் கருதி செயல்படுகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு, இதனை முழுவதுமாகச் செயல்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல பகுதி பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள பணிகளை வரும் கோடையாண்டிலே சிறப்பான முறையிலே முடித்து பாசன மேம்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 188. திரு. கே.பி. ராஜு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

[1992 மார்ச் 12

188—

## புறவழிச்சாலை அமைத்தல்

*4247—திரு. கே. பி. ராஜு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை 47-ல் மதுக்கரையிலிருந்து சின்னியம்பாளையம் வரை புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கு மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துகள் அதிகமாக உள்ளன. தமிழ்நாடு, கேரளா இரண்டையும் இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலையே 47 தான். அதுமட்டுமல்லாது, கர்நாடகா, சென்னை, ஆந்திரா போன்ற பகுதிகளுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு, கேள்வி கேளுங்கள். கேரளாவை இணைப்பது என்பது உறுப்பினர்கள் அனைவருக்குமே தெரியும்.

திரு. கே. பி. ராஜு : அந்தப் பகுதிகளை எல்லாம் இணைக்கின்ற ஒரே நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலை. இருபது வருடங்களாக அந்த ரோடு போடுகிறேன், போடுகிறேன் என்று சொல்லிவிட்டு இன்னும் போடாமல் இருக்கிறார்கள். அதனுடைய உண்மை நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த புறவழிச்சாலை அதாவது பை-பாஸ் சாலை என்பது மிகவும் முக்கியமான சாலை என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஏறத்தாழ தேசிய நெடுஞ்சாலை 47-ல் கிலோ மீட்டர் 141/3 முதல் 171/2 வரை 27.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு கோயம்புத்தூர்

ள்ள



1992 மார்ச் 12]

புறவழிச்சாலை அமைப்பதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வேலைக்கான தொழில் நுட்ப கருத்துரு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு சாலை அமைக்கும் வேலைக்கான மதிப்பீடு ஏறத்தாழ 11 கோடியே 40 இலட்சம் அளவிலே தயாரிக்கப்பட்டு இன்று மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் ஏற்கெனவே நம்முடைய பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசுகின்ற நேரத்திலே இந்தத் திட்டங்களையெல்லாம் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு நான் டெல்லிக்கு சென்று நம்முடைய தரை போக்குவரத்து அமைச்சர் ஜகதீஷ் டைட்லர் அவர்களிடத்திலே சந்தித்துப் பேசுகின்ற நேரத்திலே இந்த புறவழிச் சாலையின் முக்கியத்துவத்தை பேசியிருக்கிறேன். ஆகவே, அவரும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கின்றார். ஆகவே மத்திய அரசும், மாநில அரசும் இந்த புறவழிச்சாலையை அமைப்பதற்கான முனைப்பான நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. ஆகவே நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றித்தரப்படும். அதற்கான முயற்சிகளைக் கடுமையாக மேற்கொண்டு இருக்கிறோம். அந்த முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில உறுப்பினர்கள் மத்திய அரசு பணம் ஒதுக்கிவிட்டது. மாநில அரசுதான் இன்னும் பணம் ஒதுக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் வேலை தாமதப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதனால் உண்மை நிலையை அறிவதற்காகக் கேட்டேன். ஏனென்று கேட்டால் எல்லா மாநிலங்களிலிருந்து வருகின்ற லாரிகள், பஸ்கள் அத்தனை வாகனங்களும் கோவை நகரத்தில் வந்து செல்வதால் குழந்தைகள் நேரத்திற்கு பள்ளிக்கூடம் செல்ல முடிவதில்லை. ஆலைகளுக்குச் செல்பவர்கள் நேரத்திற்கு போக முடியவில்லை. ஒரு இடத்தை கடப்பதற்கு ஒரு மணி இரண்டு மணி நேரம் ஆகிவிடுகிறது. ஒரே ஒரு பாலத்தின் வழியாகத்தான் பாலக்காட்டுக்குச் செல்ல வேண்டும். போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டிலாவது முயற்சி செய்து புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்த நெடுஞ்சாலையைப் போடுகின்ற திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கான என்னென்ன முயற்சிகள் எடுத்தோம் என்பதைச் சொல்லியிருக்கிறேன். தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டிலே மத்திய அரசு நிதி வழங்கு

கின்றது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே மாநில அரசும் சரி மத்திய அரசும் சரி இதிலே கருத்து வேறுபாடு கிடையாது. நிச்சயமாக இந்த புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று இரண்டு அரசுகளுக்கும் நோக்கம் இருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே பேச்சுவார்த்தையிலே தெளிவுபடுத்தி இருக்கிறோம். ஆகவே நிச்சயமாக அந்தப் பணி இந்த ஆண்டு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. நிச்சயமாக உறுப்பினர் நம்பலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> வினா எண் 189, திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

189--

## குளித்தலையில் பேருந்து நிலையம் கட்டுதல்

<u>*330--திரு. அ. பாப்பா சுந்தரம் :</u>
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமாக பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமாக பேருந்து நிலையக் கட்டிடம் கட்டும் திட்டம் மாவட்ட அளவில் உள்ளது.

(ஆ) அரசு அளவில் பரிசீலிக்கும் கட்டத்தை அடையவில்லை.

<u>திரு. அ. பாப்பா சுந்தரம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை என்பது நகராட்சியாகவும் இருக்கிறது. அந்த நகரத்திற்கு இதுவரையிலும் எந்தவித பேருந்து நிலையமும் இல்லை. ஆகவே, அந்த நகருக்கு பேருந்து நிலையம் கட்டுகின்ற முறையிலே முந்தைய தி.மு.க. ஆட்சியிலே நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அப்போது நிலங்களைக் கையகப்படுத்த முடியாமல் போய்விட்டது. எனவே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது ஏதாவது ஒரு இடத்தை கையகப்படுத்த அரசு முயற்சித்து இருக்கிறதா? இடத்தை கையகப்படுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-15

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தை கையகப்படுத்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. விரைவில் இந்த பேருந்து நிலையம் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண், 190. திரு. வெ. பழனிசாமி. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

190—

## அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவுகளில் கட்டப்பட்ட வீட்டுப்பகுதிகளுக்கு வசதி.

<u>*3923—திரு. வெ. பழனிசாமி :</u>
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிப் பகுதியில் அரசு அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகளில் கட்டப்பட்ட வீடுகளுக்கு நகராட்சி மன்றம் எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்துதர இயலாததால் இப்பகுதிகளை அரசு அங்கீகரிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அங்கீகரிக்கப்படும்?

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு அங்கீகரிக்க வழிகள் ஏதும் இல்லை என்றாலும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்த சாலைகள் அமைத்து பொது இடங்களையும், சாலையையும் தானமாக நகராட்சிக்கு அளித்தால், நகர் ஊரமைப்புத்துறை இயக்குநரின் ஒப்புதல் பெற்று அடிப்படை வசதிகள். மற்றும் மனைப்பிரிவு ஒப்புதல் ஆகியவை செய்து தருவது பற்றி பரிசீலிக்கப்படும்.

<u>திரு. வெ. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 10, 15 ஆண்டுக் காலமாக அங்கீகரிக்கப்படாத மனைப் பகுதிகளில் தெரு விளக்கு வசதி, சாலை வசதி, பாதை வசதி, சாக்கடை வசதி போன்றவற்றை செய்து கொடுக்க முடியாமல் முழுமையாக அனைத்து வரிகளையும் பொதுமக்கள் கட்டி வருகிறார்கள். அங்கீகரிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக மிகப் பெரிய தண்டனையாக இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுக்காமல் இருப்பதை அரசு மறுபரிசீலனை செய்து அனைத்துப் பகுதிகளையும் அங்கீகரிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஏதாவது இடத்தைச் சொன்னால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் சுமார் 50 சதவீதத்திற்கு மேல் இப்படி அங்கீகரிக்கப்படாமல் இருப்பதால் தெரு விளக்கு வசதி, பாதை வசதி போன்றவற்றை செய்து கொடுக்க முடியாதது மட்டும் அல்லாமல் குடிநீர் குழாய் கூட அங்கே பதிப்பதற்கு அனுமதிக்காமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நகரத்திற்கு அப்படிப்பட்ட லே அவுட் பகுதிகளை அங்கீகரிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கு உட்பட்ட 200 அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப் பிரிவுகள், எந்த வசதியும் இல்லாமல் கோவையில் மக்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். 20, 25 ஆண்டுகள் என்று ஆகியும் அவர்களுக்கு எந்த அடிப்படை வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் அந்தப் பயனைப் பெறுவதற்கான தகுதிகளையெல்லாம் பெற்று இருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற இடங்களைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாத இடங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு தகுந்த குடிநீர் வசதி, சாலை வசதி செய்யப்படாத நிலையில் அங்கே நகர்ப்புறவரி மட்டும் வசூல் செய்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும்





துயரப்படுகிறார்கள். அதுவும் அங்கீகரிக்கப்படுகின்ற நிலை எப்படி என்றால். நகரத்துப் பகுதியாக இருப்பதால் மிகுந்த காஸ்ட்டிலியாக, விலை அதிகமாக இருப்பதால் அங்கீகரிக்க முடியாத சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, அங்கீகரிக்கப்படாமல் பிளாட்டுகளைப் போட்டு வீடுகள் கட்டப்பட்ட நிலையில் அதற்கு வரி வசூல் செய்து டெவலெப்மெண்டு பீஸ் எல்லாம் வாங்கிக்கொண்டு ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கீகரிக்கப்படாத இடங்களுக்கும் எல்லா வசதிகளையும் செய்ய உத்தரவிடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் இவைகளை நிறைவு செய்யாத வகையில் அரசை அணுகினால் தகுதி மற்றும் உபயோகம் இவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு விதிகளுக்கு விலக்கு அளித்து மனைப் பிரிவுகள் வரைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதியில் அரசு அங்கீகாரம் இல்லாமல் மனைப் பிரிவுகள் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ராணிப்பேட்டையில் 30 சதவீதம் பேர் வீட்டை கட்டிக்கொண்டு அங்கே எல்லா வசதிகளையும் பெற்று வருகிறார்கள். அவர்கள் மனைப்பிரிவுகள் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதால் அவர்கள் வரி செலுத்தாமலேயே இப்படிப்பட்ட நலத் திட்டங்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை அங்கீகாரம் செய்து முறைப்படுத்தி வரியை அங்கு பெற்றுக் கொண்டால் நகராட்சிக்குப் போதிய வருவாய் கிடைக்கும். எனவே அதை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி,

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியினுடைய அங்கீகாரம் பெற்றுத்தான் வீடு கட்டவேண்டுமென்று இருக்கின்றபோது 30 சதவீதம், 50 சதவீதம் பேர் அங்கீகாரம் இல்லாமலேயே கட்டி வருகின்றார்கள், அதைத் தடுப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா ? அந்தச் சட்டத்தை அரசு பயன்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு கட்டப்படுவதைத் தடுப்பதற்கு சட்டத்திலே விதி இருக்கிறது; இதுபற்றி அரசு பரிசீலனை செய்து இப்படிப்பட்ட நிலைமைகள் மீண்டும் வராமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 191, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

191—

நெல் விலை.

*104—திரு. டி. எம். ரங்கராஜன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர், திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மற்ற மாவட்ட விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அதே விலை நெல்லுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, நெல்லுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறதோ அதே விலைதான் தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்ற மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு விவசாயி தான் உற்பத்தி செய்கின்ற நெல்லை ஓப்பன் மார்க்கெட்டிலே விற்க முடியும். ஆனால், தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயிகள் அவ்வாறு விற்பனை செய்ய முடியாத தால் குறைந்த விலையைத்தான் பெற முடிகிறது. இதனைத் தவிர்த்திட அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மூல வினாவில் அதே விலை கொடுக்கப்படுமா என்று கேட்டு இருக்கிறீர்கள். அதே விலைதான் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.



அதிலே மேற்கொண்டு கேள்விக்கு இடமே இல்லை, மேலும் விலை கூட்டிக் கொடுக்கப்படுமா என்று நீங்கள் கேள்வி கேட்டிருக்க வேண்டும், நீங்கள் கேட்டது துணைக் கேள்வியாகாது,

வினா எண் 192, திரு. ம. சின்னசாமி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

192

விவசாயிகள் பொருளாதார முன்னேற்றக்கழகம்

*245—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு *வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளின் விளைபொருட்களை அரசே கொள்முதல் செய்து விற்கவும். விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யவும் தனி வாரியம் (Farmers Economic development Corporation) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயிகளின் விளைபொருள்களை அரசே கொள்முதல் செய்யவும், விற்பனை செய்வதற்குமான செயற்குறிப்பு அரசினுடைய ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது'' என்று பழமொழி இருக்கிறது. ஆகவே, விவசாயம் செய்கின்றவர்களுக்கு எந்தவித நன்மையும் இல்லாத காரணத்தினாலே பலபேர் 4 ஏக்கர் நிலம் கிராமத்திலே வைத்திருப்பதைவிட நகரத்திற்குச் சென்று ஒரு பெட்டிக்கடை வைத்து பிழைத்துக்கொள்ளலாம் என்று நினைத்து ஏராளமானவர்கள் நகரத்திற்குச் சென்று விடுகிறார்கள். ஆகவே. விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற வகையில் ஒரு நிந்தனை இன்றைக்கு அரசுக்கு ஏற்படவேண்டும். அப்படி ஏற்படுகின்றபோது விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன், விளைச்சலிலே விளையும் பயிர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய கொள்முதல் விலை ஆகிய அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டால்தான் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படும். ஆகவே, அதற்கு ஒரு தனி வாரியம் அமைக்கப்படுமா? இப்போது இல்லையென்றாலும் மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 12

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலனை கருத்தில் கொள்கின்ற ஓரே ஒரு ஒப்பற்ற அரசு புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதை இந்த நாடு புகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு அவர்களுக்கு ஏற்படுகின்ற செலவினங்களைக் கருத்தில் கொண்டு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கோடுதான் தமிழகத்தினுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லரசு, தமிழ்நாடு விளைபொருள் வாணிப விற்பனைக் கழகம் திறம்பட செயல்படுத்துகின்ற வகையிலே உலக வங்கியிடம் 310 கோடியைக் கடனாகப் பெற்று அந்த விளைபொருள்கள் விற்பனைக் கூடங்களுக்கு வருவதற்காக ஏறத்தாழ 50 கோடியை செலவிடுவதற்கு இந்த அரசு திட்டம் வைத்திருக்கிறது. அதுமட்டுமல்லாது விவசாயிகளுடைய விளைபொருள்களை, உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைக்கின்ற வகையிலே பல்வேறு திட்டங்களை இந்த அரசுதான் செயல்படுத்தி வருகின்றது என்பதை இந்திய அரசே புகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த இனிய வேளையிலே தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய கேள்வி இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது செயல்படுத்தப்படுமா என்பது, அதற்கும் உங்களுடைய பதிலைச் சேர்த்துச் சொன்னால் நன்றாக இருக்கும்,

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி, விவசாயிகளின் விளைபொருள்களை அரசே கொள்முதல் செய்து விற்கவும், விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் தனி வாரியம் அமைக்கப்படுமா என்பது. இப்படி தனி வாரியம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை. எனவே விவசாயிகளுடைய விளை பொருள்களை விற்கின்ற நடவடிக்கைகளை விற்பனைக் கூடங்கள் மூலமாக செயல்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம, சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மாநிலத்தில் விளையும் பருத்திகளை அரசே கொள்முதல் செய்து விற்பதற்கு பருத்தி கார்ப்பரேஷன் என்று ஒன்று அங்கே இருக்கிறது. அதேபோல. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறது, மார்க்கெட்டிங் கமிட்டிக்கு எந்த விவசாயியும் போவதில்லை, தனிப்பட்ட மண்டிக்காரர்களிடம் போய்தான் தங்களுடைய விளைபொருட்களை அடகுவைத்து விட்டு இன்றைக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்,



1992 மார்ச் 12] [திரு. ம. சின்னசாமி]

முற்பகல் 10-25

ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு 1982ஆம் ஆண்டு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவருடைய அரசு இன்றைக்கு இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர், கூட்டுறவுத் துறையினுடைய செயலாளர் மற்றும் விவசாயப் பிரதிநிதிகளையெல்லாம் கொண்டு, இப்படிப்பட்ட ஒரு ''ஃபார்மர்ஸ் எக்கனாமிக் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன'' அமைப்பதற்கான முயற்சிகளையெல்லாம் எடுத்து ஒரு ஆய்வுக் கூட்டத்தை கூட்டினார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக அது நின்று போய் விட்டது, ஆகவே இப்படிப்பட்ட ஒரு எக்கனாமிக் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன். விவசாயிகளுக்கு உதவுவதற்குச் செய்ய வேண்டிய ஒரு கட்டாயம் இன்றைக்கு இருக்கிறது, ஆகவே அதை புரட்சித் தலைவருடைய பணியைத் தொடர்ந்து செய்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த வாரியம் அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் கலந்து அதற்குண்டான ஏற்பாட்டைச் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட முறையில் இருக்கக் கூடாது, இது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, அமைச்சர்,

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே நெல் உற்பத்தி ஆகிறது. அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளிடமிருந்து நுகர் பொருள் வாணிபக் கழகமே கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது, ஆனால் அவர் மாராட்டிய மாநிலத்திலே இருப்பதாகச் சொல்கிறார்கள், அதுபற்றி அரசுக்கு இதுவரை கருத்து ஏதும் வரவில்லை, அப்படியொரு நல்ல சூழ்நிலை இருக்குமேயானால். அதனைச் செயல்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது, ஆனால் அதே நேரத்திலே எந்தவொரு விவசாயியும் தான உற்பத்தி செய்கின்ற பொருளை வெளியிடத்திலே. நல்ல விலை கொடுக்கக் கூடிய இடத்திலே விற்பதற்கு அவருக்கு உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் நெல்லை உற்பத்து செய்பவர்கள் எங்கு வேண்டுமானலும் விற்றுக் கொள்ளலாம்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்ற உரிமையிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்திலே அது கிடையாது. கொள்முதல் செய்கிற இடத்திலேதான் கொடுக்க வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைக்கிற இந்த அரசு அவர்களைத் தத்து எடுத்துக்கொண்டு அவர்கள் வைத்திருக்கின்ற நிலத்தில் 4 ஏக்கரா நிலத்திற்கு அவர்களாகவே எலக்ட்ரிக் கனெக்ஷன் கொடுப்பது. போர் இறக்குவது, அதற்குண்டான விதைகள் கொடுப்பது, போன்ற காரியங்களைச் செய்ய அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுடைய கோரிக்கையை அறிந்துதான் நுகர்பொருள் வாணிபக் கழகமே கொள்முதல் செய்து கொள்கிறது, அதோடு மட்டுமல்லாது ஒரு குவிண்டாலுக்கு ஊக்கத் தொகை 35 ரூபாயை தமிழக அரசு வழங்குகிறது என்பதையும் உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா, பழனிசாமி.

திரு, நா, சா, பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயப் பொருட்கள் இடைத் தரகர்கள் அதிகமாக இலாபம் சம்பாதிக்கின்ற விற்பனைப் பொருளாக இருப்பதால் இப்பொழுது இருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களையே விவசாய விளைப்பொருட்களை இடைத் தரகர் இல்லாமல் அதே நேரத்தில் அதற்குக் கொஞ்சம் அவர்களுக்கு முன் பணமும் கொடுத்து அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தைச் சரியான முறையிலே இயங்க அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திலே தரகு கிடையாது; தரகர் கிடையாது. தரகர் இல்லாமல் தரகு இல்லாமல் விற்கக் கூடிய பொருட்களுக்கு வெளி மார்க்கெட்டில் நிலவக் கூடிய விலைகளை விவசாயிகளுக்கு அறிவித்து. விவசாயிகளுடைய விருப்பத்தை அறிந்துதான் அங்கே பொருள் விற்பனை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.193. திரு. எம். கே. பாலன்—மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.



193—

## குடிசை மாற்று வாரிய வீடுகள்.

*1325—திரு. எம். கே. பாலன்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதாப்பேட்டை தொகுதி, பல்லவன் பேருந்து பணிமனை அருகில் உள்ள குடிசைமாற்று வாரியத்துக்குச் சொந்தமான அரசு நிலத்தில் மூன்று அடுக்கு மாடிக் கட்டிடம் (வீடுகள்) கட்ட நடப்பு நிதியாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நிதி ஒதுக்கீடு பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சைதைப் பகுதி பல்லவன் பணிமனை அருகில் உள்ள நிலம் பிரதான சாலையை ஒட்டி அமைந்துள்ளதால் இப்பகுதியில் வருவாய் ஈட்டும் திட்டத்தின் கீழ் வணிக வளாகம் கட்ட தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்திற்கு ஹட்கோவிடமிருந்து கடனுதவி பெறப்படும்.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சிகளில் வித்தியாசமான பூச்சி கரப்பான் பூச்சி. அது வாழ்கின்ற இடத்தைப் பார்க்கின்றபொழுது நமக்கெல்லாம் வியப்பாக இருக்கும். அதேபோன்று என்னுடைய தொகுதியில், கால்வாய் ஓரமும், கெனால் ஓரமும் வாழ்கின்ற மக்கள் அடிப்படை வசதியின்றி, ரோடு வசதி, தண்ணீர் வசதி, விளக்கு வசதி அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடமாக இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்குக் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்ட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னுடைய பதிலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, இந்தப் பகுதி பிரதான சாலையையொட்டி அமைந்துள்ளதால், வருவாய் ஈட்டும் திட்டத்தின் கீழ் வணிக வளாகம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்திருந்தேன். அதுமட்டுமல்லாமல், இத்திட்டம் முடிவுற்றவுடன் அதன் மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தின் மூலம் வாங்குகிற கடனைத் திருப்பிச் செலுத்து

வருவதற்கு வசதியாக இருக்கிற காரணத்தினால், இது பிரதான சாலையில் அமைந்திருப்பதால், அங்கே ஒரு அடுக்குமாடி வணிக வளாகம் கட்டுவது சிறப்பாக இருக்குமென்று அரசு கருதுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன்அனுமதி யோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 194, திரு. செ. து. வரதராஜன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

194 —

சத்துணவு மையங்களுக்கு புதிய கட்டிடங்கள்.

* 4485—திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவு மையங்கள் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடங்களை கட்டித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை, தேவையான இடங்களில் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 195. திரு. இரா. தாமரைக்கனி. இருக்கையில் இல்லை.

வினா எண் 196; டாக்டர் ச. ஆரோக்கியசாமி. திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர்.

196 —

கிறித்துவ ஆதி திராவிடர்களுக்கு சலுகைகள்.

* 3238—டாக்டர் ச. ஆரோக்கியசாமி:

திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) ஆதி திராவிடர்களைப் போல் கிருத்துவ ஆதி திராவிடர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அனைத்து சலுகைகளையும் மீண்டும் ஆதி திராவிட கிருத்துவர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Birth is an accident" என்று சொல்வார்கள். பிறப்பு, மனிதனுக்கு ஒரு விபத்து என்று சொல்வார்கள். அதற்கொப்ப ஆதிதிராவிட குடும்பத்தில் பிறந்த கிருத்தவர்கள், ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகளும் உரிமைகளும் கிடைக்கப்பெறாமல், கடந்த 42 ஆண்டுகளாக பரிதவித்துக் கொண்டு வருகிறார்கள். ஏழை எளிய தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற புரட்சித் தலைவியினுடைய அரசு இது பற்றி சிந்தித்துச் செயல்படுவதற்காக, 1989ஆம் ஆண்டு ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம் கேள்வியை நீங்கள் கேட்கவில்லையே? ஒரு "சென்டன்ஸ்" வேண்டுமென்றால் இவ்வாறு பேசலாம். அதற்கு அடுத்த "சென்டன்ஸ்" கேள்வியாக இருக்க வேண்டும். எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நாள்தோறும் 20 வினாக்களை எடுக்கிறோம். துணைக் கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள், இதைப் போல ஒரு நீண்ட விளக்கவுரை ஆற்றிக் கொண்டிருந்தால், 20 கேள்விகளை எடுத்துக் கொள்ள முடியாது. நாள்தோறும், வினாக்கள்-விடைகள் நேரத்தை நீட்டித்தே நாம் முடித்துக் கொண்டிருக்கிறோம். இதையறிந்து, துணைக் கேள்வி கேட்கிற உறுப்பினர்கள், கேள்வியாக மட்டும் கேட்பது நல்லது என்பதைப் பொதுவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட கிருத்தவர்களுக்கு 1989 ஆம் ஆண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சேவல் சின்னத்தில் நின்றபோது, நாம் கொடுத்த வாக்குறுதிக்கொப்ப.......

[1992 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வி கேட்பதாக இருந்தால் கேட்கலாம். இல்லாவிட்டால் உங்களுடைய பிரசங்கத்தை முடித்துக் கொள்ளலாம்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட கிருத்தவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சலுகைகளும், நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளும் மறுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆதிதிராவிடர்களைப் போல, கிருத்தவ ஆதிதிராவிடர்களையும், ஆதிதிராவிடர் பட்டியலில் சேர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதைக் கேட்டுக் கொண்டு, கிருத்தவ ஆதிதிராவிடர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து எடுத்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலாவது சேர்ப்பதற்கு முயற்சி எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக்கொள்வது அவர் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரிடம் இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற இந்து ஆதிதிராவிடர்களைப்போல, கிருத்தவ ஆதிதிராவிடர்களும் கஷ்டத்திலே வாழ்கிறார்கள். கூலி வேலை செய்துதான், அவர்கள் வாழ்க்கை நடத்துகிற சூழ்நிலை. ஆனால், அரசால் அளிக்கப்படுகிற மானியங்கள், சலுகைகள் அவர்கள் கிருத்தவர்கள் என்பதால் மறுக்கப்படுகின்றன. அதற்கு ஏதாவது சட்டம் தடையாக இருந்தால், அந்தச் சட்டத்தைத் திருத்த இந்த அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு, மத்திய அரசு முடிவெடுக்க வேண்டிய விஷயம். ஆகையினால், மத்திய அரசு இதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய தாழ்த்தப்பட்ட கிருத்தவர்களுக்கும் உரிய சலுகைகள் பெற்றுத் தர அனைத்திந்திய



1992 மார்ச் 12]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்வரும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டு மத்திய அரசு மதம் மாறிய பௌத்தர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சலுகைகளை வழங்குவதாக அறிவித்து இருக்கிறது. எனவே, ஏற்கனவே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு விட்டது. அதனோடு சேர்ந்து மதம் மாறிய கிருத்தவர்களுக்கும் கொண்டு வரவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த மாநில அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 197. திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

197—

ஆத்தூரில் கால்நடை மருத்துவமனை

*4296 திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம் ஆத்தூர் கிழக்குப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனந்தன் என்ற இனியபெயரைக்கொண்ட அமைச்சர் அவர்கள் ''ஆம்'' எனக் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ''இல்லை'' என்று அவர்கள் கூறிவிட்டார்கள். ஆத்தூர் கிழக்குப் பகுதியில் அம்மம்பாளையம், கல்லாநத்தம் கொழுக்கனூர், முல்லவாடி, காமராஜர் நகர் போன்ற ஊர்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாலும், சுமார் 5,000க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாலும், வருகிற நிதி ஆண்டிலாவது இப்பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 12

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் கிழக்குப் பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க சாத்தியக் கூறுகள் இருப்பின், ஆத்தூர் ஒன்றியத்திடம் இருந்து மேற்சொன்ன தீர்மானங்களைப் பெற்று முழு வடிவில் பிரேரணை ஒன்றை அனுப்புவீர்களேயானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 198, திரு. எஸ். அன்பழகன், திருமதி கே. மரியமுல் ஆசியா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

198

நாமக்கல்லில் 'ஆட்டோ நகர்''

*1740—திரு. எஸ். அன்பழகன் :

திருமதி கே. மரியமுல்ஆசியா : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாமக்கல் பகுதியில் லாரி உற்பத்தி அதிகமாக செய்யப்படுவதால் வாகனங்களுக்கான உதிரி பாகங்கள் தயார் செய்வதற்கு '' ஆட்டோ நகர் '' ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தமிழக வரலாற்றின் பொற்கால முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அமைச்சரவையில் பணியாற்ற வாய்ப்புத் தந்த தமிழ்த் தாயின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்,

(அ) ஆம்,

(ஆ) நாமக்கல் ஆட்டோ நகர் சங்கம், தொழிற்பேட்டை அமைப்பதற்கான தேவையான நிலங்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டபின் தொழிற்கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் கேள்வியிலே நல்ல பதில் கொடுத்துள்ளார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு அந்த ஆட்டோ நகர் சங்கத்திற்கு எத்தனை



1992 மார்ச் 12]

ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் என்பதையும், அதற்கான எஸ்டிமேட் எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாமக்கல் ஆட்டோ நகர் சங்கம் 'சிட்கோ'வின் உதவியின் மூலம் நாமக்கல் அருகில் வள்ளிபுரம் என்ற தனியார் தொழிற்பேட்டை ஒன்றை சுமார் 65 ஏக்கர் நிலப் பரப்பில் நிறுவ முன் வந்துள்ளது, அந்த ஆட்டோ நகர் சங்கம் அமைப்பதற்கு 65 ஏக்கர் நிலம் மொத்தப் பரப்பளவாகக் கொண்டு இதுவரை 39.73 ஏக்கர் நில உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது, அரசினுடைய புறம்போக்கு நிலம் 5.51 ஏக்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களை விட தமிழ்நாட்டில் இருந்துதான் அதிக அளவில் லாரிகள் இந்தியா முழுவதற்கும் செல்கின்றன, தமிழ்நாட்டில் நாமக்கல், கரூர், திருச்செங்கோடு போன்ற பகுதிகள் அதிக அளவு லாரி தொழிலை நம்பித்தான் இருக்கின்றன. நாமக்கல்லில் ஏற்படவிருக்கின்ற ஆட்டோ நகரைப் போன்று மற்ற இடங்களில் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 195 திரு. இரா. தாமரைக்கனி. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

195—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

*192 திரு. இரா. தாமரைக்கனி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டத்தில். 'தாட்கோ' மூலமாக நடப்பு ஆண்டில் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

[1992 மார்ச் 12

(ஆ) ஆம் எனில். அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

முற்பகல் 10-40.

## 2. உரிமைப் பிரச்சினை.

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து 'மாலை முரசு' 5—2—1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பேரவைத் தலைவர் அளித்தத் தீர்ப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை பற்றிய என்னுடைய தீர்ப்புரை :

7—2—1992 அன்று திரு. வி.பி. சந்திரசேகர், எம்.எல்.ஏ., அவர்கள் 5—2—1992 தேதியிட்ட மாலை முரசு (கோவைப் பதிப்பு) பத்திரிகையில் அந்த உறுப்பினரைத் தொடர்புப் படுத்தி வெளி வந்துள்ள ஒரு செய்தி தொடர்பாக அந்தப் பத்திரிக்கையின் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார் என்றும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, அது அவை உரிமை மீறல் பிரச்சினையாக இருக்கிறது என்கிற காரணத்தினால் நேரடியாகவே அதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும், ஏன் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி உரிய நடவடிக்கை அந்தப் பத்திரிகையின் மீது எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தினை அப்பத்திரிகையிடம் கேட்டுப் பெற்று, பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன். அப்பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டதில் அவர் தனது 6—3—1992 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் விளக்கத்தினை அளித்துள்ளார்கள் :—



''தங்களின் 7—2—1992 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்று, அது எப்படியோ தவறிவிட்டபடியால், அதன் நகல் ஒன்று அனுப்பும்படி 27—2—1992-ல் கேட்டோம். அதன்படி தங்கள் கடித நகல் கிடைத்து, இந்தப் பதில் எழுத சற்று தாமதம் ஏற்பட்டு விட்டது.

5—2—1992-ல் எங்கள் நாளிதழில் வெளியிடப்பட்டு, உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ள செய்தியின் தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிகிறோம். இனி மேல் இப்படி நிகழாதவாறு பார்த்துக் கொள்ள செய்தித் துறை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பேரவைத் தலைவர் இந்தப் பிரச்சினை பற்றி அவையில் 7—2—1992-ல் குறிப்பிட்டபோது கொஞ்ச நாட்களாகவே இந்தப் பத்திரிகை சட்டமன்றச் செய்திகளைத் திரித்து வெளியிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதாகப் பல உறுப்பினர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதாகக் கருத்துத் தெரிவித்தார்கள். எந்தெந்த செய்திகள் எங்கள் பத்திரிகையில் (கோவை மாலை முரசு) திரித்து வெளியிடப்பட்டன என்பதைத் தெரிவித்தால், செய்தித் துறையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆசிரியர் தமது விளக்கத்தில் 5—2—1992 அன்று கோவை மாலை முரசு நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தியின் தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிவதாகவும், இனி மேல் இப்படி நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ள அப்பத்திரிகையின் செய்தித் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை. மேலும், தலைப்பு மிகைப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் பொள்ளாச்சி சந்திரசேகர் இளம்வழுதியின் கையில் அடித்தார் என்பது தான் உரிமைப் பிரச்சினையின் கருப் பொருளாகும். அதற்கான பதில் ஏதும் அப்பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வரப்பெறவில்லை.

அவருடைய பதிலின் மூன்றாவது பத்தியில் ''கொஞ்ச நாட்களாகவே இந்தப் பத்திரிகை சட்டமன்றச் செய்திகளைத் திரித்து வெளியிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதாகப் பல உறுப்பினர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று பேரவைத் தலைவர் 7—2—1992 அன்று பேரவையில் குறிப்பிட்டதைத் தெரிவித்து எந்தெந்தச் செய்திகள் அவர்கள் பத்திரிகையில் திரித்து வெளியிடப்பட்டன என்பதைத் தெரிவித்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்று ஆசிரியர் கேட்டுள்ளது அவர்கள் விளக்கம் அளிப்பதற்குப் பதிலாக பேரவைத் தலைவரையே விளக்கம் கேட்பது போல் உள்ளது.

தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இப்பத்திரிகை ஆசிரியரே ஒப்புக் கொண்டுள்ள நிலையில் அதற்காக வருத்தமோ மன்னிப்போ கோராது, அப்பத்திரிகையின் செய்தித் துறை இனிமேல் இவ்வாறு நிகழாது பார்த்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதென விளக்கம் அளித்துள்ளது பேரவையின் உரிமையைக் குறைத்து மதிப்பிட்டதாகவே கருதுகிறேன்.

எனவே, உரிமைப் பிரச்சினையின் முக்கியப் பகுதிக்குப் பதில் அளிக்காததும், ஏற்பட்ட தவறுக்கு வருத்தமோ மன்னிப்போ கோராமல் இருப்பதும், பேரவைத் தலைவர் அவர்களையே கேள்வி கேட்பது போல் பதில் அளித்திருப்பதுமான காரணங்களாலும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இதில் உரிமை மீறல் இருப்பதாகக் கருதுவதாலும், பேரவை விதி 226-ன் கீழ் விசாரித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. அறிக்கை அளித்தல்.

### மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 5-வது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. வரவு - செலவுத் திட்டம், 1992–93—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். இன்றைய தினம் உறுப்பினர்கள் பேசுவதற்கான கடைசி நாளாகும். நாளைய தினம் கட்சித் தலைவர்கள். அதையடுத்து எதிர்க் கட்சித் தலைவர், அதன் பின் நிதியமைச்சர் பதிலுரை என்பதற்காக ஒதுக்கப்பட்ட நாளாகும். எனவே இன்றைக்கு ஏறத்தாழ 20 உறுப்பினர்கள் பேசி முடிக்க வேண்டியுள்ளது. அதையும் கவனத்தில்கொண்டு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்கு எந்த வகையிலேயும் மேற்செல்லாமல் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. வி. தண்டாயுதபாணி.



முற்பகல் 10–45.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நல்ல முறையிலே சமர்ப்பித்து தமிழக மக்களுக்கு நல்ல முறையிலே பொருளாதார வளர்ச்சிக்கு வழிவிட்டிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே மாண்புமிகு டாக்டர் நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை மனதார நான் வரவேற்கிறேன். எவ்வளவு பேர், எத்தனை வசூல்கள் செய்தாலும் அவைகளுக்கெல்லாம் கணக்குக் காட்டாமல் போன காலம் உண்டு. ஆனால் இன்று புரட்சித் தலைவி அவர்கள் ஆலய நிர்வாகப் பாதுகாப்பிற்காக வசூல் செய்த பணத்திற்கு யார் கணக்குக் கேட்டாலும், கேட்கவில்லை என்று சொன்னாலும் தானாகவே அந்த கணக்கை அளித்து ஆலய நிர்வாகத்திற்கு ஒரு நல்ல வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக, 4, 5 மணி நேரம் இந்த கோட்டையிலே அமர்ந்து பொது மக்களுடைய குறைகளை எல்லாம் கேட்டு, இந்த பொதுமக்கள், எப்படி மனு நீதி சோழனுடைய வாயிலுக்கு முன்னாலே வாயில்லாத ஜீவன் வந்துகூட மனு கொடுத்த போது, அதற்கு நீதியை நிலை நாட்டினானோ, அதே போன்று நிலை நாட்டுவார்கள் புரட்சித் தலைவி அவர்கள் என்று சொல்லி இங்கே மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

அதோடு தன்னை எதிர்த்து தன்னை கொலை செய்ய முயற்சி செய்தவர்களை, லாரியை ஏற்றி கொலை செய்ய முயற்சி செய்தவர்களை நீங்கள் ஏன் தண்டிக்கவில்லை என்று சொல்லி போன மாமன்ற கூட்டத்திலே நான் கேட்ட போது அவர்கள் சொன்னார்கள், 'நான் மன்னித்து விடுகிறேன், மறந்து விடுகிறேன்' என்று சொல்லி, அதைக் கிளப்பினால் மீண்டும் சில அதிகாரிகளுடைய பதவி பறிபோகும், சில அரசியல்வாதிகள் அதிலே ஈடுபடுவார்கள் என்று சொல்லி, மறக்கின்ற, மன்னிக்கின்ற சுபாவம் கொண்ட தலைவிதான் புரட்சித் தலைவி அவர்கள். அது மட்டுமல்ல, ஏழைகளுக்கு இரங்குகின்ற குணத்தையும் உடையவர்கள். எடுத்துக்காட்டாக தன்னை அரசியலிலே இருந்து கூண்டோடு ஒழித்து விட வேண்டும், அழித்து விட வேண்டும் என்று நினைத்து கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்ட அரசியல் தலைவருடைய புதல்வருக்கே புகலிடம் கொடுத்து, ரூ. 5 இலட்சம் நிதி கொடுத்தவர்தான் புரட்சித் தலைவி அவர்கள். இதையெல்லாம் சொல்வதற்கு காரணம், தன்னை எதிர்த்தவர்கள் அது எந்த பக்கம் இருந்தாலும் சரி, அந்தப்

பக்கம் இருந்தாலும் சரி, இந்தப் பக்கம் இருந்தாலும் சரி, அந்தப் புறமாக இருந்தாலும் சரி, இந்தப் புறமாக இருந்தாலும் சரி, உரிமைக்குக் குரல் கொடுக்கின்ற தலைவியாகும். அதே நேரத்திலே உறவுக்குக் கை கொடுக்கின்ற தலைவி என்பதை கடந்த நாடாளுமன்ற வாக்கெடுப்பிலே அவர்கள் நிரூபித்து இருக்கின்றார்கள் என்று நான் இங்கே பட்டவர்த்தனமாகப் பாராட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு சேமிப்பு திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தினுடைய நிதி அமைச்சர் 80 சிசிஏ, 80 சிசிபி, 80 எல் என்கின்ற பிரிவு இன்கம் டாக்சிலே இருந்து யார் சிறு சேமிப்பு போடுகிறார்கள் அவர்களுக்கு உள்ள அந்த வரிச் சலுகையை எடுத்து இருக்கிறார்கள். இதனால் மாநில அரசாங்கத்தினுடைய நிதி சுமை பெரிதாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக சொல்லிக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே மத்திய அரசாங்கத்திற்கு, ஏற்கெனவே இன்கம் டாக்சிலே இருந்து எடுக்கப்பட்ட 'ஸ்மால் சேவிங்ஸ்'-லிருந்து எடுக்கப்பட்ட அந்த 'ரிலீப்ஃ'-ஐ மறுபடியும் கொண்டு வர வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டுமென்று சொல்லி, இந்த மாமன்றத்திலே அதை எடுத்து சொல்வதற்கு நான் பெரிதும் மகிழ்ச்சியோடு ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குள்ள சூழ்நிலையில் எந்த அளவிற்கு இந்த நிதி நிலை அறிக்கை நமக்கு நன்மை பயக்கிறது, என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நாம் இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். முதலாவதாக பாராட்டப்பட வேண்டியது, அது புலியாக இருந்தாலும் சரி, புலிகளுடைய பெயர் குயில்களாக மாறினாலும் சரி, குயில்கள், புலிகள் அல்லது கோட்டான்கள், எந்தப் பெயரிலே வந்தாலும் அதை சந்தித்து அடக்குகிற தைரியம் புரட்சித் தலைவி என்கின்ற சிங்கத்திற்கு உண்டு என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது அம்சத்திலேயும் சிங்கம்தான், நிர்வாகத்திலேயும் சிங்கம்தான் என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), அதற்குக் காரணம் அவர்கள் எடுத்த முன் முயற்சியின் காரணமாக இன்றைய தினம் மத்திய அரசாங்கம் தெளிவாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வோம் என்று சொல்லுகின்ற அளவுக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கின்ற ஒரு முக்கியமான அம்சம்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),



முற்பகல் 10-50

அதுமட்டுமல்ல, இன்றைக்குள்ள சூழ்நிலையில் ஓரிரு குறைபாடுகளையும் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன், புரட்சித் தலைவி அவர்கள் இலவச மருத்துவ முகாம் என்று சொல்லி, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்துவதற்கான திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால் இன்றைய தினம் வரவு—செலவுத் திட்டத்தினுடைய 74-வது பப்ளிகேஷனில், 9-வது பக்கத்திலே, எடுத்துப் பார்த்தால்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து இதை கவனத்திலே கொள்ள வேண்டும்.—மெடிக்கல் பட்டியலிலே, 1991-92 ஆம் ஆண்டு 35 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள், அது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டாக 36 கோடி ரூபாயாக வந்திருக்கிறது, போன வருடத்திலே 3.6 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால் இந்த வருடம் 34 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இலவச மருத்துவ முகாமை இப்படி குறைவான நிதியை வைத்துக் கொண்டு எப்படி நடத்த முடியும்? ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே இதற்காக நீங்கள் நிதியைப் பெருக்கித் தர வேண்டுமென்று இங்கே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை மாநகராட்சியை ''எழில்மிகு சென்னை மாநகர்'' ஆக மாற்றுவோம் என்று அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் சென்னை மாநகரம் 2000—எழில் மிகு சென்னை மாநகரம் 2 ஆயிரம் என்று சொல்கிறபோது இதிலே 400-வது பக்கத்திலே நீங்கள் ஒன்றைப் பார்க்கலாம். இந்தப் புத்தகத்தினுடைய 400-வது பக்கத்திலே ''நகராட்சி நகர்ப் பகுதி மேம்பாட்டு நிதிக்காக மாநகராட்சிக்கு நிதி உதவி''. முதலிலே 1991-92-லே 12 கோடி நிதி ஒதுக்கினார்கள். ஆனால் அது ரிவைஸ்ட் ஸ்கீம் ஆகி 6 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டது. ஆனால் இந்த வருடம் அது 5 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. 12 கோடி ரூபாயிலேயிருந்து, 6 கோடி ரூபாயாக மாறி, இப்போது அது 5 கோடி ரூபாயாக மாறியிருக்கிறபோது எப்படி சிங்காரச் சென்னையைக் கொண்டுவர முடியும்? ஆகவே. நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்வது இதனுடைய நிதி உதவியை நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதை உயர்த்திக் கொடுத்து சென்னை மாநகரத்தை அழகுபடுத்து வந்து முன்வர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கேயுள்ள நிதிநிலை ஆதாரங்கள் எனக்கும் தெரிவாகத் தெரிகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்தினுடைய நிதியமைச்சர் அங்கே பேசுகிற போது சொன்ன ஒரு வார்த்தையை இங்கே

[திரு. வி. தண்டாயுதபாணி] [1992 மார்ச் 12

குறிப்பிட ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே இன்டஸ்ட்ரியல் எக்ஸ்புளோசிவ்ஸ், டான்செம் மற்றும் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் வருடா வருடம் 40 கோடி ரூபாய்க்கு மேலே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த எக்ஸ்புளோசிவ்ஸ் 23 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்குகிறது. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் 8 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்குகிறது, டான்செம் 2 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்குகிறது. இவைகளை எல்லாம் பார்த்து தான் மத்திய அரசின் நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பாராளுமன்றத்திலே நிதி அமைச்சகத்தினுடைய பட்ஜெட்டை சமர்ப்பித்த போது பார்ட் ஏ-யிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார். அதை மட்டும் இங்கே நான் சொல்லி, உங்களுக்கு ஒரு ஆலோசனையைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

The disinvestment in Public Sector equity undertaken in the current year has been successfully completed. There is scope for continuing this process in 1992-93 with a view to raising non-inflationary resources for development. I am accordingly taking credit for a receipt of Rs. 2,500 crores from further disinvestment of equity holding in Public Sector enterprises. 2,500 கோடி ரூபாய்க்கு மேலே டிஸ்இன்வெஸ்ட்மென்ட் நான் செய்ய போகிறேன் என்று டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நாடாளுமன்றத்திலே நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறபோது சொல்லியுள்ளார்கள்.

முற்பகல் 10-55

அதுமட்டுமல்ல. 2,500 கோடி ரூபாயோடு மட்டும் அவர் நிற்கவில்லை, அதற்கு மேலே ஒருபடி போகிறார். In addition to this amount Government will consider a further sale of equity of Rs. 1,000 crores. 1,000 கோடி ரூபாய்க்கு மேலே நாங்கள் விற்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஆகவே புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் தைரியமாக மத்திய அரசாங்கத்தினுடைய நிதிக் கொள்கையைப் பின்பற்றுகிறேன் என்று சொல்கிறீர்கள், எனவே நீங்கள் துணிச்சலோடு டிஸ்இன்வெஸ்ட்மென்ட் ஸ்கீமை செய்ய வேண்டுமென்று நான் இங்கே மன்றாடக் கேட்டுக் கொள்கிறேன், அதுமட்டுமல்ல, ஒருவேளை உங்களுக்கு சிறு சேமிப்பிலே ஏதாவது கஷ்டங்கள் ஏற்பட்டாலோ அல்லது நிதி நிலைமையிலே உங்களுக்குப் பற்றாக்குறை வருமென்றாலோ தமிழ்நாட்டிலே ஒரு மியூச்சுவல் பண்ட் ஸ்கீம் ஏற்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டும். அப்படி மியூச்சுவல் பண்ட்டை ஏற்படுத்துகிற போது, தொழில் வரி கட்டுகின்றவர்கள், சொத்து வரி கட்டுகின்றவர்கள் 3 ஆயிரம்



1992 மார்ச் 12] [திரு. வி. தண்டாயுதபாணி]

ரூபாய் சொத்து வரி கட்ட வேண்டுமென்றால், 2,000 ரூபாய் சொத்து வரி கட்டிவிட்டு, ஆயிரம் ரூபாயை மியூச்சுவல் பண்ட் ஸ்கீமில் போட்டு, 4 வருடங்களுக்குப் பின்பு அதை எடுத்துக் கொள்ளலாமென்று சொன்னால், மத்திய அரசாங்கத்திடமோ, வேறு அரசாங்கத்திடமோ தமிழக அரசாங்கம் போய் நிதிக்குக் கையேந்த வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மியூச்சுவல் பண்ட் ஸ்கீமையும் நீங்கள் இங்கே கொண்டுவர வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் வரிகள் போடுவதும், வரிகளை வசூலிப்பதும் ஒரு பக்கம் இருந்தாலும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன், அத்தியாவசியப் பண்டங்களுக்கான வரியைக் குறைக்க வேண்டும், இதிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், கடலைப் பருப்புக்கும் வரி. கடலை எண்ணெய்க்கும் வரி, இரண்டுக்கும் எப்படி வரி போட முடியும்? ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இதைக் கவனித்துப் பார்த்து கடலை எண்ணெய்க்கும், கடலைக்கும் உள்ள வரியைக் குறைக்க வேண்டும். என்றைக்கும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு கன்னியாகுமரியிலே அரிசியின் விலை குறைந்திருக்கிறது, மற்ற இடங்களிலும் விலை குறைய வேண்டும், மிளகாய்க்கான வரியைக் குறையுங்கள். பருப்பின் மீதான வரியைக் குறையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை எல்லாம் நான் சொல்லிக் கொண்டு வரும்போது, இன்றைக்குள்ள சூழ்நிலையிலே இந்த அரசாங்கம் மிகத் தெளிவாக, தைரியமாக இருந்து செயலாற்றி, தமிழ்நாடு நிச்சயமாக இந்தியாவிலேயே தலை சிறந்து விளங்குகின்றது என்கின்ற ஒரு நியதியைக் கொண்டு வர வேண்டுமென்று நான் அன்போடு இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம். நான்மறை படித்தவர்கள். நான்கு மறை படித்தவர்கள் பெரியவர்களா அல்லது "நான்" மறையைப் படித்தவர்கள் பெரியவர்களா என்று கேட்கிறபோது. 4 வேதங்களைப் படித்தவர்களைக் காட்டிலும். "நான்" என்ற அகங்காரம் இல்லாமல் இருக்கும் புரட்சித் தலைவி அவர்கள் தான் பெரியவர்கள் என்று தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி), அதே நேரத்தில் இன்றைக்கு ஒரு சின்ன செய்தி. அதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. அதை யார் செய்திருந்தாலும் அது தவறான செயல்தான். தினகரன் பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருக்கிறது, எம்.ஜி.ஆர். சிலையைப் பார்த்து காந்தியினுடைய சிலை கண்ணீர் என்று செய்தி வந்திருக்கிறது, சூளைமேடு பகுதியிலே நடந்திருக்கிறது. அதைத் தயவு செய்து விசாரித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், பல வருடங்களாக அங்கே இருந்த காந்தி சிலையை அகற்றிவிட்டு, புரட்சித் தலைவர் அவர்களுடைய சிலையை வைத்திருக்கிறார்கள் என்கின்ற செய்தி

[திரு. வி. தண்டாயுபாணி] [1992 மார்ச் 12

வைத்திருக்கின்றது, அதை அரசாங்கம் தயவு செய்து உன்னிப்பாகப் பார்த்து, காந்தி சிலையை மீண்டும் அங்கே நிறுவுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுக்கு நல்வாழ்வு அளிக்குமென்று சொல்லி, இதை வரவேற்று அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு.

முற்பகல் 11-00

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த சோஷலிச சமுதாய பட்ஜெட்டினை பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், எங்கள் குடும்பங்களின் காவல் தெய்வம், புனிதத் தாய் டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு நான் முற்படுகிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தில், குறிப்பாக ஒரு பொற்கால ஆட்சியை புரட்சித் தலைவி நடாத்தி வருகிறார்கள். தமிழகத்தை இன்றைய தினம் இந்தியத் திருநாட்டிலேயே சிறந்த மாநிலமாக முன்னோடி மாநிலமாக புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். அந்த இனிய தலைவியின் ஆட்சி, தொழில் துறையானாலும் மற்ற சமுதாயத்திலே ஏழை எளியவர்களானாலும் மேம்பாடு அடையச்செய்வதற்கு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறது. இந்த நல்ல அரசு பல்வேறு நலப் பணிகளை தமிழகத்திற்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் ஆற்றி வருவதோடு மட்டுமல்லாமல், சிறந்ததொரு நிதிநிலை அறிக்கையைத் தமிழகத்தின் மாமன்றத்தில் சமர்ப்பித்து இருப்பதை மனமார நான் வரவேற்று, இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவி அரசு ஏழை எளியவர்களுக்காகவும், சமுதாயத்திலே அடித்தளத்திலே ஏங்கிக் கிடக்கின்ற ஏழை எளியவர்களுக்கு வாழ்வு தருகின்ற நல்ல திட்டங்களை எல்லாம் புரட்சித் தலைவி அரசு செய்திருக்கிறது. எனவே புரட்சித் தலைவியினுடைய அரசை, நாங்கள் எல்லாம் அடித்தளத்திலே இருந்து உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்தால், உளமாறப் பாராட்டுவதிலும், போற்றுவதிலும், வாழ்த்துவதிலும் கடமைப்பட்டவனாகக் கருதுகிறேன்.

இன்றைய தினம் தமிழகத்திலே 'தடா' பற்றியும் புரட்சித் தலைவி பற்றியும் சில நக்கீரர்கள் விமர்சித்துப் பேசி வருகிறார்கள். அரைவேக்காட்டு அரசியல்வாதி [illegible]



1992 மார்ச் 12] [கி. இராஜன் பாபு என்கிற தணிகைபாபு]

கண்ணன் புரட்சித் தலைவியை விமர்சிக்கிறபோது தரக்குறைவான முறையில் விமர்சித்து பேசி வருகிறார். அவர்களுக்கு எல்லாம் நாங்கள் எச்சரிக்கை விடுக்கிறோம். தமிழகத்திலே இரண்டு ஆண்டுகாலமாக நடந்த இருண்ட ஆட்சியில் ஆயுத கலாச்சாரம் பரிமாறப்பட்டு இந்தியாவிலிருந்து எங்கே தமிழகம் பிரிந்து விடுகிறதோ என்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை இருந்தது. அந்தச் சூழ்நிலையை மாற்றி தமிழகம் இந்தியத் திருநாட்டோடு இருக்கும் அமைதியான ஒரு சூழ்நிலையை தமிழகத்திலே ஏற்படுத்தி, சிறந்ததொரு மாநிலமாக ஆக்கிய புரட்சித் தலைவியை இந்த மாமன்றத்திலேயே மானபங்கப் படுத்தி அவருடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஏற்பாடுகளையெல்லாம் கடந்த கால அரசு செய்தது. ஆனால் இந்த நிலைமைகளையெல்லாம் புரட்சித் தலைவி அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஜனநாயகத்திற்கு, குறிப்பாக இந்திய அரசியல் நெறிமுறைகளைப் பின்பற்றி மாற்றியது. ஜனநாயக வழிமுறைகளோடு இன்றைய தினம் தமிழக அரசியலில் புரட்சித் தலைவி ஜனநாயகத்தை மீட்டு களங்கப்பட்டிருந்த இந்த மாமன்றத்தை புனிதப்படுத்தி, ஜனநாயகநெறிமுறையோடு ஆண்டு வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே அந்த இனிய தலைவியை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. எனவே அந்த அரைவேக்காட்டு அரசியல்வாதி, சிறந்த ஒரு ஆட்சியை, ஜனநாயக முறையில் நடத்துகிற புனிதத் தாய், புரட்சித் தலைவியைப் பார்த்து வயிற்றெரிச்சலோடும், * * எந்தவிதக் குற்றமும் குறையும் காண முடியவில்லையே என்பதற்காக நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக புழுதிவாரித் தூற்றி வருகிறார்கள். குறிப்பாக சிறந்ததொரு முறையில் இன்றையதினம் உலகளாவிய அளவில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிற மகாமகம் திருவிழாவை கோலாகலமான முறையில் தமிழகத்தில் நடத்தி முடித்திருக்கிறார்கள். அந்தத் திருவிழாவை மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அவர்கள் ஏறத்தாழ அரசுடைய 80 லட்சம் ரூபாயைச் செலவிட்டும், அந்த நகராட்சி ஒன்றரை லட்சம் செலவிட்டும், ஆக ஏறக்குறைய 1 கோடி ரூபாய் செலவிட்டு சிறந்தததொரு மகாமகத்தை நடத்தி, அங்கே வந்த பக்தர்களை எல்லாம் பாதுகாத்து அமைச்சர்களை அங்கே நேரடியாகப் பொறுப்பை ஏற்கச் செய்து, காவல் துறை உயர் அதிகாரிகளை காவல் பொறுப்புக்கு அமர்த்தி, சிறந்த முறையில் அங்கே அந்த நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு] [1992 மார்ச் 12

ஆனால் ஒரு சிலர் புரட்சித்தலைவி மீது வேண்டுமென்றே புழுதிவாரித் தூற்றுவதற்காக ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்துவிட்டது என்பதற்காக புரட்சித் தலைவியை குறை சொல்லிக்கொண்டு பேசுவதுஎன்பது இனிய தலைவியை, புரட்சித் தலைவியை களங்கப் படுத்துகிற உள்நோக்கோடு பேசுகிற பேச்சு தான். இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே ஆலயப் பாதுகாப்பு என்று ஒரு நிதியை உருவாக்கி தமிழகத்திலே இருக்கிற நலிந்த திருக்கோயில்களும் இந்துமத சம்பிரதாயங்கள், இந்துமத ஆகமங்கள் எல்லாம் போதிய பாதுகாப்போடு இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் வாரியத்தை உருவாக்கி அதனுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று இன்றைய தினம் சீரோடும் சிறப்போடும் செயல்படுகிறார்கள். அந்த ஆலயத் திருப்பணிகள் மூலமாக தமிழகத்தில் இருக்கிற திருக்கோயில்கள் செம்மைப்படுத்தப்பட்டு புனிதப்படுத்தப்பட்டு, சிறந்த முறையில் தமிழகத்தின் ஆலய நிர்வாகம் நடந்து வருகிறது என்று சொன்னால் அது புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் என்று சொன்னால் அது மிகையாகாது.

முற்பகல் 11-05

அந்த இனிய தலைவி இன்றைய தினம் நல்லதொரு நற்பணியை இந்த நாட்டுக்கு ஆற்றி வருகிறார். அந்த நல்ல தலைவியை இந்த நாட்டுமக்கள், ஏழையெளியவர்கள், படித்தவர்கள், பண்பாளர்கள், சமுதாயத்தில் உள்ள அடித்தள மக்கள் பாராட்டியும், பேசியும் வருகிறார்கள். அந்த இனிய தலைவியினுடைய புகழ் இன்றைய தினம் வானளாவிய அளவிற்கு உயர்ந்திருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் வாழ்கின்ற கால கட்டத்திலே, புரட்சித் தலைவி தமிழகத்திலே இருக்கின்ற கால கட்டம் வரை இந்த நாட்டினுடைய ஏகோபித்த முதலமைச்சர் புரட்சித் தலைவிதான் என்று சொல்லி தமிழகத்திலேயுள்ள மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே அந்த இனிய தலைவியை எந்தக் கொம்பனாலும் ஒன்றும் செய்ய முடியாது என்ற அளவிலே இன்றைய தினம் சிறந்ததொரு ஆட்சியை தமிழகத்திலே புரட்சித் தலைவி அவர்கள் நடத்தி வருகிறார்கள். அந்த இனிய தலைவியினுடைய ஆட்சியை தமிழகத்திலே உள்ள கோடானு கோடி மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே காழ்ப்புணர்வு கொண்ட அரசியல்வாதிகளைப் பற்றி எங்களுக்கு எந்தவிதமான ஐயமும், * * கிடையாது. புரட்சித் தலைவி இந்த நாட்டினுடைய மிகப் பெரிய உன்னதத் தலைவியாக, உலகத்தினுடைய தலைவியாக இருந்து கொண்டிருக்கிறார். தமிழ் மக்களுடைய பாதுகாப்புத் தலைவியாக நின்று கொண்டிருக்கிற அந்த

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 மார்ச் 12] [கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு]

நல்ல தலைவியின் வழியில் இந்த மாமன்றம் என்றென்றும் வழி நடக்கும் என்ற அடிப்படையில் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்ல முற்படுகிறேன்.

குறிப்பாக என்னுடைய திருத்தணி நகரம் இன்றைய தினம் மிகப் பெரிய திருத்தலங்களில் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. ஐந்தாவது படை வீடு என்று நினைக்கிறேன். முருகனுடைய திருத்தலம். திருத்தணியில் குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்த திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் சார்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான கடம்பத்தூர் ஒன்றியத்தில் கூவம் மற்றும் கொப்பூர் ஆகிய இரண்டு இடங்களில் அரசு உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்காக வேண்டிய இடங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, மக்களிடம் நிதியும் திரட்டப்பட்டு அங்கே நன்கொடையும் கட்டப்பட்டிருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளிகளை உடனடியாக இந்த நிதியாண்டிலேயே துவக்க ஆவன செய்யுமாறு பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி இன்றைய தினம் மிகவும் பின்னடைந்த தொகுதியாக இருக்கிறது. எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத தொகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த மாமன்றத்தின் வாயிலாக புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். சென்னை சாலையிலே அருங்குளம் என்ற மேட்டுப் பகுதியிலே, சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு மரியாதைக்குரிய நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்களால் அடிக்கல்கூட நாட்டப்பட்டது. ஆனால் அந்த இடத்திலேயிருந்து அந்த சர்க்கரை ஆலை அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே திருத்தணி மக்கள் எல்லாம் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே ஒரு காகித ஆலையையாவது அல்லது சிமெண்ட ஆலையையாவது அமைத்து எங்கள் தொகுதி மக்களுக்கு நல்லதொரு வழியைக் காட்ட வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் தணிகைபாபு அவர்கள் பேசும்போது எந்தவிதமான

ஐயமும் என்று சொல்லி, அதற்கடுத்து வந்த ஒரு சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து திரு. கே. முனி வெங்கடப்பன்.

திரு. கே. முனி வெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தரத் தலைவர், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், என்னை இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த நான் வணங்கும் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி, புரட்சித் தலைவியின் பொற்பாதங்களை வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்று சொன்ன தி.மு.க. அரசு * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் வீண் விவாதத்திற்கு வழி வகுக்காமல் நேரிடையாக பேச வேண்டியதைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : இருப்பதைத்தான் சொல்லுகிறேன், நடந்ததைத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேசிய அந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : அந்த மாதிரி இக்கட்டான சூழ்நிலையில் தமிழகத்தை மீட்டு இன்றைக்கு அந்தக் 'கஜானாவையும், களஞ்சியத்தையும் இங்கே கொண்டு வந்து அரியதொரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த எங்கள் நல்ல தலைவி, புரட்சித் தலைவிக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த பட்ஜெட்டைப் பற்றிக் கூறும்போது அவர்கள் இதை அரைவேக்காட்டு பட்ஜெட் என்று கூறுகிறார்கள். ஒன்றை மட்டும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கேயுள்ள டாக்டர்களுக்குத் தெரியும். மஞ்கள் காமாலை பிடித்தவன் கண்களுக்கு எதைப் பார்த்தாலும் மஞ்களாகத்தான் தெரியும். இதைப் போன்று பல அரைவேக்காட்டு பட்ஜெட்டுகளை

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



சமர்ப்பித்த அவர்கள், இந்த அரைவேக்காடு தமிழகத்திற்குத் தேவையில்லை என்று மக்கள் ஒதுக்கிய பிறகு, அவர்கள் இன்று கூறுகிறார்கள் அரைவேக்காடு நிதிநிலை அறிக்கை என்று. இதை எந்த வகையிலே ஏற்றுக்கொள்ள முடியும்? இதற்குப் பதில் அடி கொடுக்க தமிழக மக்கள் இன்றைக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்ததொரு நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு நமது தானைத் தலைவி அவர்கள் அர்ப்பணித்து இருக்கின்றார்கள். வளர்ச்சி நிலைக்கு வழி கோலுவதா அல்லது தேக்க நிலையிலே நிற்பதா என்ற இக்கட்டான நிலையிலே இருந்து, வளர்ச்சி நிலைக்கு தமிழகத்தை சீரிய முறையிலே கொண்டு செல்லும் வகையிலே நல்லதொரு நிதிநிலை அறிக்கையை நமது நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்து இருப்பது வரவேற்கத்தக்கது. காவல் துறைக்கு இன்றைக்கு நவீன ஆயுதங்கள் கொடுத்து, அவர்களுக்கு வீடு கட்ட வாரியத்தையும் புதுப்பித்து இருப்பது பாராட்டத்தக்கது.

முற்பகல் 11-10

எத்தனையோ பெண்கள் வாழ்க்கையிலே வருமானம் இல்லாமல் வறுமையில் வாடி தங்களையே மாய்த்துக்கொண்டிருந்த காலம் போய், இன்றைக்கு எப்படி ஒரு ஆண்மகன் தனது குடும்பத்தை வருமானம் ஈட்டி காப்பாற்றுகிறானோ அதேபோல் ஒரு பெண்ணும் வருமானம் ஈட்டி குழந்தைகளையும் கணவனையும் காப்பாற்றும் வகையிலே பெண்கள் தங்களுடைய வாழ்க்கையிலே சம்பாதிக்கும் ஒரு நிலையை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் அரசிலே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வகை செய்யும் வகையிலே டேனிடா நிதி உதவியுடன் வேளாண்மையில் பெண்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டமும், மேலும் ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை கொடுக்கும் திட்டமும் அறிவித்து இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இன்றைக்கு தமிழகத்திலே பள்ளிகள் வளரவேண்டும், கல்வி வளர வேண்டும் என்று நினைக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் 200 புதிய ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்க இருப்பதும், அதே மாதிரி 1,400 இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க இருப்பதும், 20 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல்நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்க இருப்பதும் உண்மையிலேயே பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. 7 மாவட்டங்களில் முழு அளவில் கல்வி அறிவு படைக்கும் திட்டம் இந்த ஆண்டு வர இருப்பதும் வரவேற்கத்தக்கது. இதைத்தான் கல்வியிலே சிறந்த நாடு நம் பாரத நாடு என்று கூறிய கனவுக் கவிஞர் பாரதியார் கண்ட

[திரு. கே. முனிவெங்கடப்பன்] [1992 மார்ச் 12

கனவை நனவாக்கும் ஒரு புதுமைப் பெண் அரசியாக இன்றைக்கு நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டு இத்தகைய வகையிலே கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். (மணி அடிக்கப்பெற்றது).

இந்திய நாட்டிலுள்ள பல மாநிலங்களுக்கு நாம் எத்தனையோ பல நல்ல வழிகளைக் காட்டி இருக்கின்றோம், அந்த வகையிலேதான் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற தத்துவத்தை நிரூபிக்கும் வகையிலே நமது புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவநலத் திட்டத்தை துவக்கி ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற ஏழை எளியவர்களின் பிணியைப் போக்க வகை செய்து இருப்பதும் பாராட்டத்தக்கது,

தொழில்கள் நிறைந்த மாநிலமாக நமது மாநிலத்தை ஆக்க, தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலே பெரிய தொழில் மையம் அமைய இருப்பதற்காக எனது மாவட்ட மக்கள் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாயம் வளர வேண்டும்; விவசாயிகள் இந்த நாட்டிலே வளர வேண்டும் என்பதற்காக இன்றைக்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்க இருப்பதும், 40 ஆயிரம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க இருப்பதும் இந்தியாவிலேயே வேறு எங்கேயும் இல்லாத ஒரு மிகப் பெரிய சாதனையாகும். உண்மையிலேயே இது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது, போற்றத்தக்கதாகும்,

மேலும் நகரங்கள் வளர வேண்டும் என்பதற்காக, நகர வளர்ச்சியிலே ஆர்வம் கொண்டு, பல நகரங்களுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ஒதுக்கி இருப்பது பாராட்டத்தக்கது. என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதிக்கும் ஒரு கோடியே 20 இலட்சம் ஒதுக்கி இருப்பதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

அதே போன்று இன்றைக்கு எத்தனையோ நல்ல பல திட்டங்களைக் கொடுத்திருப்பதுபோல், உணவுப் பண்டங்களுக்கு வரிச் சலுகைகளையும் கொடுத்து, மக்கள் மீது வரிச் சுமையை சுமத்தாமல் இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது.

மேலும் இன்றைக்கு ஒகேனக்கல்லில் என்னுடைய மாவட்ட மக்கள் இதுவரை மங்கிக் கொண்டிருந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்து



1992 மார்ச் 12] [திரு. கே. முனிவெங்கடப்பன்]

இருப்பது எங்கள் மாவட்ட மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது. அதற்காக எனது மாவட்ட மக்கள் சார்பாக இந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை வரவேற்று நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன், (மணி அடிக்கப்பெற்றது,)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள், டாக்டர் தே. குமாரதாஸ்.

முற்பகல் 11-15

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா தளத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் சரி, அல்லது வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் சரி இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிற நேரத்தில் சில குறைகளை இங்கே என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது,

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் இது ஒரு கானல் நீராகக் காட்சி அளிக்கிறது. இங்கே நிதியமைச்சர் அவர்கள் போட்டிருக்கிற வரிகள் அத்தனையும் ஒட்டுமொத்தமாக கிராமப்புற மக்களைப் பழிவாங்குகிற விதத்தில் அமைந்திருக்கின்றன என்ற கருத்தை இங்கே என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. அது மட்டுமல்லாமல் அமைச்சர் அவர்களுக்கு கோதுமை மீது ஒரு தனிப்பாசம் என்றே சொல்ல வேண்டும், கோதுமையை பொடித்தாலோ, உடைத்தாலோ அதற்குத்தனியாக வரியைப் போட்டிருக்கிற சூழ்நிலையையும். கோதுமை உருமாறுவதை ஏற்றுக் கொள்ளாத ஒரு சூழ்நிலையையும் இந்த வரியில் காணமுடிகிறது. ரவைக்கு வரி, மைதாமாவுக்கு வரி, ரொட்டிக்கு வரி, ஆனால் கோதுமைக்கு வரி இல்லையென்ற விதத்தில் பட்ஜெட்டை இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள், மூலப் பொருளுக்கு வரி இல்லை, அதை உடைத்தாலோ, பொடித்தாலோ வரி என்றால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல 619 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் என்று சொல்கிறார்கள், இந்த 619 கோடி ரூபாயை ஒன்று நீங்கள் வரியாக திணித்தாக வேண்டும், அல்லது அறிவிக்கப்பட்ட திட்டங்களில் சிலவற்றை நிறைவேற்றாமல் இருக்க வேண்டும். இதில் எதை நீங்கள் மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பது எங்களுக்கு தெரிந்தாக வேண்டும்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1992 மார்ச் 12

அதைப்போல உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி இந்த
பட்ஜெட்டில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே, உள்
ளாட்சித் தேர்தலை நடத்த மாட்டார்களோ என்ற ஐயம்
மக்களுக்கு எழுகிறது. உள்ளாட்சியைப் பொறுத்தவரையில்
45 காசு என்று விதிக்கப்பட்ட ஒன்று, இன்றைக்கு ஒரு
ரூபாய் என்ற விதத்தில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்
னால் கிட்டத்தட்ட 115 சதவீதம் இதை உயர்த்தி இருக்கிறார்
கள். எனவே, ஊரகப் பகுதிகளில், கிராமங்களில் வாழ்கிற நடுத்
தர மக்களுக்கு ஒட்டுமொத்தமாக இந்த வரிச்சுமையை சுமத்தி
யிருப்பதை நான் கோடிட்டு காட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து தொழில் வரியைப் பற்றி குற்றிப்பிட்டிருக்கி
றார்கள். அதிலே கிட்டத்தட்ட எட்டு இனங்களை குறிப்
பிட்டுள்ளார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம்.
எல்லாவற்றையும் சொன்னால் நேரமாகி விடும். 5,000
ரூபாய் முதல் 7,500 ரூபாய் வரைக்கும் ஊதியம் பெறு
பவர்களுக்கு 300 ரூபாயாக இருந்த வரி 450 ரூபாயாக
உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் 50 சதவீதம்
உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் ரூபாய் 15,000-க்கு மேல்
வருகிறபோது 900 ரூபாய் வரியாக இருப்பது 990 ரூபாய்
என்று உயர்த்தி இருக்கிறார்கள். அப்படியென்றால்
ரூ. 15,000-க்கு மேல் அதிகமாக ஊதியம் வாங்குபவர்களுக்கு
வரி வீதத்தை நீங்கள் கூட்டியிருக்க வேண்டுமா, குறைக்க
வேண்டுமா? எனவே எந்த நிலையில் அந்த வரியை போட்
டிருக்கிறார்கள். என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிய
வில்லை.

இன்றைய தினம் இங்கே நம்முடைய பட்ஜெட்டிலே
சொல்கிற நேரத்தில் ஏழையெளிய மக்கள் நோய்வாய்ப்பட்டிருந்
தால் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று, அவர்கள்
அரசிடம் மனு செய்வார்கள் என்றால் 15,000 ரூபாய்
கொடுப்பதாக ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறீர்கள்.
அந்தத் திட்டத்தின் நோக்கம் நன்றாக இருக்குமென்றாலும்,
அதை நடைமுறைப்படுத்த முடியுமா, சாத்தியக் கூறுதானா
என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும்
இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இலட்சக்கணக்கான
மக்கள் ரெஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். அவர்கள் தனி
யார் மருத்துவமனைக்கு செல்கிறபோது 15,000 ரூபாய்
கோரி மனு செய்கிற எல்லோருக்கும் கொடுக்கப் போகி
றீர்களா? அல்லது ஆண்டொன்றுக்கு இத்தனை பேருக்கு
தான் கொடுக்கப் போகிறோம் என்று வழிமுறையை வைக்கப்
போகிறீர்களா? இதை விடுத்து சிலபல கிராமங்களில் நக
ரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகள் இருக்கின்றன.
மெடிக்கல் கல்லூரி இல்லாத முக்கியமான நகரமாகத் தேர்ந்



1992 மார்ச் 12] [டாக்டர் தே. குமாரதாஸ்]

தெடுத்து, எல்லா எக்குவிப்மெண்ட்ஸ் உள்ள மருத்துவமனை
யாக செய்து இந்தப் பணத்தை அதிலே முதலீடு செய்
வீர்களானால் எல்லா தரப்பு மக்களுக்கும் அது பயனளிப்ப
தாக இருக்கும். எனவே, இந்தத் திட்டத்தையும் நீங்கள்
மறு பரிசீலனை செய்ய வேண்டும். இதிலே போகஸ் செய்ய
நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு தனியார் மருத்துவ
மனைக்கு போய், அந்த டாக்டரிடம் இவர் இருதய நோயாளி,
இவருக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று சர்டி
பிகேட் வாங்கிக் கொடுத்தால், அதை பேஸ் செய்து நீங்கள்
பணம் கொடுப்பதாகச் சொன்னால், அரசாங்கமே திவா
லாகிவிடும் என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு
வருகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தையும் நீங்கள்
மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

வரிச்சலுகைகளைப் பார்க்கிறபோது கிராம்புக்கு வரி
தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். நம்முடைய மாநிலத்தில்
எல்லோருடைய வீட்டிலும் கிராம்பு அத்தியாவசியப் பொரு
ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா? கன்னியாகுமரி
மாவட்டத்தில் உற்பத்தியாகும் கிராம்பு உலகத்திலேயே
தரம் உயர்ந்த கிராம்பாக இருந்து வருகிறது. இதில் ஆறு
விதமான குவாலிட்டி, தரவகைகள் இருக்கின்றன. முக்கிய
மாக 1, 2, 3 தரங்களுக்கு நீங்கள் வரியை அதிகப்படுத்தி
யாக வேண்டும். ஏனென்றால் அவற்றை இங்கே யாரும்
வாங்கி பயன்படுத்துவது கிடையாது. நீங்கள் நாகர்கோவிலில்
ஒரு சென்சஸ் எடுத்து பார்ப்பீர்களானால் எல்லா
லாட்ஜ்களிலும் ராஜஸ்தானிலிருந்து வந்த கோடீஸ்வரர்கள்
பணங்களை கட்டி வைத்துக் கொண்டு கிராம்பு பர்சேஸ்
செய்வதற்காக வந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த மாவட்
டத்தில் விளையக் கூடிய கிட்டத்தட்ட 2 ஆயிரம் டன்னுக்கும்
அதிகமான கிராம்புகளை ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த
வர்கள், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வாங்கிச் செல்
கிறார்கள். ஆகவே, அதற்கு நீங்கள் வரி விலக்கு அளிப்
பதன் மூலம், வட மாநிலத்தைச் சேர்ந்த கோடீஸ்வரர்கள்
தான் மீண்டும் பெரிய கோடீஸ்வரர்களாக ஆக முடியுமே
அல்லாமல், ஏழைகளுக்கு பயன் உள்ள விதத்தில் இது அமை
யாது. எனவே நீங்கள் இந்த கிராம்புக்கு மாத்திரம் மறு
பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கிறேன்,

முற்பகல் 11-20

அதேபோல், அரசினுடைய திட்டங்கள் சிலவற்றைப்
பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர
கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக, பிற்படுத்தப்பட்

டோர், தாழ்த்தப்பட்டோர் அரசுப் பணியில் சேரவேண்டும் என்று சொன்னால், வயது வரம்பு என்று ஒன்று கிடையாது. அவர்கள் எந்த நேரத்திலும் பணியிலே சேர்ந்து கொள்ளலாம். ஆனால், அரசினுடைய நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரக்கூடிய கார்ப்பரேசன்களில் பணியாற்றுகிறவர்களுக்கு குறைந்த பட்சம் 35 வயதுதான் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்து அமல்படுத்தி வருகிறார்கள். இதை நீங்கள் மாற்றித் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கழிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் பேசுகின்ற போது. தாய் பத்திரிகையில், விஸ்வகர்மா சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை மிக இழிவாகப் பேசி விட்டார்கள் என்று ஒரு குற்றச்சாட்டினை இங்கே எடுத்துரைத்தேன். மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மதுரையிலே 56 விஸ்வகர்மா சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது, அதை 'வித்—டிரா' செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூரல் ரோட்ஸ், ஆர்.ஆர். ரோட்சினுடைய டி.இ. அலுவலகம் இங்கே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதை அங்கிருந்து மாற்ற வேண்டும் என்று அரசு முயற்சிப்பதாக நான் அறிகிறேன். காரணம் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், குறைந்த பட்சம் 3 கோடி ரூபாய்க்கான வேலைகள் அந்தப் பகுதியிலே நடைபெறவேண்டும். ஆனால், அங்கே $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குத் தான் வேலைகள் நடைபெறுகின்றன. எனவே அதை மாற்ற வேண்டும் என்று சொல்கிறார்கள். பணம் கொடுக்காதது அரசினுடைய தவறேயல்லாமல், அங்கேயிருக்கிற அலுவலகத்தினுடைய தவறு அல்ல. எனவே, அரசு அதிகமாகப் பணம் ஒதுக்கீடு செய்து, அதை அங்கிருந்து மாற்றக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கழிந்த முறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் 400 கோடி ரூபாய்க்கான ரப்பர் தொழிற்சாலையைத் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில், ஒரு காசு கூட அதற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதைப்பற்றி இங்கே குறிப்பிடவில்லை. எனவே, உடனடியாக, கன்னியாகுமரி மாவட்டத்



திற்கு அந்த ரப்பர் தொழிற்சாலையைத் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தையும், நெல்லை மாவட்டத்தையும் இணைக்கின்ற விதத்தில், 800 ஏக்கரை அரசு எடுத்துக் கொண்டு, சிப்காட் நிறுவனத்தின் சார்பாக, அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருந்தார்கள். ஆனால், தற்சமயம் அது தேக்க நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ராதாபுரம் தொகுதியும், கன்னியாகுமரி பகுதியும், பயன்படுகின்ற விதத்தில், அமைந்திருக்கின்ற அந்தத் திட்டத்தை அரசு மீண்டும் உடனடியாகச் செயல்படுத்த முன்வரவேண்டும் என்று நான கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல். கன்னியாகுமரி மாவட்டத்தில், திருப்பதிசாரம் என்கிற பகுதியில் அரசு விவசாயப் பண்ணை இயங்கி வருகிறது. அந்த வகையில் விவசாயப் பண்ணையை விவசாயக் கல்லூரியாக மாற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுத்து அதை மாற்றித் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கிள்ளியூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில், கூத்தரையாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கிற ஒரு திட்டத்திற்கு அரசு $4\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்து விட்டது. அந்தத் திட்டத்தின் மொத்த எஸ்டிமேட்டே, $4\frac{1}{2}$ கோடி ரூபாய்தான். $4\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்தும் அது செயல்படாமல் இருக்கிறது. கேட்டால், இன்னும் 25 லட்சம் ரூபாய் இல்லாத காரணத்தாலே செயல்படுத்த முடியவில்லை என்கிறார்கள். கிட்டத்தட்ட 90 சதவீதத்திற்கும் அதிகமான ரூபாய்களை செலவிட்டும் அந்தத் திட்டம் பழுது அடைந்திருக்கிறது. உடனடியாக இதை நீங்கள் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்திடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், கடற்கரைச் சாலைகளை இணைக்கின்ற விதத்தில் கணபதியான்கடவு பகுதியில் ஒரு பாலத்தை அமைத்துத் தந்திடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக புரபஷனல் கோர்ஸஸ் படிக்கின்ற கல்லூரிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கே மருத்துவக் கல்லூரியோ, என்ஜினியரிங் கல்லூரியோ, விவசாயக் கல்லூரியோ, சட்டக் கல்லூரியோ கிடையாது. எனவே, இவைகளில் ஏதாவது ஒன்றைத் தொடங்க

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகப் பணம் ஒதுக்கீடு இல்லாத சட்டக் கல்லூரியையாவது. அங்கே அமைத்துத் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, இணையம்புத்தம்துறை, ராமன்துறை, பகுதியில் தூண்டில் வளைவு ஒன்றை அமைத்திடவேண்டும் என்ற கோரிக்கை வெகுகாலமாக இருந்து வருகிறது. அதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அரசு குறிப்பிட்டு இருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையில் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்று விபத்தின் காரணமாக அவர்கள் காணாமல் போனாலோ இறந்துவிட்டாலோ அவர்களுக்கு 21 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். அதேபோல் பனை ஏறுகின்ற தொழிலாளர்களுக்கும் நீங்கள் கொடுத்து உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே இன்னும் ஒன்று, தென்னை மரத்திலே ஏறி தேங்காய் வெட்டப் போய் அங்கேயிருந்து தவறி விழுந்தால் அவர்களுக்குக் கிடையாது என்று சொல்கிறார்கள். எனவே பனை ஏறுகின்ற தொழிலாளர்களுக்கும் இது கொடுக்கப்படவேண்டும். தென்னை மரம் ஏறுகின்றவர்களானாலும் சரி அவர்களுக்கும் இந்த உதவித் தொகை கொடுக்கப்படவேண்டும்,

இப்போது கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் மற்றப் பகுதிகளிலேயும், புளிய மரத்திலே ஏறி, புளியம்பழம் பறிக்கிற சீசன் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த மரத்திலே ஏறினாலும், கொடுக்க வேண்டும் என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டால் நல்லது.

டாக்டர் தே, குமாரதாஸ் : அதேபோல், கட்டிடத் தொழிலாளர்கள் தவறி விழுந்தாலும். அவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். இதிலே பனை ஏறுகிற தொழிலாளர்களுக்கு ஒரு தொகை, நெசவுத் தொழிலாளர்களுக்கு ஒரு தொகை, கடலிலே மீன்பிடிக்கிற தொழிலாளர்களுக்கு ஒரு தொகை என்று இப்படி உயிருக்கு உயிர் வித்தியாசப்படுத்தி நீங்கள் தொகைகளைக் கொடுக்காமல் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக, விபத்தில் காலமாகி விட்டால் இவ்வளவு தொகை என்று எல்லோருக்கும் ஒரேமாதிரியாக தொகையை நிர்ணயித்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



முற்பகல் 11-25

அதே போன்று சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நம்முடைய அரசானாலும் சரி, மத்திய அரசானாலும் சரி, திட்டங்களை நிறைவேற்றி, டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன் மூலமாக பணத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே டிக் மேனேஜர் ரெக்கமண்ட் பண்ணி வங்கிகளுக்குப் போனால் பணம் இல்லையென்றும் செக்யூரிட்டி கொடுங்கள் என்றும் சொல்லி, பணத்தை கொடுப்பதில்லை. ஆக போகின்றவர்களை உதாசீனப்படுத்துகின்ற அரசினுடைய கொள்கையை உதாசீனப்படுத்துகின்ற வங்கிகளின் மீது நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நெசவாளர்களைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய அமைச்சரவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். பஸ் கட்டணங்கள் உயர்ந்து விட்டது என்று சொன்னால், ஆந்திராவிலே இந்த பஸ் கட்டணம் இருக்கிறது. கர்நாடகத்திலே இந்த பஸ் கட்டணம் இருக்கிறது என்றெல்லாம் உதாரணம் காட்டுவார்கள். அதே போன்று இங்கேயும் நான் உதாரணம் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நெசவாளர்கள் என்று சொல்லி நூலுக்கு அங்கே வரி விதிக்கின்ற சூழ்நிலை இல்லை. இங்கே வாங்குவதற்கு 2 சதவீத வரி போடுகிறார்கள். விற்பதற்கும் போடுகிறார்கள். ஆகவே நெசவாளர்கள் பல விதங்களில் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு 2 சதவீத வரியை மாத்திரம் வைத்துக்கோண்டு, பர்சேஸ் வரியை நீக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டில் கரும்பினுடைய பிரச்சினை இன்றைக்கு பெரிதாகிக் கொண்டிருக்கிறது. ஆந்திராவிலே ரூ. 380-ம், கர்நாடகாவிலே சுமார் ரூ. 360-ம் ஒரு டன்னிற்குக் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் ரூ. 310 தான் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கே பர்சேஸ் டாக்ஸ் என்று சொல்லி ஒரு டன்னிற்கு ரூ. 74 என்று வரி விதிக்கிறோம். ஆனால் ஆந்திராவிலும் சரி, கர்நாடகத்திலும் சரி, 30 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கிறது. எனவே தமிழ்நாட்டில் கரும்பினுடைய விலையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அந்த 74 ரூபாய் என்பதைக் குறைத்துத் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு தாலுக்காக்கள் உள்ளன. அதிலே இரண்டு தாலுக்காக்களை தொழில் வளத்தில் முன்னேற்றி விட்டதாகச் சொல்கிறார்கள் விளவங்கோடு, கல்குளம் ஆகிய இரண்டு தாலுக்காக்களும்

தொழில் துறையில் முன்னேறி விட்டன, அகத்தீஸ்வரம், தோவாளை, ஆகிய இரண்டும் தாழ்வு நிலையில் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். காரணம் கேட்டால் சொல்கிறார்கள், அங்கே முந்திரித் தொழிற் சாலைகள் அதிகமாக இருக்கின்றன; எனவே தனி நபர் வருமானம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதைத் தொழில் துறையில் முன்னேறிய தாலுக்காக்களாகக் கருதுகின்றோம் என்கிறார்கள். அப்படியல்ல. அதன் மூலம் பயன் பெறுகின்றவர்கள் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே அந்த இரண்டு தாலுக்காக்களையும் கூட, தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிக்க வேண்டுமென்று நான் மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன், ஒரே நிமிடத்தில்.

அதே போன்று நம்முடைய மறைந்த முன்னாள் முதல்வர், மரியாதைக்குரிய டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலே பெண்களுக்கென துவக்கப்பட்ட அன்னை தெரசா பல்கலைக் கழகம் இப்போது கொடைக்கானலிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. (குறுக்கிடு) மாற்றியதைப் பற்றி பிரச்சினைக்கு வரவில்லை நான் ஆக மாற்றப்பட்டிருக்கிறது எனவே மீண்டும் அதை கொடைக்கானல் பகுதிக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு....(குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்;

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : டீடெய்ல்ஸ் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும் என்பதற்காக நான் கேட்கிறேன். எப்போது மாற்றப்பட்டது? ஏன் மாற்றினார்கள் என்று தெரிந்தால் சொல்லுங்களேன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் முற்பட்ட பகுதியில்தான் மாற்றப்பட்டிருக்கக்கூடும். அதுகரெக்ட் தானே.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரொம்ப சவுகர்யமாக காலத்தை அவர்கள் வேண்டுவது போல எடுத்துக் கொள்ளக் கூடாது. சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோது அந்த நேரத்தில், இங்கே யாரோ முதலமைச்சராக இருந்தபோது மாற்றி இருக்கிறார்கள். அதை எப்போது என்று சொன்னால் நன்றாக இருக்கும்.



<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலேதான் இந்த பல்கலைக் கழகம் அங்கே அமைக்கப்பட்டது. நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத நேரத்தில்தான் அது அங்கிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. நான் இல்லை என்பது தான் பிரச்சினையே தவிர, எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இல்லையென்று நான் சொல்லவில்லை. எனவே அன்னை தெரசா யுனிவர்சிடியினுடைய அனெக்ஸ் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வருகிறது. அதையும் அங்கிருந்து மாற்றுவதற்கான முயற்சிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நான் அறிகிறேன். எனவே அதை அங்கிருந்து மாற்றக்கூடாது என மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவி வருகிறது. நானும் ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயும் அதை அழுத்தமாக எடுத்துச் சொல்லி வருகிறேன். அந்த யானைக்கால் நோயை தடுத்து நிறுத்துவதற்காக அரசு தனியாக போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தப் பகுதியில் யானைக்கால் நோயைத் தடுந்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : முடியுங்கள் சார். இன்னும் மானியக் கோரிக்கையில் நீங்கள் கண்டிப்பாகப் பேசத்தான் போகிறீர்கள். தொகுதிப் பிரச்சினையை பற்றி அதில் பேசுங்கள்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : அதைப்போல இந்த கும்பகோணத்தில் நடந்த ஒரு கொடிய நிகழ்ச்சி.... (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இது நீதி விசாரணையில் இருக்கிறது. இதைப்பற்றி நீங்கள் பேச நான் அனுமதிக்க மாட்டேன். நேற்றே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது இந்த அவையிலே நீங்களும் இருந்தீர்கள். (குறுக்கீடு) நீங்கள் இல்லையென்றால் இப்போது தெரிந்து கொள்ளுங்கள். அது இப்போது வேண்டாம். நீதி விசாரணையில் இருக்கிறது. இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம். எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டு, கடைசியில் வேண்டுமென்றே சொல்ல வருகிறீர்கள். இது நல்லதல்ல. (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. திரு. ரங்கநாதன் அவர்கள். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் அவர்கள் பேசுகிற எந்தப் பேச்சும் அவைக் குறிப்பில் ஏறாது.

[1992 மார்ச் 12

முற்பகல் 11–30

*திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி யைக் கூறிக்கொண்டு, 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று இங்கே கருத்துக்களை கூறுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். இங்கே வரவு–செலவு திட்டத்தை அறிவித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல திட்டத்தை தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு குறிப்பாக ஏழைகளுக்கு பயன் படுகிற விதத்தில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்துள்ளார்கள். அதே நேரத்தில் இந்த வரவு–செலவு திட்டத்தில், ஏறத்தாழ 94 பக்கங்களை புரட்டிப் பார்க்கிற நேரத்தில், இதிலே பல நல்ல திட் டங்கள் பல துறைகளிலே பல இனங்களிலே இருக்கிறபோது அவற்றைப் பார்க்காமல், இந்த வரவு–செலவுத் திட்டத்தை குறை சொல்லி வெளியே இருக்கிற கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் அறிக்கை விட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப் பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் இந்த அவையின் மரபு மாண்பு களை உணர்ந்தவர். அடுத்த உறுப்பினர் பேசத் தொடங்கிய வுடன் நீங்கள் மீண்டும் நின்றுகொண்டு இவ்வாறு விதண்டா வாதம் பேசுவது சரியல்ல. நீங்கள் பேசுகிற எதுவும் அவைக்குறிப் பில் ஏறாது. தயவுசெய்து அமருங்கள். இன்னும் உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. முன்வரிசை யிலே இருக்கிறீர்கள். தயவுசெய்து அமருங்கள். தொடர்ந்து திரு. ரங்கநாதன் அவர்கள் பேசுவார்கள்.

திரு. ப. ரங்கநாதன்: இந்த நிதிநிலை அறிக்கையிலே, காவல் துறை புனர் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் 80 கோடி ரூபாயை மானியமாக கேட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கடந்த நிதி ஆண்டிலே 10 கோடி ரூபாயை இதற்காக மைய அரசு நிதியாக வழங்கி யுள்ளது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குமார தாஸ் அவர்கள், எதைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தாலும் உங் களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்தில் சுட்டிக்காட்டியிருக்க வேண் டும். உங்களுக்குத் தரப்பட்ட நேரம் முடிந்து விட்டது. இனியும் அவையின் நேரத்தை நீங்கள் வீணாக்குவது முறையல்ல, சரியும் அல்ல என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் தயவுசெய்து அமர வேண்டும். தொடர்ந்து திரு. ரங்கநாதன் அவர்கள் பேசு வா.ர்



1992 மார்ச் 12]

திரு. ப. ரங்கநாதன்: இந்த நிதி ஆண்டிலேயும் அந்தத் தொகையை மத்திய அரசு வழங்கி விடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் பெண்களுக்காகவும், கருவுற்ற பெண்களுக்காகவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டிய மைக்காகவும் நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் அண்மையிலே மாவட்டங்களில் கோயில் வாரியங்களை நியமித்தீர்கள். அந்த வாரியங்களில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்து நியமித்திருந்தால் அது நன்றாக இருந்திருக்கும். காரணம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்களும் உங்களோடு இணைந்து தோழமைக் கட்சியாக இருக்கிற இந்த நேரத்திலே, நீங்கள் உங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களை மட்டும் அந்தக் கோயில் வாரியங்களிலே நியமித்து இருக்கிறீர்கள் என்று பார்க்கிறபோது நாங்கள் மன வருத்தப் படுகிறோம். அதை இந்த அரசு மாற்றி அந்தக் கோவில் வாரி யக் குழுக்களிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப் பினர்களையும் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட் டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சிங்காரம், உங்களுடைய கட்சி உறுப்பினர் தான் பேசிக் கொண்டிருக்கிறார். திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் பேசுகிறபோது, கோவில் அறங்காவலர் குழுவில் காங்கிரஸ்காரர்களை சேர்க்கவில்லை, காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்தவர்களையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (குறுக்கீடு) ஒவ்வொரு மாவட்டத்திலும் சேர்க்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இரண்டுபேரை இந்த அரசு—மாற்றான் தோட்டத்து மல்லிகைக் கும் மணம் உண்டு என்கிற அளவிலே (மேசையைத் தட் டும் ஒலி) நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்னையும், நம்முடைய அருமை நண்பர் தண்டாயுதபாணி அவர்களையும் சேர்த்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று. இதுவரையில் கடந்த ஆட்சிக் காலங்களில் எந்த ஒரு ஆட்சியும் மாற்றுக் கட்சிகளுக்கு இந்தக் குழுவை போட வில்லை.! (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இந்த முறை தான் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எங் களை நியமித்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு பேர்களை நியமித்தது அந்தத் தோழமை உணர்வை வலுப்படுத்தத்தான். அந்த அடையாளத்திற்காகத்தான் நியமித்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டாம். ஏனென்றால் நாங்கள் இரண்டு பேரும் காங்கிரஸ்காரர்கள்தான். காங்கிரஸ்காரர்களைப் போடவில்லை என்று சொல்வதற்காகத்தான் நான் சொன்னேன். மணிசங்கர் அய்யர் எம்.பி. ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். மூன்று பேரை போட்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஏதாவது புதிதாகச் சொல்ல வேண்டுமா? திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சிங்காரம் அவர்கள் சொன்னதுபோல் 3 பேர்களை நியமித்ததற்கு நாங்கள் நன்றி தெரிவித்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்து நீங்கள் அறங்காவலர் குழுவில் நியமிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய கோரிக்கை என்பதைத் தெரிவித்து இந்த கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னையும் ஒரு குழுவிலே போட வேண்டும் என்று ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் எதிர்பார்ப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அதை அரசு பரிசீலனை செய்து ஏற்ற முடிவை எடுக்கலாம். ஆனால் இதே போன்று மத்திய அரசிலே அமைக்கப்படுகின்ற பல்வேறு குழுக்கள், பல்வேறு அமைப்புகள், பல சமயங்களிலே வெளிநாட்டுக்கு தூதுக்குழு அனுப்புகிறார்கள். பல சமயங்களிலே அம்பாசிடர்களை நியமிக்கிறார்கள். இவைகளில் எல்லாம்,—கவர்னரை நியமிப்பது போன்ற நிலைமைகளில் எல்லாம் தோழமைக் கட்சியாக இருக்கின்ற எங்களுக்காவது ஒரு மரியாதை கொடுத்து கலந்து எங்களது உறுப்பினர்களையும் போடுவார்களானால் அதைப்போல பத்து மடங்கு கௌரவத்தை எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் தருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்வதற்குக் காரணம் எங்களுக்கு அதுமாதிரி ஒரு அந்தஸ்து வேண்டும் என்கிற அளவிலே மட்டும் அல்ல. மத்திய அரசு





என்பது நமக்குப் புறம்பானதான ஒரு அரசு என்கின்ற உணர்வு ஒவ்வொரு மாநிலத்திலேயும் இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காகவும் நல்லதொரு தேசிய ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பதற்காகவும், பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்ற மாநில அரசுகளை மதிப்பதன் மூலமாகத்தான் நாம் இதைச் செய்து காட்ட முடியும். உண்மையான ஃபெடரலிஸம் என்பதே மாநில அரசுகளை சமமாக மதிப்பதில்தான் இருக்கிறது என்பது அரசியலிலே ஒரு தேர்ந்த முடிவாகும். அந்த அடிப்படையிலே மத்திய அரசு ஒரு நல்ல கூட்டாட்சியை நல்லதொரு ஒருமைப்பாட்டை பாதுகாக்க இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நாங்கள் பிரதிபலிக்கின்றோம். எங்களுடைய உணர்வை மத்திய அரசு செயல்படுத்துமா என்பதை நாங்கள் எதிர்காலத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேச அனுமதிக்கப்படவில்லை. திரு. ரங்கநாதன் அவர்கள் தொடர்ந்து பேசுவார்.

திரு. ப. ரங்கநாதன் : துணைத்தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சிங்காரம் அவர்கள் நான் பேசுவதை புரிந்துகொள்ளாமல் அவர் குறுக்கீடு செய்தார். (குறுக்கீடு) உட்காருங்கள். இல்லை, இல்லை அப்படிச் சொல்லவே இல்லை. அதாவது தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் . . . . . . . . . . . .

திரு. ஆர். சிங்காரம் : காங்கிரஸ்காரர்களைப் போடவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ப. ரங்கநாதன் : இல்லை, அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு ரங்கநாதன் அவர்கள் உறுப்பினரோடு நேரடியாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். இங்கே அவைத் தலைவரைப் பார்த்து பேச வேண்டும்.

திரு. ப. ரங்கநாதன் : அவர் தவறாகப் புரிந்துக்கொண்டார் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தந்த மாவட்டங்களிலே வாரியங்களில் சேர்க்க வேண்டுமென்றுதான் குறிப்பிட்டேன். மாவட்ட அளவில் போடுகின்ற வாரியங்களில் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அங்கத்தினர்களாக போடவேண்டும் என்று தான் நான் குறிப்பிட்டேனே ஒழிய நான் இவரைப்

[திரு. ப. ரங்கநாதன்] [1992 மார்ச் 12

போட்டார்கள், அவரைப் போட்டார்கள் என்று பெயரைச் சொல்லி இங்கே குறிப்பிடவில்லை என்பதையும் தெளிவுபடுத்து கிறேன்.

அடுத்து , மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது, மத்திய அரசின் குழுக்களிலே நாங்கள் தோழமைக் கட்சியாக இருந்தாலும் எங்களை நியமிக்கவில்லை என்று குறிப் பிட்டார். கவர்னராக நியமிக்கவில்லை என்று குறிப்பிட்டார். எனக்கு நேரம் நீங்கள் கொடுத்து இருப்பது 7 நிமிடம் நீங்கள் 20 நிமிடம் கொடுத்தால் எந்தெந்த இடங்களில் உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அங்கே குழுக்களிலே நியமித் திருக்கிறார்கள்; தலைவர்களாகப் போட்டிருக்கிறார்கள் என் பதை நான் வருடத்தைக் கணக்கிட்டு, தேதியைக் கணக்கிட்டுச் சொல்ல முடியும். ஆகவே அநதப் பிரச்சினையை ஒதுக்கிவிட்டு நான் சொல்வது மாவட்ட கோவில் வாரியங்களில் அனைத்து உறுப்பினர்களையும் சேர்த்துப் போட்டால் நன்றாக இருக்கும் என்று தான் இங்கே குறிப்பிட்டேன்.

முற்பகல் 11-40

அடுத்து காவல் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழகத்திலே உள்ள ஒருசில காவல் துறை அதிகாரிகள் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத் தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர் களை இந்த அரசில் பொறுப்பில் இருக்கின்றவர்கள் அடக்கவேண்டுமென்றும், தட்டிக் கேட்கவேண்டுமென்றும் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். குறிப்பாக சென்னை நகரத்தில் இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள், ஒரு சில அதிகாரிகள் கடந்த ஆட்சிக் காலத்தில் பொறுப்புக்கு வந்த வர்கள். ஆகவே அவர்கள் அந்த ஆட்சி நண்பர்களுக்கு விசுவாச மாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறை மூத்த அதிகாரி ஒருவர், மாவட்டச் செயலாளர் போல் பணியாற்றியவர், இன்று அவரும் சென்னை நகரத்திற்கு திரும்ப வந்து இப்போது மூத்த அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த அரசு ஒரு சட்டத்தைப் போட்டு அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். தவறினால் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க அவர்கள் முயற்சிப்பார்கள் என்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல் மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாநக ராட்சிக்கு உடனடியாக தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதி களை மாநகராட்சி மன்றத்திலே அமரச் செய்ய வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில்லே கூறிக்கொள்கிறேன். காரணம் சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டு ஏறத்தாழ



1992 மார்ச் 12] [திரு. ப. ரங்கநாதன்]

20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அங்கே மாநகராட்சி மன்றத் தேர்தல் நடக்காமல் அதிகாரிகளின் பொறுப்பில் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே ஆளுங்கட்சி உறுப் பினர் திரு. பாலன் அவர்கள் பேசுகின்றபோது சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள தெருக்கள் குண்டும் குழியுமாக இருப்பதாகவும், நெருக்கடியாக இருப்பதாகவும் அந்த தெருக்களை எல்லாம் சீர்படுத்த மாநகராட்சி அதிகாரிகளை அணுகிக் கேட்டால் நிதி ஆதாரம் இல்லை என்று அந்த அதி காரிகள் கூறுகிறார்கள் என்றும் அவர் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டார். இதே நிலை தான் சென்னை நகரத்தில் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள் கிறேன்.

'எழில்மிகு சென்னை 2000' என்பதை நல்லமுறையில் நடை முறைப்படுத்தவேண்டும் என்றால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த சென்னை மாநகராட்சிக்கு சென்னை நகரத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை உடனடியாக நியமித்தால் மாநகராட்சிப் பணிகள் திறம்பட நடக்கும், நல்லமுறையில் நிறைவேறும் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது.)

அதேபோல் கடந்த பருவமழை நேரத்தில் சென்னை நக ரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக நிதியுதவி வழங் கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மழை பெய்தவுடன் வெள்ளத்தால் முழுமையாக பாதிக்கப் பட்ட வீடுகளுக்கு 600 ரூபாய் வழங்கப்படும் என்றும், குறை வாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 300 ரூபாய் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த 300 ரூபாயும் முழு மையாக வழங்கப்படவில்லை; அந்த 600 ரூபாயும் முழுமை யாக வழங்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் சென்னை நகர மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் அடிக்கடி மாலை நேரங்களில் குறிப்பாக மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரை தொலைக் காட்சியைப் பார்க்கின்ற நேரத்தில் மின் தடங்கல் ஏற்படுகிறது. அதைப் போக்குவதற்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு திட்டத்தைப் போட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அதேபோல் சென்னை நகரத்திலுள்ள உணவுப் பொருள் வழங்கு துறை, சிந்தாமணி, சிவில் சப்ளைஸ், மற்றும் கூட் டுறவுத் துறையால் நிர்வகிக்கப்படுகின்ற கடைகளில் நடக்கின்ற

[திரு. ப. ரங்கநாதன்] [1992 மார்ச் 12

தவறுகளைக் கண்டுபிடித்து அங்கே தவறு செய்கின்ற கட்சிக் காரர்கள், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அல்லது உள்ளூர் ரவுடிகளாக இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களை தண்டிக்கின்ற வகையில் அவர்கள் மீது மிசா போன்ற கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தமிழக அரசை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எம். ஜி. சேகர்.

திரு. எம். ஜி. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய 1992-93-ஆம் ஆண்டுக்கான சிறப்பான வரவு செலவு திட்டத்தின் மீது பேசு கின்ற நல்வாய்ப்பினை நல்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் பேசுகின்றபோது இந்த நிதிநிலை அறிக்கை கானல் நீராகத் தெரிவதாக சுட்டிக் காட்டினார்கள். பாவம் அவருக்கு அப்படித்தான் தெரியும். தமிழ்நாட்டில் மட்டும் அல்ல இந்திய துணைக் கண்டம் எங்கும் ஒன்றிரண்டு அங்கொன்று இங்கொன்றுமாக ஒரு சில தலை வர்களைத் தவிர தொண்டர்களே இல்லாமல் வறண்டு கிடக் கின்ற, பாலைவனமாகக் இருக்கின்ற ஜனதா கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர் களுக்கு................

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியா பூராவும் பரவி இருக் கிறதா ? (குறுக்கீடுகள்) நீங்கள் எங்களை குறை சொல்ல லாமா ? (குறுக்கீடுகள்).

திரு. எம். ஜி. சேகர் : எனவே, பாலைவனத்தில் நின்று கொண்டு பார்த்தால் அவருக்கு பூஞ்சோலைகளோ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.



163173 600 008.

1992 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஜனதா தளத்திற்கு இருக்கிற ஆதரவைவிட கர்நாடகத்திலே எங்களுக்குக் கொஞ்சம் அதிகம் இருக்கிறது. அங்கே தலைவர் சிலர்களும் ஒரு எம்.எல்.ஏ.-உம் இருக்கிறார்கள். நீங்கள் இங்கே ஒரு எம்.எல்.ஏ-தானே உட்கார்ந்து கொண்டிருக் கிறீர்கள்.

திரு. எம். ஜி. சேகர் : எனவே, பாலைவனத்தில் நின்று கொண்டு பார்த்தால் பூஞ்சோலைகளோ, அங்கு பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களோ, பொங்கியோடும் நீருற்று களோ கண்ணுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அங்கே கானல் நீர்தான் தெரியும். இங்கே பூஞ்சோலையாக, புதுப்புது வண்ண மலர்களை இணைத்து இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புரட்சிகரமான நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள்.

அமைதி குலைந்து, அல்லல்பட்டுக் கிடந்த தமிழ்நாட்டில் விடியல் வருமா என ஏங்கிய தமிழகத்திற்கு விடிவெள்ளியாய் புரட்சித் தலைவி அவர்கள் தோன்றி, தாய்க்குலத்தின் தலை மகளாய் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினை இன்று ஆண்டு கொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறிய நேரம், பயங்கர வாதத்துக்கும் பிரிவினை வாதத்துக்கும் ஒரு சவாலாக அமைந்தது ஒருபுறம் இருப்பினும் அரசின் கருவூலம் முற்றிலும் கடந்த கால களப்பிரர்கள் ஆட்சியில் களவாடப் பட்டது என்ற உண்மையை நாம் மறந்துவிட முடியாது. சமு தாயத்தையே பாழாக்கிய மலிவு விலை மதுக் கடைகளைக் கொண்டு வந்து தமிழ்நாட்டை முற்றிலும் சுரண்டியதால் தமிழர் நலம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது அவர்களால். இந்த காலகட்டத்தில் சட்டம் அமைதியை நிலைநாட்ட வேண்டிய இன்றியமையா கடமை ஒருபுறம் ; நெருக்கடியான நிதிநிலைமை மற்றொரு புறம். இந்த இக்கட்டான சூழ் நிலையில் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் திறமையாக சமா ளித்து நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கே தந்து இருக் கின்றார்கள். ஏழையெளிய மக்கள், வேளாண்மைப் பெருங்குடி மக்கள், தொழிலாள தோழர்கள், புதிய தொழில் முனைவோர் கள், வியாபாரிகள், அரசுப் பணியாளர்கள் ஆகியோர் ஒட்டு மொத்தமாகப் பாராட்டுகின்ற நிதிநிலை அறிக்கையாக இந்த அறிக்கை இருக்கிறது. இங்கே மன்றத்திலே பேசிய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள்கூட, கண் மைக்கும், கவரிங் நகைகளுக்கும் வரிச்சலுகை அளித்து பெண்மைக்கு சலுகை காட்டுகின்ற புரட்சித் தலைவி அவர்களின் செயலைப் பாராட்டி, ஆண்மைக்கும் சலுகைகளை வழங்கவேண்டுமென்று

வேண்டுகோள் விடுத்தார்கள். கண் மைக்கும், கவரிங் நகைகளுக்கும் மட்டுமல்ல, அதற்கும் மேலாக, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடனேயே தான் கையெழுத்திட்ட முதல் கோப்பிலேயே தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு 400 கோடி ரூபாய் என்றாலும் கூட அதைப்பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படாமல் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்த, அந்தக் கண்ணீருக்கு விடைகொடுத்த ஆட்சி புரட்சித் தலைவியினுடைய ஆட்சி என்பதை நாம் மறந்து விட முடியாது.

பயங்கரவாதிகளின் கையில் சிக்குண்டு தவித்த தமிழகத்தை காப்பாற்ற தன் உயிரையே பணயம் வைத்துக் கொண்டு, மாவீரன் அலெக்ஸாண்டரைப்போல, அஞ்சா நெஞ்சன் நெப்போலியனைப் போல இன்றைக்கு அஞ்சாமைக்கு எடுத்துக் காட்டாக புரட்சித் தலைவி அவர்கள் ஆண்மைக்குரிய வீரத்துடன் தமிழ்நாட்டை இன்றையதினம் ஆண்டு கொண்டு இருக்கிறார்கள்.

நேற்றைக்குக்கூட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது சுட்டிக் காட்டினார்கள். தமிழ்நாட்டில், கொலை, கொள்ளைகள் பெருகி வருவதாக அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அவர்களுக்கு ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே அமரர் ராஜீவ்காந்தி அவர்கள் மறைந்தபோது இருந்த நிலைமைகளையும் அதற்குப் பின்னால் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டை ஆளுகின்றபோது, அவருடைய உயிருக்கு எந்த அளவுக்கு குறி வைக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமைகளையெல்லாம் உணர்ந்தும், அந்த பயங்கரவாதத்தையெல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருக்கின்ற கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் எந்த அளவுக்கு படுகொலைக்கு ஆளானார்கள் என்பதையும் அதை அங்கே இருக்கின்ற கர்நாடக அரசு அல்லது பங்காரப்பா அரசு, அதை மத்தியிலே இருக்கிற காங்கிரஸ் அரசு அனுமதித்து இருப்பது நியாயந்தானா என்பதையும் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில், மைய அரசுக்கு, அமரர் ராஜீவ்காந்தியினுடைய காங்கிரஸ் அரசுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமேயானால் முதலும் இறுதியுமாக அதைக் காப்பாற்றுகின்ற, ஆதரிக்கின்ற அரசுதான் புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.



அதேபோன்று தமிழகத்தினுடைய தலையாய பிரச்சினையாக இருப்பது காவிரி நீர்ப் பிரச்சினை. இதற்காக, பிரதமர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலே புரட்சித் தலைவி அவர்கள் கலந்துகொண்டு தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். தமிழகத்திற்கு உரிய நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லி, அங்கே உரிமையை நிலைநாட்டினார்கள்.

முற்பகல் 11-50

அதுமட்டுமல்ல, மாநிலங்களுக்கு மைய அரசு கொடுக்கின்ற அந்த நிதியானது சரியான முறையில் தமிழகத்திற்கு வழங்கப்படாமல், அங்கே ஒதுக்கப்படாமல் இருந்த கால கட்டத்தில் தமிழகத்திற்கு உரிய நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று மைய அரசை எதிர்த்து போர்வாளைச் சுழற்றி உரிமைக் குரல் கொடுத்து இன்றைக்கு உரிய நிதியைப் பெற்றுத் தந்த ஆண்மையுள்ள அரசுதான் இந்தப் புரட்சித் தலைவி அரசாகும். (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> செல்வி கோ. மல்லிகா.

<u>செல்வி கோ. மல்லிகா :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழிப்புடன் இருந்து, தெளிவுடன் அறிவுரைகள் கூறி, துணிந்து செயல்படும் பண்பு நலனைக் கொண்ட என் அன்பு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, அவர்கள் தலைமையின் கீழ் அமைந்துள்ள அரசின் 1992–93 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதை முதற்கண் வரவேற்க விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் உதவியாக இருக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுவதோடு, என்னுடைய சில கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், நடப்பாண்டில் அரிசி உற்பத்தியில் ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தியும் இதற்கு முன்னால் இருந்திராத வகையில் பெருகியுள்ளது மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாக உள்ளது.

நாட்டில் சமையல் எண்ணெய் பற்றாக்குறையாக இருப்பதால் பாமாயிலை அந்நியச் செலவாணியைப் பயன்படுத்தி

[செல்வி கோ. மல்லிகா] [1992 மார்ச் 12

நாம் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இந்நிலையைத் தவிர்க்க எண்ணெய் தரும் பனை மரங்களை வளர்க்கத் திட்டம் இடப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

என்னுடைய புவனகிரி தொகுதியில் உள்ள பரங்கிப் பேட்டை கடற்கரைப் பகுதியாக உள்ளதால் சாமியார் பேட்டை, புதுக்குப்பம், குமாரபேட்டை போன்ற பகுதிகளில் இத்தகைய எண்ணெய் தரும் பனை மரங்களை அதிக மாக வளர்க்க அரசு முன் வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்தில் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான முறையில் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதைத் தமிழக மக்கள் அனைவரும் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

பாசனத்தைப் பொறுத்தவரையில் ஐரோப்பிய பொரு ளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், ஏரிகளை நவீனமய மாக்கும் பணிகள் தமிழகம் முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. புவனகிரி தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய ஓரிரு பாசனத் திட்டங்களைப் பற்றிக் கூற விரும்பு கிறேன். என்னுடைய தொகுதியில் முடசல் ஓடை கிராமத் தின் அருகில் உள்ள மணல் மேட்டை அகற்றி முகத்துவாரத்தை ஆழப்படுத்தினால் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் வெள்ளாற்றின் மூலம் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அண்மையில் ஏற்பட்ட பெருமழையின் காரணமாக மணல் மேடு சற்றுக் குறைந்துள்ள காரணத்தால் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசுக்கு அதிகச் செலவு இருக்காது என்பதால் இதுகுறித்து பொதுப் பணித் துறை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல, புவனகிரி தொகுதியில் பாசிமுத்தான் ஓடையிலிருந்து வீணாக வெள்ளாற்றில் கலக் கின்ற நீரைத் தடுக்க ஒரு ரெகுலேட்டர் கட்டினால் கீழ அனுவம்பட்டு ஊராட்சிப் பகுதியில் 5,000 ஏக்கரா விவசாய நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்பு உள்ளது. இதுகுறித்து அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல, கொள்ளிடம் வாய்க்கால் பகுதி யில் ஊற்று நீர் அதிக அளவு கிடைத்து தற்போது கடலில் கலந்து வீணாகி வருகிறது. இதனை கான்சாகிப் வாய்க்கால் வழியாகத் திருப்பி விடுவதன் மூலம் 20,000 ஏக்கரா தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாறுவதற்கு வாய்ப்பு உள் ளது. இதுகுறித்து அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



1992 மார்ச் 12] [செல்வி கோ. மல்லிகா]

காட்டு வளம் நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டால், நீர் வளம், நில வளம் நாட்டில் மேம்பாடு அடைய வாய்ப்பு உள்ளது என்பதை உணர்ந்து அரசு பல திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. சமூகக் காடுகள் வளர்ப் புத் திட்டத்தில், தென்னார்க்காடு மாவட்டத்தில் நல்லமுறை யில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த நிதிநிலை அறிக்கை யில் புதிய ரகக் காகிதக் கூழ் மரங்களை 75,000 ஏக்கரில் வளர்க்கும் திட்டத்தை அறிவித்திருப்பது மகிழ்ச்சியை அளிக் கிறது, என்னுடைய புவனகிரி தொகுதியில் மூட்லூர், எறும் பூர், வளையமாதேவி ஆகிய பகுதிகளில் இத்தகைய மரங்களை வளர்க்க சாத்தியக் கூறுகள் இருப்பதால் புதிய ரகக் காகிதக் கூழ்மரங்களை அந்தப் பகுதிகளில் வளர்க்க அரசு முன் வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் வேளாண்மைக்குப் பெரும் துணை புரிந்து வருகின்ற கால்நடைச் செல்வங்களைப் பாதுகாக்க ரூபாய் 1.25 கோடி செலவில் 400 கால்நடை மருந்தகங்களை ஏற் படுத்த இருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். தமிழகத் தில் செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டத்தின் பணிகள் சிறப் பாக நடைபெற்று வருகின்றன. என்னுடைய புவனகிரி தொகுதியில் செம்மறியாடுகளை வளர்ப்பதற்கு வசதி வாய்ப் புகள் இருப்பதால் இத்திட்டத்தை புவனகிரி தொகுதியிலும் நிறைவேற்றித் தர அரசு முன் வர வேண்டுமென்று பணி வோடு கேட்டுக் கொள்கிறேன்.

கடலை நம்பி வாழ்ந்துவரும் மீனவர்களைப் காப்பாற்ற வும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும் இறால் வளர்ப்புப் பண்ணைகளுக்கும், புதிய ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனளத் திட்டத்திற்கும் முறையே ரூபாய் 7.2 கோடி, ரூபாய் 15.88 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பது ஏழை எளிய மீனவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் திட்டங்களாக அமைந்துள்ளன. கடலில் இறக்க நேரிடும் மீனவர்கள் குடும்பத்திற்கு, குடும்ப ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த தொகை ரூ. 15,000 இனி ரூ. 21,000 என உயர்த்தப்படும் என்பதையும் மீன்பிடித் தொழிலில் வரு மானம் இல்லாத காலங்களில், மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை, மாதம் ஒன்றுக்கு ரூ. 60 என்றிருந் தது, ரூ. 270 ஆக உயர்த்தப்படும் என்பதையும் மீனவ சமு தாய மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். (மணியடிக்கப் பெற்றது)

முற்பகல் 11-55

என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில் 7 மாவட்டங்களில் முழு அளவு எழுத்தறிவுத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று

இந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. இதில் என்னுடைய தென்னாற்காடு மாவட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்காக அரசுக்கு என் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு மக்கள் கல்வியறிவு பெறுவதுடன் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் 5 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பொது நூலகம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு சிறப்பான ஒன்றாகும். இத்திட்டம், தமிழகத்தை கல்வியில் சிறந்த மாநிலமாக மாற்றும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில், கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி சென்று சேர வேண்டுமென்ற எண்ணத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மருத்துவ நலத் திட்டம், நமது நாட்டில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாதவகையில், தோற்றுவிக்கப்பட்டுள்ளது, வரவேற்கத்தக்கதாகும். தமிழக மக்களின்மீது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுள்ள நல்ல அக்கறையை வெளிப்படுத்துவதாக இது அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இத்திட்டத்தின் மூலம் நடத்தப்படும் முகாம்களில், கிராமங்களில் வாழும் ஏழையெளிய மக்கள் பெருமளவுக்கு பயன்பெற்று வருகின்றனர்.

மருத்துவத்துறை குறித்து ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். புவனகிரியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். நெசவாளர்களின் குறைகளைப் போக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மழைக் காலங்களில் நெசவுத் தொழில் பாதிப்பு ஏற்படாத வகையில், நத்தம் புறம்போக்குப் பகுதியில் கூடாரம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள். உடனே சொல்லி முடியுங்கள்.

செல்வி கோ. மல்லிகா : இத்திட்டம் சிறப்பான திட்டம் ஆகும். விசைத்தறி சங்கங்களை என்னுடைய தொகுதியான புவனகிரியில் அதிக அளவில் ஏற்படுத்த



அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய புவனகிரி தொகுதியில் திருமகள் கைத்தறி கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு சங்கம் இருந்து வருகிறது. இது நிர்வாகப் பிரச்சினையினால் சரிவர இயங்காத நிலையில் இருக்கிறது. இதைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமக் குடிநீர் ... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு பெறும் வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி நிலைமை நெருக்கடியான இந்த நேரத்தில், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பாதிக்காத விதத்தில், எந்தவிதமான விலையேற்றமும் இல்லாமல், ஒட்டுமொத்த வியாபாரிகளின் பதுக்கலும் இல்லாமல், அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்கிற விதத்தில் அமைந்துள்ள இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பாராட்டுகிறேன்.

முதியோர், விதவைகள், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோருக்கு மாத உதவித் தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 75-ஆக உயர்த்திக் கொடுத்ததையும், நெசவாளர் நலனுக்காக ஈட்டுத் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 15 ஆயிரமாக உயர்த்தியதையும்; வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வசதி வாய்ப்பற்ற ஏழைகள் உயிர்காக்கும் சிகிச்சைக்கு ரூ. 15 ஆயிரம் வழங்கியதையும்; இது போன்ற திட்டங்களைக் கொண்டு வந்த தமிழக அரசுக்கு என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையில், சென்னை மாநகராட்சிக்கு ''எழில்மிகு சென்னை 2000'' எனும் திட்டத்தினைக் கொண்டு வந்து, 1,250 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செலவு செய்ய இருப்பதாக வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கோவை, மதுரை இரண்டு மாநகராட்சிகளுக்கு மட்டும் அது புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில், கோவை மாவட்டத்திற்கு எந்தவொரு திட்டமும் இல்லாதிருப்பது கோவை மாவட்ட மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது. கோவை மாவட்டம் தற்போது வறட்சியாக, குடிக்க குடிநீர் இல்லாமல், மோசமான நிலையில் உள்ளது. தமிழ் நாட்டிலே அதிக வருவாயை

[திரு. கே. செல்வராஜ்] [1992 மார்ச் 12

கொடுக்கிற மாவட்டம் கோவை மாவட்டம். கோவை மாவட்டத்
தில், குடிநீர் பற்றாக்குறையைப் போக்க, அதற்கு நிரந்தர தீர்வு
காண நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேரள
மாநில அரசுடன் கலந்து பேசி, பாண்டியாறு, புன்னம்புழா
திட்டத்தின் மூலம் குடிநீருக்காவது ஒரு திட்டத்தை நிறைவேற்றி,
குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுகிறேன்.
கோவை மாநகராட்சிக்கு சிறுவாணி அணையிலிருந்து குடிநீர்
விநியோகிக்கப்பட்டு வருகிறது. இப்போதிருக்கிற சூழ்நிலையில்
அங்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தக் குடிநீர்
பற்றாக்குறையைத் தீர்க்க கோவை நகரம் வழியாகச் செல்லும்
அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்துடன் கோவை மாநகராட்சியையும்
இணைத்து, குடிநீர் வழங்க உத்திரவிட வேண்டுகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், பெரிய கனரகத்
தொழில்கள் ஆரம்பிக்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில்
எந்த ஒரு திட்டமோ, பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சிக்கு
எந்த ஒரு திட்டமோ அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.
மாவட்ட அளவில் தொழில் துவங்க முன் வருவோர்களை
ஊக்குவிக்கவும், அவர்கள் உடனடியாக தொழில் துவங்க
உதவுகிற விதத்தில் அனைத்து உதவிகளையும் அரசு செய்து
தர வேண்டும்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற 'ரெடிமேட்'
ஆடைகளை, தோல் பொருட்களை, அரசு சமூகநலத் துறை
யின் மூலமாக படித்து, வேலையில்லாத பெண்கள்.
விதவைகள், ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு வாழ்வளிக்
கிற விதத்தில், அரசுக்கு வருவாய் பெருக்குகிற விதத்தில்,
ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.
தனியார் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்றபோது,
தொழிற்சாலைகளில் மின் வெட்டின் காரணமாக தொழில்
உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட பெரிய
தொழிற்சாலைகளுக்குத் தனியாக அவர்களே மின்சாரம்
தயாரித்துக் கொள்வதற்கு அரசு இந்த வரவு—செலவுத்
திட்டத்தில் எந்தவொரு குறிப்பீட்டையும் வைக்காதது பெரிய
தொழில் அதிபர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது.

நண்பகல் 12.00

நலிவு அடைந்து மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளைத்
திறக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அந்த நலிவடைந்த ஆலைகளில் பணியாற்றக்கூடிய தொழி
லாளர்களுக்கு உதவிகளை வழங்கியதை வரவேற்கிறேன்.
ஆனால் பாதிக்கப்பட்ட அந்த தொழிலாளர்களுடைய
குடும்பங்கள் இன்றைக்கு மிகவும் [illegible] நிலையில்,
மோசமான நிலையில் இருக்கின்றன. அவர்களுக்கு உதவுகின்ற



1992 மார்ச் 12] [திரு. கே. செல்வராஜ்]

விதத்தில் மாதாமாதம் உதவித் தொகைகளை வழங்கியும்
அந்த நலிவடைந்த தொழிற்சாலைகளை எடுத்து நடத்து
வருகின்ற தொழிலதிபர்களுக்கு முன்னுரிமை கொடுத்து
அரசு அந்த ஆலைகளைத் திறக்க உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் சில தனியார் கல்லூரிகள் சொந்தக்
கட்டிடத்தில் இல்லாமல், மாட்டுக் கொட்டகை போல் உள்ள
கட்டிடங்களில் வகுப்பறைகளை வைத்து நடத்துகின்றன.
முறையான விஞ்ஞானக்கூடம் கிடையாது. ஆனால்,
மாணவர்களைக் கல்லூரியில் சேர்க்கும்போது நன்கொடை
என்ற பெயரில் லட்சக்கணக்கான ரூபாய்களை வாங்கிக்
கொள்கிறார்கள். அரசிடமிருந்து உதவியும் பெற்றுக்
கொள்கிறார்கள். அப்படியிருந்தும் தரமும் முறையும்
இல்லாமல் கல்லூரிகளை நடத்துகிறார்கள். அதனால்
மாணவர்களின் படிப்பும் வருங்காலமும் பாதிக்கப்படுகிறது.
எனவே, அப்படிப்பட்ட கல்லூரிகளைத் தடை செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகராட்சிப் பணியை முறையாக, துரிதமாக
நடைபெறச் செய்ய ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை தனி அதிகாரி
களாக நியமித்து முறையாக செயல்பட ஆவன செய்ய
வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் தேவர்சோலை
என்னும் இடத்தில் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கிறிஸ்தவ
ஆலயம் ஒன்று இருந்து வந்தது. அந்த ஆலயத்தைப்
புதுப்பிக்கின்ற வேலையைச் செய்வதற்கு, அந்தக் கோவிலைச்
சேர்ந்த கிறிஸ்தவர்கள், அந்தப் பழைய ஆலயத்தை
இடித்துவிட்டு, புதிய ஆலயம் ஒன்றைக் கட்டி வந்தார்கள்.
அந்தப் பணி பாதி வேலை நடந்து கொண்டிருந்தபோது,
அங்குள்ள பாதிரியார் அந்த ஆலயப் பகுதியை வேறு ஒரு
கல்லூரிக்கு விற்றுவிட்டார். அந்தப் பகுதியில் இப்போது
கோவில் கட்டுவதற்குத் தடையாக அங்கு உள்ள அதிகாரி
களும், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் சேர்ந்து
கொண்டு, அந்தப் பாதிரியாரின் துணை கொண்டு, அந்தக்
கிறிஸ்தவர்கள் மீது வழக்கு போட்டு, அவர்களை பயமுறுத்தி
வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த
ஆலயத்தைக் கட்டுவதற்கு முழுமையான நடவடிக்கை
எடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்பட்டு வரும்
மண்ணெண்ணெய், மாநகராட்சிப் பகுதியில் 10 லிட்டரும்,
நகராட்சிப் பகுதியில் 6 லிட்டரும், டவுன் பஞ்சாயத்து

பகுதியில் 5 லிட்டரும், கிராமப் பஞ்சாயத்து பகுதியில் 5 லிட்டரும் என்றிருப்பதை மாற்றி, கிராமப் பகுதிகளில்தான் விளக்கு எரிப்பதற்கும், அடுப்பு எரிப்ப தற்கும், மண்ணெண்ணெயை அதிகம் பயன்படுத்தி வருவதால், அந்த கிராமப் பகுதி மக்களுக்கு, மாநகராட்சிப் பகுதிகளில் கொடுப்பதைப் போலவே 10 லிட்டர் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

திருப்பூர் நகரில் இந்தியாவிலேயே அதிகமான உற்பத்தி யாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் நூல் கிடைக்க வேண்டும். குறிப்பாக, ஏற்றுமதித் துறையில் முன்னோடியாக விளங்குகின்ற அந்தத் தொழிலை ஊக்குவிக்க மானிய விலையில் நூல்களை விநியோகிக்க வேண்டுகிறேன்.

மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு மறைந்த பெருந்தலைவர் காமராசர் பெயர் வைக்க வேண்டுமென நீண்டநாள் கோரிக்கை இருந்து வருகிறது. மத்திய இரயில்வே அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு இதைப் பரிந்துரை செய்தால் பெருந்தலைவர் காமராசர் பெயரை வைப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். ஆதலால் மாண்பமிகு முதல்வர் அவர்கள் மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு 'காமராசர் இரயில் நிலையம்' என்று பெயர் வைக்க இந்த அவையின் மூலம் தீர்மானம் கொண்டு வந்து அந்தப் பெயரை வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. இளம்வழுதி.

<u>திரு. இளம்வழுதி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களாக இந்த மன்றத்திலே நடைபெற்று வருகின்ற 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு, நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற் றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூறு வதற்கு வாய்ப்பினை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

1992—93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட் டில். ரூ. 808.73 கோடி பற்றாக்குறை இருக்கும் என்று மதிப்பிடப் பட்டு, அதே நேரத்தில் 1991—92 ஆம் ஆண்டுக்கான பற்றாக் குறை ரூ. 401.47 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு இந்த நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மொத்தத்





தில் 200 கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறையைச் சந்திக்க வேண்டிய நிலை உள்ளது. அதாவது ஏறத்தாழ 20 சதவீதத் திற்கு மேல் பற்றாக்குறையை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய கடுமையான நிதி நெருக்கடி இதுவரை ஏற்பட்ட தில்லை. இந்தச் சூழ்நிலையிலே மத்திய அரசு தொடர்ந்து மாநில அரசைப் புறக்கணித்து வருகின்ற உண்மையை மிக நளினமாகக் கூறியிருக்கும் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் அதே நேரத்தில் ஏழை எளிய மக்களைப் பாதிக்காத வகையிலே மத்திய அரசு நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருப்பதாக வும் கூறியிருக்கிறார்கள். சிமெண்ட் விலை, சர்க்கரை விலை, ரெயில் கட்டணம் என்று எல்லாவற்றையும் உயர்த்திவிட்டு, இன் னும் உயர்த்துவதற்கு வேறு எதுவும் இல்லாத காரணத்தாலும், இன்னமும் விலையை உயர்த்தினால் நாடு தாங்காது என்ற காரணத்தாலும்தான் மத்திய அரசு பட்ஜெட்டில் வரி உயர்வு இல்லையே தவிர, 5000 கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறை உள்ள பட்ஜெட்டைத்தான் மத்திய அரசு வழங்கியிருக்கிறது. இது இந்திய நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு அபாய அறிவிப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நாடாளு மன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும், புதிய சுமைகள் மக்கள் மீது சுமத்தப்படமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏதோ முதலாளிகள் வரவேற்கிற ஒரு மத்திய நிதி நிலை அறிக்கையை நமது நாவலர் அவர்களும் வரவேற்கிறார்கள் என்பதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.

பிற்பகல் 12-05

தமிழ்நாடு அரசு தனது நிதிநிலை அறிக்கையில் வேலை வாய்ப்பை உருவாக்கவோ, விலைவாசியைக் குறைக்கவோ திட்ட வட்டமான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை. 70 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. கண்மை, கவரிங் நகைகள் போன்ற அலங்காரப் பொருட்களுக்கு வரி விலக்கும், வரிக் குறைப்பும் வந்திருக்கிறது. உணவுப் பொருட் கள் விஷயத்தில் எதுவும் செய்யவில்லை. நடப்பாண்டில் அரிசி உற்பத்தியும் ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தியும் இதற்கு முன் இருந்திராத வகையில் உயர் அளவில் இருக்கும் என்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள். இத்தகைய சிறப்பான சாதனை அரசின் முழு ஆதரவோடு உழவர்கள் மேற்கொண்ட முயற்சிகளினால்தான் நடைமுறையாகியுள்ளது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்படி உற்பத்தி கூடியிருக்கக்கூடிய நிலையில் என்றைக்கும் இல்லாத வகையில் இன்றைக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை கூடி இருப்பதால் மக்கள் எப்படி அவதிப்படுகிறார்கள் என் பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

எலதையும் ஆதாரப்பூர்வமாகப் பேச வேண்டும் என்பதற்காக நேற்று நானே ஒரு மளிகைக் கடைக்குச் சென்று பொருட்களின் விலையைப் பற்றி விசாரித்தேன். நம்பர் ஒன்று துவரம் பருப்பு ஒரு கிலோவுக்கு 19 ரூபாய் 50 காசு; நம்பர் 2 துவரம் பருப்பு 17 ரூபாய் 50 காசு; நம்பர் 1 உளுத்தம்பருப்பு 12 ரூபாய் 50 காசு நம்பர் 2 உளுத்தம்பருப்பு 11 ரூபாய் 50 காசு. நம்பர் 1 கடலைப் பருப்பு 11 ரூபாய்; நம்பர் 2 கடலைப் பருப்பு 9 ரூபாய் 50 காசு; நம்பர் 1 பைத்தம் பருப்பு 16 ரூபாய்; நம்பர் 2 பைத்தம் பருப்பு 14 ரூபாய்; மிளகு ஒரு கிலோ 80 ரூபாய்; சீரகம் ஒரு கிலோ 90 ரூபாய்; கடுகு ஒரு கிலோ 22 ரூபாய்; வெந்தையம் ஒரு கிலோ 15 ரூபாய்; பூண்டு ஒரு கிலோ 12 ரூபாய்; மிளகாய் ஒரு கிலோ 40 ரூபாய்; கொத்தமல்லி ஒரு கிலோ 18 ரூபாய்; கசகசா ஒரு கிலோ 85 ரூபாய்; காராமணி கிலோ 20 ரூபாய்; மொச்சை 20 ரூபாய்; தேங்காய் எண்ணெய் 63 ரூபாய்.......... ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மளிகைக் கடையையே இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். (சிரிப்பு) மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மளிகைக் கடையின் பெயரைச் சொன்னால் அவர்களுக்கு வியாபாரமாவது நடக்கும். (சிரிப்பு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மளிகைக் கடைக்குப் போன பிறகுதான் விலைவாசி பற்றி நமக்குத் தெரிகிறது. இதைப் பார்க்கும்போது நமக்குப் பயமாக இருக்கிறது. ஏனென்றால் நம்மை மாதிரி ஆண் பிள்ளைகள் மாதம் ஆயிரம் ரூபாய், 2 ஆயிரம் ரூபாய் என்று கிடைக்கிற சம்பளத்தைக் கொண்டுபோய் வீட்டிலே உள்ள....

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர் கடைக்குப் போய் இருக்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடு) தயவு செய்து அமருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : அவர் தவறான கருத்தைச் சொல்கிறார். எனவே அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஒன்றும் தவறான கருத்து இல்லை. உட்காருங்கள். உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. இளம்வழுதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள், மற்றும் இங்கேயுள்ள உறுப்பினர்கள் அனுமதியில்லாமல் பேசுகின்ற பேச்சுக்கள் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து பேச வேண்டும்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் விலைவாசி எல்லாம் கூடிய பிறகுதான் நம்முடைய இல்லத்தரசிகளின் சிறப்பே நமக்குத் தெரிகிறது. இங்கே பெண்குலத்தின் பிரதிநிதிகளாகப் பல சகோதரிகள் எல்.எல்.ஏ.—க்களாக இருக்கிறார்கள். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி இனியும் இந்த மாதிரி குறுக்கீடு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) இப்படி குறுக்கீடு செய்தால் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) தயவுசெய்து திரு. இளம்வழுதி அவர்களைப் பேச அனுமதியுங்கள்.

திரு. இளம்வழுதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பெண்குலத்தின் பிரதிநிதிகள் பலர் எம்.எல்.ஏ.—க்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் வருஷாவருஷம் ஒரு முறை பட்ஜெட் போடுகிறார்கள். ஆனால் நம்முடைய வீட்டிலே இருக்கின்ற தாய்மார்கள் மாதத்திற்கு ஒருமுறை பட்ஜெட் போடுகிறார்கள். நம்மிடம் இருக்கிற சம்பளத்தை அதாவது ஆயிரம் ரூபாய், 2 ஆயிரம் ரூபாயைக் கொண்டுபோய் அவர்களிடம் கொடுக்கும்போது, அதை வைத்து அவர்கள் பட்ஜெட் போடும்போது வீட்டு வாடகைக்கு என்று ஒதுக்க வேண்டும்; மளிகைச் சாமானுக்கு என்று ஒதுக்க வேண்டும்; பால்காரனுக்கு என்று ஒதுக்கவேண்டும்; பேப்பர்காரனுக்கு ஒதுக்க வேண்டும்; ஆனால் இப்போது ரொம்பப்பேர் பேப்பரை விலைகொடுத்து வாங்குவது கிடையாது. ஓசியிலேயே படித்துவிடுகிறார்கள். நம்மைப்

போன்றவர்கள் எல்லாம் வெளியே போகும் இடத்திலேயும்' லைப்ரரியிலும் படித்து விடுகிறோம். அதேமாதிரி வாரத்தில் ஒரு நாள் கறி, மீன் சாப்பிட வேண்டும். மாதத்தில் ஒரு நாள் சினிமாவுக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும். அதேமாதிரி பிள்ளைகள் படிப்பதற்கு ஃபீஸ் கட்ட வேண்டும். அதேமாதிரி அவர்களை பீச் போன்ற இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும். ஆனால் இப்போது இருக்கிற நிலைமையில் இந்த 2 ஆயிரம் ரூபாயில் இதையெல்லாம் எப்படி செய்ய முடியும்? அந்த நிலையிலே மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் எம்.எல். ஏக்கள் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு பணியாற்றுவதற்கு முன்வரவேண்டும் என்று சொல்கிறார். ரூ. 2 ஆயிரத்திலேயே இவ்வளவு திண்டாட்டமாக இருக்கும்போது ஒரு ரூபாயிலே என்ன கொண்டாட்டத்தையா காண முடியும். அது மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு பணியாற்றுகிறார்.

பிற்பகல் 12.10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் யாரையும் நான் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு சேவை செய்யுங்கள் என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சார்பாக, இன்னொரு உறுப்பினர் சம்பளம் வாங்காமல் வேலை செய்யலாமே என்றார். அதற்கு நீங்கள் எல்லாம் முன் உதாரணமாக இருப்பீர்களேயானால் நாங்கள் பின்பற்றுகிறோம் என்றுதான் சொன்னேனே தவிர, எவ்வளவு கொடுத்தாலும் போதும் என்கின்ற ஒரு நிலையோடு நிறுத்துவது என்கின்ற தன்மையிலே நான் சொல்லவில்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் உதாரணத்திற்குத்தான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு பணியாற்றுகிறார்கள். அது கூட அவர்களுக்கு எப்படி கட்டுப்படியாகிறதோ தெரியவில்லை. இதுகூட நான் சொல்கிறேன் என்று என் மேலே கோபித்துக் கொள்ளாதீர்கள். இந்த பட்ஜெட் போடுவதற்கு 3 வாரங்களுக்கு முன்னாலேயே ஜூனியர் போஸ்ட் என்ற பத்திரிகையிலே ஒரு சகோதரி... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையிலே வந்த செய்திகளை எல்லாம் முன் அனுமதி இல்லாமல் பேச முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பு அவையில்



உறுப்பினராகத் திறம்பட செயலாற்றியவர். அவையின் மரபுகள் தெரியும். ஆகவே பத்திரிகைச் செய்திகளை வைத்து இங்கே விவாதம் செய்ய முற்படுவது சரியாக இருக்காது. தொடர்ந்து உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் திறம்பட பணியாற்றினேன் என்று தாங்கள் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னென்ன திறமை என்று சொல்லவில்லை. சட்டசபையிலே எவ்வளவோ நடந்திருக்கிறது. என்னென்னவோ நடந்து இருக்கிறது. அதிலே எதிலே திறமையாக இருந்தீர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : ஆகவே அந்த வகையிலே.... (குறுக்கீடு) சார், இது என்ன ? நீங்கள் 'அலவ்' பண்ணுகிறீர்களா? என்ன நான் பேசக்கூடாதா ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் தயவுசெய்து அமர வேண்டும்.

திரு. இளம்வழுதி : அதிலே வந்து புரட்சித் தலைவிக்கு, குடும்பத் தலைவி எழுதும் கடிதம் என்ற தலைப்பிலே, அதிலே சில விவரங்களை குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் படித்திருப்பார் என்று கருதுகிறேன். மேலும் பாராளுமன்றத்திலே நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குடும்பத்திலே இருக்கின்ற கணவனாக இருப்பவன் மனைவியைக் கேட்டுக் கொண்டுதான் எந்த முடிவும் எடுக்க முடியும். இந்திய அரசாங்கத்திலே பிரதமராக இருக்கின்ற நான் கணவன் என்றால் நிதி அமைச்சராக திரு. மன்மோகன்சிங் மனைவியாக இருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா உதாரணங்களையும் எல்லா இடத்திலேயும் சொல்ல முடியாது. எனவே இப்படி இந்த

[திரு. சு. முத்துசாமி] [1992 மார்ச் 12

உதாரணங்கள் சொல்வது அவ்வளவு நன்றாகத் தெரியவில்லை. எனவே சில உதாரணங்களை எங்கெங்கே சொல்ல வேண்டுமோ அப்படி சொல்ல வேண்டும். எனவே உரிய வகையிலே பேசினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் வீண் விவாதங்களுக்கு வழி வகுக்காமல் வரவு-செலவுத் திட்டம் பற்றி நேரடியாகப் பேசக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குடும்பங்களிலே கணவன் மனைவி சேர்ந்து குடும்பத்திற்குத் திட்டம் போடுகிறார்கள். பட்ஜெட் போடுகிறார்கள். சில குடும்பங்களிலே அண்ணன் தம்பி சேர்ந்து பட்ஜெட் போடலாம். இப்படியும் நடக்கலாம். முதலிலே கூட சொன்னார்கள். நிதி அமைச்சர் மட்டும் நான் ஒரு ஆண்டுக்கு ஒரு முறை பட்ஜெட் போடுகிறார்கள். குடும்பத் தலைவிகள் ஒரு மாதத்திற்கு ஒரு முறை போடுவார்கள் என்றார். திராவிட முன்னேற்றக் கழக காலத்திலே ஒருவேளை ஒவ்வொரு குடும்பத்திற்கும் பட்ஜெட் கொடுப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

திரு. இளம்வழுதி: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் கூறிய அந்த சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து இந்த மாதிரிப் பேச முற்பட்டால் அனுமதி மறுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வந்தேன் என்றால் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப் பற்றியே மீண்டும் நீங்கள் பேசினால் அது அவைக் குறிப்பிலே ஏறாது. வரவு—செலவு திட்டத்தைப் பற்றி மட்டும் நேரடியாக நீங்கள் பேச வேண்டும். இன்னும் இரண்டே நிமிடங்கள். அதற்குள் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 மார்ச் 12]

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது நாட்டுத் தலைவி தலைமையில் இருக்கின்ற நாவலர் அவர்கள் போட்டிருக்கின்ற பட்ஜெட்டால் வீட்டுத் தலைவிகள் அதிருப்திக்கும் ஆத்திரத்திற்கும் ஆளாகி இருக்கிறார்கள். அந்த ஆத்திரமும் அதிருப்தியும் மறைந்து (குறுக்கீடுகள்) கீர்த்தி ஏற்படுகின்ற வகையிலே நாவலர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் நல்ல பதிலைத் தருவார்கள் என்று எதிர்பார்த்து அதற்குத்தான் சொன்னேனே தவிர, யாரையும் குறைத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உவமைகள் சொல்கின்றபோது எந்த இடத்தில், எந்த நேரத்தில், யாரால், யாருக்காக சொல்லப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் உண்மை விளக்கப்பட இருக்கிறதே தவிர, அதே உவமையை எல்லா இடங்களிலும், எல்லோருக்கும் பயன்படுத்துவது என்பது உவமையினுடைய இலக்கணத்திற்கே மாறானது ஆகும். ஆகவே தான், பொருத்தம் இல்லாத வகையில் சொல்கிற காரணத்தினால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் வந்தது. ஆகவே, அவர்கள் விலைவாசிகளை பற்றி எல்லாம் பேசினார்கள். நான் பதில் உரையில் உலக இல்லத்து அரசிகளினுடைய தன்மைகள், இந்தியாவினுடைய இல்லத்தரசிகளினுடைய தன்மைகள், தமிழகத்தினுடைய தன்மைகள், பிற மாநிலங்களினுடைய தன்மைகள் இவைகளைப்பற்றி எல்லாம் விரிவாகவும், விளக்கமாகவும் நீங்கள் பொறுமையாக இருப்பீர்களேயானால்—நான் விளக்கம் தருவதற்கு தயாராகத் தான் இருக்கிறேன். இங்கே அடுக்கித்தான் வைத்திருக்கிறேன் என்பதையும் கட்டுக்கட்டாக எடுத்துச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) போதுமான விளக்கம் வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு நிதியமைச்சருடைய மனம் புண்பட்டு இருக்குமானால் அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்.

[1992 மார்ச் 12

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மனம் புண் படுகிற சங்கதி அல்ல. 'அவை அறிந்து, பாங்கு அறிந்து பேச வேண்டும்' என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. (மேசை யைத் தட்டும் பலத்த ஒலி.)

திரு. இளம்வழுதி: நாடாளுமன்றத்தில் பிரதமர் அப்படி ஒரு உவமையைப் பேசியதால்தான் நான் அப்படி பேசினேனே தவிர வேறு ஒன்றுமில்லை..... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இளம்வழுதி அவர்கள் முடிக்க வேண்டும். முடித்து விடுங்கள். முடியுங்கள்.

திரு. இளம்வழுதி: இப்போது 8-வது ஐந்தாண்டுத் திட்டம் இரண்டு ஆண்டு விடுமுறைக்குப் பின்னர் துவங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டு இடைவெளியில் திட்டப் பணிகளில் மிகப் பெரிய தொய்வை ஏற்படுத்தியிருக்கிறது. இது மாநிலத்தினுடைய வளர்ச்சியைப் பாதிக்கிற விஷயமாகும்.

மேலும் கடந்த ஆளுநர் உரையில் மத்திய முதலீடு 69 ஆம் ஆண்டு 10 சதவிகிதமாக இருந்தது இந்த 20 ஆண்டுகளில் தான் 5.21 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று கூறியுள்ளார்கள். இப்படி தொடர்ந்து தமிழகத்திலே மத்திய அரசினுடைய முதலீடு குறைந்து கொண்டே வருவதை இந்த அரசு அனுமதிக்கக் கூடாது. அதற்கு மத்தியில் இருப்பவர்கள் ஆயிரம் காரணங்களைத் தரலாம். ஆனால் காரணங்களின் எண்ணிக்கை கூடலாமே தவிர அதில் நியாயங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. மத்தியில் தொடர்ந்து தோழமை உள்ள அரசாக இருக்கிற இந்த அரசு இந்த விஷயத்திலே மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் வாதாடி, போராடி உரிய பங்கைப் பெற வேண்டும். அப்படி செய்வது ஒன்றுதான் உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நீங்கள் நம்பிக்கையோடு நடந்துகொள்வதாகும். இப்படி குறைந்து வரும் முதலீட்டை நிவர்த்திக்க மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அதற்கு மத்தியில் உள்ளவர்கள் தந்த பதில் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடியுங்கள். கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

திரு. இளம்வழுதி : காலையில் பேரவைத் தலைவரிடம் அதிக நேரம் வேண்டுமென்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவர் என்னிடத்தில் சொல்லவில்லை. உங்களுக்குத் தரப்



1992 மார்ச் 12]

பட்ட நேரம் முடிந்துவிட்டது. உடனடியாக நீங்கள் முடித்து விடவேண்டும். இல்லையென்றால் மற்றொருவரை அழைத்து விடுவேன், பேசுங்கள்.

திரு. இளம்வழுதி: அடுத்து, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச் சிக்கு தடை இல்லாத மின் விநியோகம் தர வேண்டுமென்று அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறுதொழில் அதிபர்களோடு பேசிய கூட்டத்தில் பேசியுள்ளார்கள். தடை யில்லாத மின் விநியோகத்திற்கு மின் உற்பத்தியைப் பெருக்க, எடுக்கப்பட்ட உருப்படியான நடவடிக்கை என்ன? மின்வாரியம் தொடர்ந்து நட்டத்திலேயே நடந்து வருவதால் அதற்கு கூறப் படும் காரணம், வெகு தூரத்திலிருந்து நிலக்கரியை கொண்டு வருவதால் மிகுதியான செலவு ஏற்படுகிறது என்று சொல்கிறார் கள். இப்போது மத்திய பட்ஜெட் காரணமாக இந்தச் செலவு மேலும் அதிகமாகக் கூடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற் கெனவே மின்சாரக் கட்டணத்தை ஏற்றியதால் பொதுமக்களும் தொழில் துறையும் பாதிக்கப்பட்டுள்ள......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் உண்மையிலே 72 கோடி ரூபாய் ஆதாயத்திலே போய்க் கொண்டிருக்கிறது. மானியமாக மின்சாரம் கொடுக்கிற காரணத்தினால், சென்ற பட்ஜெட் கூட்டத்திலேயே நான் விளக்கியிருக்கிறேன், உறுப் பினர் தெரிவித்திருக்கிற கருத்துக்களைப் போல, நாம் மானியமாக இன்றைக்கு மின்சாரத்தை இலவசமாக கொடுக் கிற காரணத்தினால்தான் தமிழ்நாடு மின்சார வாரியம் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறதாக கணக்கே தவிர உண்மையிலே நாம் கணக்கெடுத்துப் பார்க்கிற நேரத்தில் 72 கோடி ரூபாய் ஆதாயத்திலே சென்ற ஆண்டு நம்முடைய மின்சார வாரியம் இந்திய திருநாட்டுக்கே வழிகாட்டியாக நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் போன ஆண்டு குஜராத் பெற்ற பரிசை இந்த ஆண்டு, 1991 ஆம் ஆண்டு சிறப்பாக புரட்சித் தலைவி அவர் களுடைய நிர்வாகத்தின்கீழே மின்சார வாரியம் சிறப்பாக பணியாற்றியதன் காரணமாக இன்றைக்கு 'ஓவர் ஆல் பெர் பார்மன்ஸ்' என்று சொல்லப்படுகின்ற, இந்திய நாட்டிலேயே சுழற் கோப்பையை குஜராத்தும் தமிழ்நாடும் இணைந்து பெற் றிருக்கிறோம். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த ஆண்டு நிச்சயமாக தமிழ்நாடு முதல் இடத்திற்கு வரும் என் பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மின்சார வாரியம் உண்மையிலேயே நஷ்டத்திலே ஓடவில்லை, இலவச

மின்சாரம் கொடுக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு இந்த நஷ்டம் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையையும், மாநில அரசினுடைய நிதிநிலை அறிக்கையையும் சட்டப் பேரவையில் இணைத்தே பேசிக் கொண்டிருக்கிறார். பாராளுமன்றத்திலே சொல்வதற்கு ** இங்கே ஒரே ஒருவர் இருந்துகொண்டு 2 மன்றத்திற்கும் சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** என்று சொன்னதை நீக்க உத்தரவிடுகிறேன். உறுப்பினர் தொடர்ந்து பட்ஜெட்டிலே பேச வேண்டும்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே ஒலிப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு இல்லை என்றாலும், சட்டமன்றத்திலே எங்களுடைய குரலை ஒலிப்பதற்கு மக்கள் வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கொடுக்கப்பட்ட நேரத்தில் சரியாக முடிக்கும் வகையில் உறுப்பினர் அவர்கள் குரலை ஒலித்தால் நல்லது.

திரு. இளம்வழுதி : மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட், மாநில அரசாங்கத்தினுடைய பட்ஜெட் இரண்டையும் இணைத்தே பேசுகிறார் என்று சொல்கிறார்கள். நீங்கள் இணைந்து இருக்கின்ற காரணத்தால் நான் இணைத்துப் பேச வேண்டியிருக்கிறது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மேலும் இலவச மின்சாரம் வழங்குவதில் 560 கோடி ரூபாய் இழப்பு என்று நம்முடைய நாவலர் அவர்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அதைப் பற்றிப் பேசுகிற நேரத்திலே, நிதியமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு பதில் சொன்னார்கள். ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ஒரு ரூபாய் 47 பைசா செலவாகிறது, வீட்டு உபயோகத்திற்கு ஒரு யூனிட் 55 பைசா விதம் தரப்படுகிறது; இத்தகைய சலுகைகளையும் சேர்த்துதான் 560 கோடி ரூபாய் இழப்பு என்று கூறினார்கள். இந்த விளக்கத்தை பட்ஜெட் உரையிலே சேர்க்குமாறு கூறினேன், ஆனால் அது அச்சிலே ஏறவில்லை என்று நாவலர் அவர்கள் கூறினார்கள். சென்ற பட்ஜெட்டிலே நான் இலவச மின்சாரம் பற்றிப் பேசுகிற நேரத்திலேயும் சொன்னேன். நம்முடைய செய்தித் துறை 18–1–1991-ல் வெளியிட்டுள்ள ''நாளொரு திட்டம், பொழுதொரு சாலை'' என்ற புத்தகத்தில் இலவச மின்சாரம் வழங்குவதால் 30 கோடி ரூபாய்தான் இழப்பு ஏற்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எப்படி 560 கோடி ரூபாய் ஆகியது? இதிலே எங்கே தவறு? அதிகாரிகள் தவறா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பற்றி நான் பதிலுரையில் மிக விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூற இருக்கிறேன். நான் இதைப் பற்றி அன்றைக்குச் சொல்லுகிற போது, நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது சேர்த்துப் படித்தேன் என்று சொன்னேன். அது பற்றி விளக்கங்கள் முழுவதையும் என்னுடைய பதிலுரையில் தருவேன். புள்ளி விவரங்களிலே எந்தத் தவறும் இல்லை என்பதை மட்டும் இப்போதும் சொல்லிக் கொள்கிறேன். அது என்னென்ன புள்ளி விவரம் என்பதை எல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் பதிலுரையில் சொல்கிறேன்.

திரு. இளம்வழுதி : குமரியாருக்கு என்ன பதில் சொன்னாரோ அதே பதில்தான் எனக்கும் நாவலர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அன்று சொல்லிவிட்டு, மீண்டும் மீண்டும் 560 கோடி ரூபாய் உண்மையில் இலவச மின்சாரம் வழங்குவதால்தான் இழப்பு ஏற்படுகிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்கும் விளக்கம் சொல்லியிருக்கிறார், அதே விளக்கம் இன்றைக்கும் சொல்கிறார். அப்படி இருக்கும்போது திரும்பத் திரும்ப பட்ஜெட்டிலே கண்ணாமூச்சி விளையாட்டு போல இது வருகிறதே. அடுத்த பட்ஜெட்டிலும் இது வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள். 'அறிய விரும்புகிறேன்' என்று சொல்லி, அதோடு முடியுங்கள். அடுத்து திரு. செ. து. வரதராஜன். (குறுக்கீடு) நீங்களாகவே வலிந்து வரவழைத்துக்கொண்ட விவாதத்திற்கு நான் பொறுப் பல்ல. உங்களுக்குத் தரப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. தயவு செய்து குறுக்கிடாமல் உட்காருங்கள். திரு. செ. து. வரத ராஜன்.

*திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு கிடைக்க வைத்த தங்கத் தலைவியின் பாதங்களில் என் வணக்கத்தைக் காணிக்கையாக்கி, என் உரையைத் துவங்கு கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த தாய் உள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்கள் ஒரு பெண் என்ப தால், பெண் குலம் என்னென்ன கஷ்டப்படுகின்றதோ அவற்றை எல்லாம் தீர்க்கும் பட்ஜெட்டாக இது இருக்கிறதென்று தாய் மார்கள் போற்றி வாழ்த்தும் பட்ஜெட்டாக இது திகழ்கிறது.

நடமாடும் பல்கலைக் கழகம், தன் முதிர்ந்த அனுபவத்தை யும் அறிவையும் கொண்டு சிறப்பாக நிதிநிலை அறிக்கையை அமைத்து சமர்ப்பித்தமைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர் களையும் வாழ்த்துகின்றோம், எங்களுக்குப் பொக்கிஷமாக இருக்கும் தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி, மாண்பு மிகு தமிழகத்தின் நிரந்தர முதல்வர் எந்த எதிர்ப்பையும் துச்ச மென நினைத்து. உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை இருப்பதாக காவல் துறை கருதினாலும், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டுமென்றும், தனக்கு ஆபத்து இருந்தும், உயிரைத் துச்சமென நினைத்து, மக்களைச் சந்திக்க வேண்டுமென நினைக்கும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தங்கத் தலைவியை நல் உள்ளம் கொண்ட வர்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்,

தங்கத் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகுதான் காவிரித்தாய் தமிழகம் அனைத்தும் மழையாகவும், எதிர்பாராத வகையில் காவிரியாற்றில் வெள்ளமாகவும் வந்து, வரலாறு காணாத வகையில் இரண்டு முறை மேட்டூர் அணை நிரம்பியது தமிழக மக்களை மகிழ வைத்துள்ளது,

என்னுடைய தொகுதியின் சிறப்பாக, அதிலும் தீர்த்தச் சிறப்பின் சிகரமாகத் திகழ்வது பட்சித்தீர்த்தம் என வழங்கும் திருக்கழுக்குன்றம் ஆகும், மற்றைய மாநிலங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது மிகவும் புகழ் வாய்ந்தவைகளில் ஒன்றாகத் திருக் கழுக்குன்றம் விளங்குகிறது.



பிற்பகல் 12-25

குறிப்பாக குருபகவான் ஆறு ராசிகளில் பிரவேசிக்கும் காலங்களில் இந்தியாவின் முக்கியமான திருக்கோயில்களின தீர்த்தங்களில் திருவிழா நடப்பது மரபாக இருக்கின்றது, அதை நமது இந்து சமய அறநிலையத் துறை நிலைநிறுத்துவது கடமையாகும்,

இந்த 6 ராசிகளில் மேஷ ராசியில் குருபகவான் பிரவேசிக்கும் போது அலகாபாத் நகரில் உள்ள பிரயாகை தீர்த்தத்தில் விசேஷ மாகும். சிம்ம ராசியில் வரும்போது கும்பகோணத்தில் மகா மகம் விழா நடக்கும், கன்னி ராசியில் குரு பிரவேசம் செய்யும் போது திருக்கழுக்குன்றத்தில் சங்குதீர்த்தம் விழாவும், கடக ராசியில் நாசிக் எனும் ஊரில் பஞ்சவடி தீர்த்தமும், துலா ராசி யில் உஜ்ஜைனியில் மேளா தீர்த்தமும். கும்ப ராசியில் பிரவேசிக்கும்போது ஹரித்துவாரில் கும்பமேளா தீர்த்தமும் இந்திய நாட்டில் சிறப்பாக நடைபெறுவது வாடிக்கை

அண்மையில் குருபகவான் சிம்மராசியில் மக நட்சத்திரத் தில் பிரவேசித்தபோது, கும்பகோணத்தில் மகாமகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அதற்கடுத்ததாக குருபகவான் கன்னியா ராசியில் பிரவேசம் செய்ய இருக்கிறார். அதை முன்னிட்டு திருக்கழுக்குன்றம் எனும் இத்திருத்தலத்தில் வரு கின்ற 4–9–1992 அன்று, அதாவது ஆங்கீரச ஆண்டு, ஆவணித் திங்கள் 19 ஆம் நாள் காலை 9-30 மணிக்கு மேல் 10-15 மணிக்குள்ளாக 'சங்கு தீர்த்த புஷ்கர மேளா' மற்றும் இலட்ச தீபப் பெருவிழா ஆகியவை நடைபெற உள்ளன. சைவ நாயன் மார்கள் நால்வரும் நாவாரப் பாடியதும், அருணகிரி நாதர் மற்றும் அருட்பிரகாச வள்ளலார் போற்றியதும், கழுகு தினமும் வந்து வலம் செய்வதும், 12 ஆண்டுக்கொரு முறை சங்கு பிறப்பதும் ஆன அற்புதமான ஸ்தலமாகத் திகழும் திருக் கழுக்குன்றத்தில் மேற்படி சங்கு தீர்த்த புஷ்கர மேளா வைபவம் காலையிலும். மாலையிலே இலட்ச தீபப் பெருவிழாவும் நடை பெற இருக்கின்றன, காலையில் நடைபெறும் தீர்த்தவாரிக்கும், மாலையில் தரிசனம் செய்யவிருக்கும் இலட்ச தீபத்திற்காகவும், இலட்சக்கணக்கான மக்கள் திருக்கழுக்குன்றம் வருவார்கள் என்று எதிர்பார்த்தாலும், இந்த ஆண்டு மேலும் அதிகம் பேர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது, ஆகவே, திருக்கழுக் குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் சங்கு தீர்த்த புஷ்கர மேளா இலட்ச தீபப் பெருவிழாவுக்குக் குழு ஒன்று அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆண்டு நடந்த இலட்ச தீபப் பெருவிழாவுக்கு சுமார் 2 லட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. இந்த ஆண்டு அதுபோல் 6 முதல் 10 மடங்கு செலவாகி வாய்ப்புள்ளது.

[திரு. செ. து. வரதராஜன்] [1992 மார்ச் 12

மேலும், சென்ற 28-1-1991 அன்று அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்துடன் 27 திருப்பணிகள், ரூ. 10 இலட்சம் செலவில் செய்யப்பெற்றது. அரசு மானியம் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப் பெற்றிருந்தது. மீதித் தொகை அனைத்தும் திருப்பணிக்குழுவின் மூலம் வசூல் செய்தும், நன்கொடையாளர்களை அணுகி நேரடியாக சந்தித்து அந்த திருப்பணி வேலைகள் நடத்தப்பட்டன. இந்த நிலையில் இந்த பெருவிழாவுக்கு பொது மக்களிடம் வசூல் செய்வது மிகவும் சிரமமாக இருக்கும் என்பதால், பல சாதனைகளைப் படைத்து பாமர மக்கள் முதலாக படித்தவர்கள் வரை பாராட்டும்படியாக செங்கோலோச்சும் தங்கத் தலைவியின் அரசு, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் நடக்கும் சங்கு தீர்த்த புஷ்கர மேளா மற்றும் இலட்ச தீபப் பெரு விழாவிற்கு ரூ. 10 லட்சம் செலவில் நடத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயிலில் இந்த விழாவினை சிறப்பாக செய்ய அனுமதி வழங்கவும் வேண்டிக் கேட்டுக் கொண்டு, தங்கத் தலைவி தமிழக முதல்வர் அவர்கள் அவ்விழாவிற்கு நேரில் வந்து சிறப்பித்தால், தங்கக் குடத்திற்கு வைர மணி பதித்தது போன்று இருக்கும் என்று கூறி, அவ்வாறு வந்து சிறப்பிக்கவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இன்னும் சில மாதங்களே உள்ள இந்த நேரத்தில் அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, அரசு மானியமும், உரிய ஆணைகளும் வழங்கி சிறப்பிக்க வேண்டுமாய் தங்களின் பொற்பாதங்களை வணங்கி வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்ததாக, என் தொகுதியில் ஏழை மீனவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 3.46 கோடி செலவில் 2,100 இலவச வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதே போன்று, வரும் ஆண்டில் 2,000 வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கவும் இருக்கிறார்கள். மீன் பிடிக்கக் கடலுக்கு செல்லும் மீனவர்கள், கடலில் இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்ப நலத்திற்காக இது வரையில் குடும்ப ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 15 ஆயிரம் வழங்கியதை நமது கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாய் உள்ளத்தோடு ரூ. 21,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

மீன் பிடி தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கி வந்த நிவாரணத் தொகை ரூ. 60 போதாது என்று, தாய் உள்ளத்தோடு



1992 மார்ச் 12] [திரு. செ. து. வரதராஜன்]

மாதம் ஒன்றுக்கு ரூ. 270 ஆக உயர்த்தியிருப்பதால் மீனவ சமுதாயமே தங்கத் தலைவியை வாழ்த்துகிறது.

என்னுடைய தொகுதியில் நெசவாளர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. செ. து. வரதராஜன் : நெசவாளர்கள் நலனுக்காக இவ்வரசு எப்போதும் பாடுபட்டு வருகிறது. நெசவாளர்களுக்காக வழங்கப்படும் ஈட்டுறுதித் தொகை ரூ. 10,000-ஐ ரூபாய் 15,000மாக தங்கத் தலைவி அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். இறந்து போகும் நெசவாளர்களின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 250 வழங்கி ஓய்வூதிய திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கின்ற தங்கத் தலைவி வரும் ஆண்டில் நெசவாளர்களுக்கு தறிக்கூடங்களுடன் இணைந்த வீடுகள் இரண்டாயிரம் கட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. இதிலே ஒரு முக்கியமான செய்தி என்னவென்றால், கைத்தறி நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான கூலி உயர்வு 1-3-1992 முதல் 15 சதவீதம் என்ற அளவில் கைத்தறி அமைச்சர் அவர்கள் மூலமாக தங்கத் தலைவி அவர்கள் உயர்த்தியிருப்பதை நாங்கள் மனதார பாராட்டுகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆசிரியப் பயிற்சி பெற்று நீண்ட நாட்களாக வேலை இல்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் வேலையில்லா குறையினை போக்கவும், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கவும், இடவசதி போதுமானதாக இல்லாமல் உள்ள 459 ஓராசிரியர் ஆரம்ப பள்ளிகளுக்கு இரண்டு ஆசிரியர்களை நியமித்திருப்பதையும், 500 பேர்கள் இருக்கும் இடத்திலும், 200 குடியிருப்புகள் இருக்கும் இடத்திலும், புதிதாக தொடக்கப் பள்ளிகளைத் துவக்க இருப்பதையும், புதிதாக கூடுதல் மாணவர்களைப் பள்ளிகளில் சேர்க்கவும் மொத்தத்தில் 1,400 இடைநிலை ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பதையும் மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவியை போற்றுகிறார்கள் என்று சொல்லி இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி,

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக உறுப்பினர்கள் எப்போது பேசினாலும் பேரவைத் தலைவர் இருக்கையை நோக்கிப் பேச வேண்டுமென்று சொல்லுவது இதற்காகத்தான்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடிய தஞ்சைத் தரணி இன்று வறண்டு கிடக்கும் நிலை மாறிட காவிரி தண்ணீர் கிடைக்கச் செய்த, மாமணி போல் வராது வந்துதித்த காவிரி தந்த கலைச் செல்வி, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் ஏழையெளிய நடுத்தர மக்களின் வறுமை நிலையை கருத்திற் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கையை தமிழ்ச் சமுதாயமே இன்று வாயார வாழ்த்துகிறது.

குறிப்பாக மிகவும் பின்தங்கிய பகுதியாகிய நாகப்பட்டினத்தை தலைநகராகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டம் தந்து அந்தப் பகுதி மக்களின் வயிற்றில் பால் வார்த்த தாயாகிய எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நாகை மக்களாகிய நாங்கள் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

கோடைக் காலங்களில் தண்ணீர் தட்டுப்பாட்டால் பரிதவிக்கும் நாகையிலும் மற்றும் ஒன்றியத்தில் உள்ள சில பகுதிகளுக்கும் குடிநீர் நிரந்தரமாகக் கிடைக்கவும், மேலும் நாகை மக்களின் தூய்மைக்கு வடிகாலாக இருக்கும் அக்கரை குளத்தை ஆழப்படுத்தவும் ஆவன செய்ய வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புயலின் சீற்றத்தால் வருஷா வருஷம் பாதிப்புக்கு உள்ளாகும் நாகையின் தாழ்வான பகுதியில் வாழும் மீனவர்கள் மற்றும் இதர சமுதாயத்தினர், மேட்டுப் பகுதிக்குச் சென்று உயிர் காத்துக்கொள்ள இருக்கும் ஒரே வழி அக்கரைப்பட்டி பாலம்தான். அந்தப் பாலம் பழுதடைய நேர்ந்தால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அனைவரும் மேட்டுப் பகுதிக்குச் செல்ல முடியாமல் உயிர் இழப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. எனவே மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள, மனித நேயம் படைத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தந்து எங்கள் சமுதாய நலனைக் காத்திடுமாறு பணிவன்போடு வேண்டுகிறேன்.

மேலும் நாகையின் சுற்றுப்புறங்களில் உள்ள இந்து, கிறிஸ்துவ, முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களாகிய சிக்கல் சிங்காரவேலர் ஆலயம், எட்டுக்குடி முருகன் ஆலயம்,



திருநள்ளார் சனீஸ்வர பகவான் ஆலயம், வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா திருப்பேராலயம், நாகூர் தர்கா, கோடியக்கரை பறவைகள் சரணாலயம் போன்றவற்றிற்கு பன்னாட்டவர்கள் வந்து செல்வதால் நாகப்பட்டிணத்தை ஒரு சுற்றுலா மையமாக அறிவித்து, பன்னாட்டவர்கள் வந்து செல்வதற்கு வசதியாக நாகையில் விமான போக்குவரத்துத் தளம் ஒன்று அமைக்கவும் ஆவன செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன்.

பிற்பகல் 12—35

வரலாற்றுச் சிறப்புமிக்க நாகை துறைமுகம் இன்று கப்பல் போக்குவரத்து இன்றி, பயன் ஏதுமின்றி இருப்பதால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இன்றி வறுமையில் வாடுகின்றார்கள். அதனால் மாண்புமிகு என் தெய்வமாகிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நாகை துறைமுகத்திற்கு பயணிகள் கப்பலும், சரக்கு கப்பலும் வந்து செல்ல ஆவன செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

தமிழ்நாட்டில் பிரதான மீன்பிடி தளமாக விளங்கும் நாகப்பட்டிணத்தில்தான் அதிகமான அளவில் மீன்களும் இறால்களும் பற்பல வகையில் கிடைக்கின்றன. ஆதலால் நாகை கடற்கரைப் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடி துறைமுகம் அமைத்துத் தரவும், கடல் மண் அரிப்பைத் தடுப்பதற்கு ஏதுவாக தடுப்புச் சுவர் ஒன்று அமைத்துத் தரவும் வழிவகை செய்ய வேண்டுமாய்ப் பணிவன்புடன் வேண்டுகின்றேன். பிடிக்கின்ற மீன்களைப் பதனிடுவதற்கு மீன் பதனிடும் நிலையம் (பிஷ் கியூரிங் ஷெட்), மீன் உலர்த்தும் தளம் (பிஷ் டிரையிங் யார்டு), உலர்த்தப்பட்ட மீன்களை இருப்பு வைப்பதற்கு கிடங்கு வசதி, கூட்டுறவு வங்கிகள் மூலம் அருகாமையில் உள்ள நகரங்களுக்கு மீன்களை எடுத்துச் செல்ல வாகன வசதி ஆகியவற்றைச் செய்து தருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

சிறுதூர்—வேளாங்கண்ணி இணைப்புப் பாலம் மூலம் தான் புயல் சீற்ற காலங்களிலும், பெண்கள் பிரசவ காலங்களிலும் மருத்துவ வசதியை பெறுவதற்கும், புயலிலிருந்து தப்பிப்பதற்கும் ஆற்றைக் கடந்து வேளாங்கண்ணிக்கு வரவேண்டும். இவர்கள் சுலபமாக வந்து செல்ல சிறுதூர்—வேளாங்கண்ணி இணைப்புப் பாலத்தைக் கட்டித்தர ஆவன செய்யுமாறு வேண்டுகின்றேன்.

மாணவ, மாணவிகள் பள்ளிகளுக்குச் செல்ல பி. ஆர். புரம்-கர்மேஸ்வரம் இணைப்புப் பாலம் கட்டித்தர வேண்டுமாய்

பணிவன்புடன் வேண்டுகின்றேன். அப்பாலம் இணைக்கப்படவில்லை என்றால் பள்ளி மாணவர்கள் சுமார் 3 மைல் தூரம் சுற்றி வர வேண்டும்.

தேர்தல் காலங்களில் கோரிக்கையாக, விழுந்தம்பாடி கிராம மக்கள் அவ்வூரில் கால்நடை மருத்துவமனை கட்டித் தர வேண்டுமென்ற வேண்டுகோள் ஒன்றை வைத்தார்கள். எனவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அக்கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மிகமிகப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

புயல், வெள்ளம், வறட்சி இம்மூன்றும் வருடந்தோறும் எனது நாகை தொகுதியை சேர்ந்த விவசாயப் பெருமக்களைத் தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக வெள்ள காலங்களில் வரும் அதிகப்படியான மழைநீரை பெரிய அளவில் குழிகள் உள்ள இடங்களில் தேக்கி, கடலில் கலக்கும் நீரை தேக்கி சிறிய அணைகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு தேக்கினால் நிலத்தடி நீர் மட்டம் உயருவதுடன் ஆண்டு முழுவதும் விவசாயம் நடைபெற்று உற்பத்தி பெருக வாய்ப்பு உள்ளது. இதனை தொலைநோக்குப் பார்வையுடன் எனது நாகைப் பகுதியில் செயல்படுத்த வேண்டுமாய் மனித தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வேண்டுகின்றேன்.

நாகப்பட்டினம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தை இணைக்கின்ற வகையில் திருத்துறைப்பூண்டி, செம்பியன்மாதேவி, பாலக்குறிச்சி ஆகிய இடங்களுக்கு நகரப் பேருந்துகள் விட்டு, அப்பகுதி மக்களின் குறையைப் போக்கிட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வேண்டுகின்றேன்.

வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்கு கீழையூர் வழியாக புதிய பேருந்துகளை விடுமாறு பணிவன்போடு வேண்டுகின்றேன்.

பழையாறு, மல்லிப்பட்டிணம், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் அரசு மானிய விலையில் தரமான டீசல் பங்குகள் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. அதேபோல், நாகையில் சுமார் 700 மீன்பிடி படகுகள் இருப்பதால், அங்கேயும், அரசு மானிய விலையில் ஒரு டீசல் பங்கு அமைத்துத் தருமாறு எனது தெய்வமாகிய இதய தெய்வத்தை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



புதிதாக அறிவிக்கப்பட்ட காயிதே மில்லத் மாவட்டத் தலைநகரான நாகப்பட்டிணம் மருத்துவமனையில் ஸ்கேனிங், பிசியோதெரப்பி, நவீன இரத்த சேமிப்பு நிலையம் ஆகிய வசதிகளை ஏற்படுத்த வழிவகை செய்யுமாறு என் தெய்வத்தை பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

நாகை—காயிதே மில்லத் மாவட்டத்திற்கென தனியாக நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மாவட்ட அலுவலகம் 26 இலட்சம் செலவில் தொடங்க அனுமதித்த எனது தெய்வமாகிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியினை காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

மேலும் மீனவர்களின் நலன் கருதி சுமார் 4 ஆயிரம் இலவச வீடுகள் கட்டப்படுவதற்கும், குடும்ப ஈட்டுத் தொகையாக 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டமைக்கும், மீன்பிடி தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ. 60-ஐ ரூ. 270 ஆக உயர்த்தி எங்கள் மீனவ சமுதாய மக்களின் நெஞ்சங்களை நிறையச் செய்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் நானும், எங்கள் சமுதாயத்தினரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ்ந்திட, தன் வாழ்நாளை அர்ப்பணித்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களைப் போல் (மணி அடிக்கப்பெற்றது) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. ஆர். கோடிமாரி : மீனவ சமுதாயத்திற்காக தன்னை மெழுகுவர்த்தியாக ஆக்கி ஒளி தந்து உயிர் நீத்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்கள் பிறந்த இடமான சென்னையிலே அவருக்கு ஒரு சிலையை, அவருடைய நினைவுச் சின்னமாக முழு உருவச் சிலையை மாண்புமிகு என் இதய தெய்வம் அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்க வேண்டுமாய் எனது அன்பு தெய்வத்தை பணிவன்புடன் வேண்டுகின்றேன். இந்த மாமன்றத்தில் 1992—93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும்,

[திரு. ஆர். கோடிமாரி] [1992 மார்ச் 12

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த நாகை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கும் 1992–93 ஆம் ஆண்டிற்கான 'வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்தியிலே மாண்புமிகு நிதியமைச்சர் மன்மோகன்சிங் அவர்கள் ஒரு புதிய பொருளாதார கொள்கையை ஏற்படுத்தி புரட்சி செய்திருப்பதைப் போல நம்முடைய அரசில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய ஆலோசனைகளோடு இங்கே தமிழக மக்களுக்கு, அதிலும் குறிப்பாக தாய்மார்களுக்கு நல்ல பல சலுகைகளை இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வாசித்தளித்த நிதிநிலை அறிக்கையில் மூன்றாம் பக்கத்தில் 'அண்மையில் தாக்கல் செய்துள்ள மத்திய அரசின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், ஏழை எளிய மக்களை பாதிக்கும் வகையில் எந்தவித நடவடிக்கைகளும் அறிவிக்கப்படவில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்' என்று கூறி இந்த அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் மத்திய அரசை பாராட்டி இருப்பது எங்களுக்கு மேலும் மகிழ்ச்சியை அளிக்கிறது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து வரும் காவல்துறை தனது பணியைச் செவ்வனே செய்து வருகிறது. அதை மேலும் சீரமைக்க இந்த அரசு அவர்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். ஆனால் நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து செயல்படாமல் மறு பக்கத்தையும் பார்த்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது இன்றைய தினம் மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வரும் காவல் துறையின் ஒருசில காவலர்களின் நடவடிக்கைகளால் இந்தத் துறைக்கு பொதுமக்களிடத்தில் நல்ல பெயரை வாங்க முடியாமல் இருக்கிறது. இந்த அரசு இதை ஆராய்ந்து அவைகளை



1992 மார்ச் 12] [திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்]

முதலில் களைய வேண்டுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களை அறிவித்திருப்பதை போல கால்நடைச் செல்வங்களுக்கும் சிறந்த மருத்துவப் பணிகளைச் செய்து கொடுக்க முன்வந்திருக்கும் இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். கால்நடை செல்வத்திற்கு தனிக்கவனம் செலுத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு என் தொகுதியான மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முருகமங்கலம் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

என் தொகுதியான மயிலாடுதுறையைப் பற்றி கூறும்போது முன்னோர்கள் ஒரு பழமொழியைச் சொல்வார்கள். 'ஆயிரம் ஆனாலும் மாயவரம் ஆகாது' என்று கூறி மயிலாடுதுறையின் அழகையும் அமைப்பையும் வியந்து கூறுவார்கள். ஆனால் இன்றையதினம் மயிலாடுதுறை நகரம் களையிழந்து காணப்படுகிறது. இங்கே சாலைகள் சரியான முறையில் இல்லை. போக்குவரத்துக்கு இன்னும் பழைய பாலங்களே இருக்கின்றன. இங்கே சாலையின் குறுக்கே அரசு பொது மருத்துவமனை அருகில் ஒரு போக்குவரத்துப் பாலத்தை கட்டித்தர வேண்டுகிறேன். அவ்வாறு பாலம் அங்கே கட்டப்பட்டால் 50 சதவீத போக்குவரத்துக் குறைக்கப்பட்டு பொதுமக்கள் மிக எளிதாக நகரத்திற்கு வந்து சேர்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

நடப்பு நிதியாண்டில் தமிழக தாய்மார்களுக்கு அதிக அளவுக்கு பல சலுகைகளை செய்து வரும் தாயுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மயிலாடுதுறையில் இருக்கும் அரசினர் பொன்னம்பிளை மகளிர் கல்லூரிக்கு புதிய பாடப் பிரிவுகளை அதாவது பி.காம்., முதுகலை பட்டப் படிப்பு பிரிவுகளை அனைத்தையும் வழங்கி விரிவுபடுத்த வேண்டுமென்று வேண்டுகிறேன். மேலும் இந்தக் கல்லூரி தொடங்கப்பட்ட நாளிலிருந்த பாடப் பிரிவுகளே இன்றுவரையில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு, அக்கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டாக இருப்பதாலும், இது மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியின் போது வருவதாலும், புதிய பாடப் பிரிவுகளை மகளிர் கல்லூரிக்கு உடன் செயல்படுத்திக் கொடுக்கும்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் 12–45

நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில் குறிப்பாக மயிலாடுதுறையில் அதிகமாக கரும்புப் பயிர் செய்யப்படுகின்றது. அங்கே நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி சர்க்கரை ஆலை ஒன்று உள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட கரும்புகள்

சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் விவசாயிகளுக்கு கரும்புக்கு உரிய பணத்தை மொத்தமாக கரும்பாலை நிர்வாகிகள் கொடுப்பதில்லை. இதனால், கரும்பு உற்பத்தியாளர்கள், உடன் பணம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அதற்காக ஒரு போராட்டத்தையே நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். சர்க்கரை ஆலையில் போதிய பணம் இருந்தும், அது உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இதற்கு மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு சேரக்கூடிய தொகையைக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலனில் முக்கியமான நோக்கமாக போதிய கல்வி வசதிகள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகள் தங்களுடைய கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்புகிறார்கள். அந்த சர்க்கரை ஆலைகள், கரும்பை அரைத்து, அந்த சர்க்கரைக்கு உரிய கணக்கின்படி ஒவ்வொரு டன்னுக்கும் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். இந்த பட்டுவாடா செய்வதிலே, இரண்டு விதமாக பட்டுவாடா செய்கிறார்கள். மத்திய அரசு நிர்ணயிக்கின்ற விலையை முதல் தவணையாகக் கொடுக்கிறார்கள். அடுத்து மாநில அரசு தரக்கூடிய விலையை காலதாமதம் செய்து பட்டுவாடா செய்வதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. எனவே, தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய பணம் காலதாமதம் இல்லாமல் கிடைக்க வேண்டும், சர்க்கரை ஆலைகள் காலதாமதத்தோடு கொடுத்தால், கொடுக்கக்கூடிய பணத்திற்கு 15 சதவிகித வட்டியோடு கொடுக்க வேண்டும் என்ற புதிய உத்தரவை, இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு உடனடியாக அந்தத் தொகையைக் கொடுக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலனை முக்கிய நோக்கமாகக் கொண்டு போதிய கல்வி வசதிகளைச் செய்து கொடுக்க முன்வந்து இருக்கும் இந்த அரசை வாழ்த்தி வரவேற்கிறேன்.





வரும் ஆண்டில், ரூ. 23 இலட்சம் செலவில், 13 புதிய மாணவியர் இல்லங்கள் தொடங்க இருக்கும் இந்த அரசை, மயிலாடுதுறை நகரில் ஒரு மாணவியர் இல்லத்தை அமைத்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நமது தமிழக அரசில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகள் அனைத்தும் மக்களுக்குப் போய் அடைகிறதா என்பதைப் பார்க்கிறபோது, இவைகள் முழுவதும் மக்களுக்குச் சென்று அடைவதில்லை. நகர்ப்புற ஏழை மக்கள் தொழில் துவங்க அரசிடம் உள்ள திட்டங்கள் குறித்து, அந்தந்தத் தொகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் செயல்படுவதால் திட்டத்தின் பலன் ஏழை எளியவர்களுக்கு எப்படிக் கிடைக்கும் என்பதை அறிய முடியாமல் உள்ளது.

பெண்கள் சுயதொழில் துவங்கும் திட்டங்களை தமிழக முதல்வர் அறிவித்து இருப்பதை நான் பாராட்டுகிறேன். நிதி நிலை பற்றாக்குறையை எடுத்துக் கொள்வோமானால், செயல்படுத்த இருக்கும் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. அவைகள் அனைத்தையும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடத்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை நிச்சயம் செயல்படுத்த தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்க்கும் காவிரியின் குறுக்கே, அரசு பொது மருத்துவமனைக்கு அருகில், போக்குவரத்துப் பாலம், பாசனத்திற்காகவும், மயிலாடுதுறை நகரில் உள்ள குளங்களில் வரும் நீர், சென்று அடைவதற்கும், மூவளூர் கிராமத்தில், காவிரியிலிருந்து பிரியும் பழைய காவிரியில் ஒரு ரெகுலேட்டரை இந்த ஆண்டிலே வேலை துவங்கி நிறைவேற்றித் தர நல்ல உள்ளம் படைத்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'. மக்களின் சுகாதாரத்தைக் காக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் தமிழகத்தில் பல மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லாமல் இருக்கின்றன. உதாரணமாக மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையை எடுத்துக் கொண்டால், உயிர் காக்கும் மருந்துகள் உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்யும்படியாக சுகாதார அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வரும் ஆண்டில், ரூ. 46 கோடி ஒதுக்கீட்டைக் கொடுத்தாலும் பெருகி வரும் ஜனத்தொகையைப் பார்க்கும்போது, இன்னும் சற்று அதிகமாக நிதியினை ஒதுக்கியிருக்கலாம்.

[திரு. எம். எம் எஸ். அபுல்ஹசன்] [1992 மார்ச் 12

பிற்பகல் 12–50

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் எனது தொகுதியான மயிலாடுதுறை நகரிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு அதிக அளவில் நோய் தீர்க்கும் மருந்துகளை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. மேலும் அங்கு ஒரு ஜெனரேட்டர் பொருத்தப்படாமல் இருக்கிறது. மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் ஒரு ஜெனரேட்டரை அவசியம் பொருத்திக் கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சரவர்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியான மயிலாடுதுறையில் இருக்கும் ஒரே ஒரு பேரூராட்சியான மணல்மேடு மருத்துவமனையில் இதுவரையில் ஒரு பெண் மருத்துவர் கூட நியமனம் செய்யப்படாமல் அதன் காரணமாக இன்றைய தினம் அங்கே பெண்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அங்கே ஒரு பெண் மருத்துவரை உடன் நியமனம் செய்ய வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறை தொகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியம் போசங்காடு கிராமத்தில் ராஜ வாய்க்காலின் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமாய் இந்த அரசை வேண்டுகிறேன். நாட்டு மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகையில் 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்பு.

### (அ) பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் ஒப்புதலுடன் செய்யப்பட்டுள்ளன எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:

24–3–1992 செவ்வாய்க்கிழமை எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருட்கள்:

1. 1992–93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன் பண மானியக் கோரிக்கைகளை பேரவை முன் வைத்தல்.



1992 மார்ச் 12] [பேரவைத் தலைவர்]

2. 1991–92 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையை பேரவைக்கு அளித்தல்.

3. மானியக் கோரிக்கைகள் விவாதம்.—

மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம்.

மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்து பணிகளும், கப்பல் போக்குவரத்தும்.

மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை.

மானியக் கோரிக்கை எண் 58—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

மானியக் கோரிக்கை எண் 59—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.

25–3–1992—புதன்கிழமை:

மானியக் கோரிக்கை எண் 47—செய்தி திரைப்பட தொழில்நுட்பவியல்.

மானியக் கோரிக்கை எண் 51—சுற்றுலா.

மானியக் கோரிக்கை எண் 52—தமிழ் வளர்ச்சி பண்பாடு.

ஏற்கெனவே அறிவித்துள்ள நிகழ்ச்சி நிரலில் 24 ஆம் தேதி எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள் 25 ஆம் தேதியும், 25 ஆம் தேதி எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள் 24 ஆம் தேதியும் எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலின்படி முன்பண செலவிற்கான கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தலும் மற்றும் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தலும், ஏற்கெனவே அறிவித்தபடி 24 ஆம் தேதியே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 12

4. வரவு-செலவுத் திட்டம்,
1992-93 பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரெ. சியாமளா.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு ''

என்ற உலகப் பொது மறையாம் திருக்குறளில் தெள்ளத் தெளிவாகக்கூறப்பட்டுள்ள அனைத்து இலக்கணங்களையும் ஒருங்கே பெற்றவர் நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அவர்களது அறிவாற்றலும் கருணை உள்ளமும், சிந்தனைச் செருக்கும், அஞ்சா நெஞ்சமும், தமிழக மக்களின் வாழ்விற்கு ஒளிகாட்டும் என்ற நம்பிக்கையில் ** கருணாநிதியை ஆட்சியிலிருந்து அகற்றி, புரட்சித் தலைவியை தமிழக முதல்வராக ஏற்றுக்கொண்டு, தனது தமிழக மக்களை ஏமாற்றாமல் சுமார் ரூ. 1,220 கோடி நிதி பற்றாக்குறையுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, மது அரக்கனை அடியோடு அழித்து, விடுதலைப் புலிகளை அடித்து நொறுக்கி, நசுக்கி, காவிரி நீர்ப் பிரச்சினையை துணிவுடன் சந்தித்து, வெற்றிக்கு மேல் வெற்றி கொண்டு பல சாதனைகளைப் புரிவதற்காகவே, சரித்திரத்தால் கண்டு பிடிக்கப்பட்ட ஈடு இணையற்ற ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பட்ஜெட்டை பாராட்டிப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திருமதி. ரெ. சியாமளா : குறிப்பாக ஏழை எளிய மக்களுடைய வசதி வாய்ப்பற்ற மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், உறுதி செய்யவும், நலிவுற்ற பிரிவினரை முன்னேற்றவும், குழந்தைகள், கைக் குழந்தைகள், தாய்மார்கள், ஆதரவற்ற முதியோர் ஆகியோருக்கு பல சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்த பட்ஜெட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பட்ஜெட் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கும் கண்ணியமான பட்ஜெட் ஆகும். ஏழை தாய்மார்கள் பயன்படுத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மார்ச் 12] [திருமதி. ரெ. சியாமளா]

தும் சில வீட்டு உபயோகப் பொருள்கள் மீது வரிகள் குறைக்கப்பட்டும் சில பொருள்கள் மீது வரிகள் நீக்கப்பட்டும் இருப்பதைப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-55

ஒரு இலட்சம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ. 200-ஐ ரூ. 300 ஆக உயர்த்தியது, முதியோர் உதவித் தொகை ரூ. 50-லிருந்து 70 ஆக உயர்த்தியது, ஆகியவற்றிற்காக எங்களது தலைவியைப் பாராட்டுகிறேன்.

சிறு குடும்பக் கோட்பாட்டை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம் ஆகியவற்றைப் பாராட்டுகிறேன்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்கும் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராகிய எங்கள் தங்கத் தலைவியே, கோவில்பட்டி தாலுகாவைப் பிரித்து, பாரதி பிறந்த எட்டயபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா ஒன்றை அமைக்க இப்பேரவையின் மூலம் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி தந்த காவியச் செல்வியே, கிடப்பில் கிடந்த கிருஷ்ணா நதித் திட்டத்தை விரைவுபடுத்தும் தாங்கள் எங்கள் கோவில்பட்டிக்கு சீவலப்பேரியிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தை செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, எங்களுக்கு சீவலப்பேரியிலிருந்து கோவில்பட்டிக்கு தனி பைப் லைன் ஒன்றை அமைத்துத் தந்து எங்களது தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தாய் உள்ளத்தோடு தாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடிக்கு அடுத்து மிக வேகமாக வளர்ந்து வரும் தொழில் நகரமான எங்கள் கோவில்பட்டியில் அதிகமான வாகனப் போக்குவரத்து இருப்பதால் இரயில்வே மேம்பாலம் ஒன்றை அமைத்துத் தரவும், பயணியர் விடுதி ஒன்றை பொதுப் பணித் துறையின் சார்பாக அமைத்துத் தரவும் தங்களைத் தாழ்மையோடு வேண்டுகிறேன்.

வளர்ந்துவரும் நகரமான கோவில்பட்டி, தொழில் வளம் பெருகிவரும் இடமாக உள்ளது. நகரத்தை அழகுப்படுத்தும் வகையில் நகரத்தின் முக்கிய இடங்களில் '' சோடியம் வேப்பர் லாம்ப் '' அமைத்துத் தர தங்களை தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

[திருமதி ரெ. சியாமளா] [1992 மார்ச் 12

சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டி, இரண்டாவது பெரிய நகரமாக இருப்பதாலும் மில் தொழிலாளர்கள், தீப் பெட்டித் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதாலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அதிகமாக குடியிருப்புகளைக் கட்டித் தர தங்களைப் பணிவோடு வேண்டுகிறேன்.

புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் மூலம் அனைவருக்கும் நல்வாழ்வு தரும் எங்களது ஒப்பற்றத் தலைவி எங்கள் கோவில் பட்டி நகருக்கு மருத்துவமனையை நவீனமயமாக்கி அதிக படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஆக்கித்தருமாறு தங்களை அன்போடு வேண்டுகிறேன்.

கோவில்பட்டியில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி இல்லாமல் பெண்கள் சிவகாசி, விருதுநகர், மதுரை நெல்லை போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி அமைத்துத் தரும்படி தங்களைத் தாழ்மையோடு வேண்டுகிறேன்.

பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒரு இருக்கையும், கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் ஏற்பாடு செய்துள்ள எங்களது தங்கத் தலைவியே, பாரதி பிறந்த அந்த வீட்டையும் மணிமண்டபத்தையும் புதுப்பித்து, சீர்செய்து, அங்கே ஒரு பன்னாட்டு மொழி ஆராய்ச்சி மையம் நிறுவ வேண்டுமென்று தங்களை மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த குருவிக்குளத்தில் ஒரு காவல் நிலையம் அமைத்துத்தர காவியத் தலைவியே! தங்களை கரம் கூப்பி, வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்பட்டியைச் சேர்ந்த திருவேங்கடபுரத்திற்கு அருகிலே நிச்சோப நதி என்று ஒன்று உள்ளது. அந்த நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தந்தால் எங்களது சிதம்பரனார் மாவட்டம், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 60-க்கு மேற்பட்ட கிராம மக்கள் பயனடைவார்கள். ஆகவே, அங்கே ஒரு பாலம் கட்டித் தர உன்னத தலைவியாக விளங்குகின்ற எங்களது ஒப்பற்றத் தலைவியை 5 1/2 கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான எங்களது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை பணிவோடு வேண்டுகிறேன்.



1992 மார்ச் 12] [திருமதி. ரெ. சியாமளா]

இன்னும் எங்கள் கோவில்பட்டித் தொகுதியில் குடிநீர் பிரச்சினை மிகவும் கடுமையாக பாதித்திருப்பதால் எங்களது குடிநீர்ப் பிரச்சினையை தாங்கள் தாய் உள்ளத்தோடு பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு மன்றாடிக் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-00

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ திரு. சா. பன்னீர் செல்வம்.

__திரு. சா. பன்னீர்செல்வம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நன்றியை சொல்லி ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். திண்டிவனம் கலைக் கல்லூரி சாலைக்கு ரூ. 24 லட்சம் நிதி ஒதுக்கித்தந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரி தொடங்கப்பட்ட நாள் முதலாய் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வந்தனர். அவ்வப்போது தரப்பட்ட வாக்குறுதிகளும் காற்றிலே பறந்துபோன நிலையிலே ஏறத்தாழ 17 ஆண்டுக்கால பிரச்சினையை நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தமைக்கும், அதற்கு அவர்கள் தனிக் கவனம் எடுத்துக் கொண்டதற்காகவும் மீண்டும் நன்றி கூறி எனது உரையைத் தொடங்குகிறேன்.

நாவலர் அவர்களின் நன் முயற்சியால் உருவான இந்த பட்ஜெட்டை பொதுவாக எல்லா தரப்பினர்களும் வரவேற்றிருக்கின்றார்கள். இதில் ஏழைகளை அதிகம் பாதிக்கும் வரிச்சுமை இல்லை. சாதாரணமாக நகரத்தில் உள்ள அனைத்து ஓட்டல்களும் ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் ரூபாய் வருமானம் பெறுபவையாகும். இவைகளுக்கு விற்பனை வரி விதிப்பதால் ஓட்டல் பண்டங்களின் விலை உயர்ந்து பொது மக்களுக்கு சிரமம் ஏற்படும். வரிவிலக்கை, 3 இலட்சம் என்று குறைத்திருப்பதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

உள்ளாட்சி நிறுவனங்களுடைய நிதி நிலைமையை மேம்படுத்த நிலவரி கிட்டத்தட்ட 3 மடங்காக ஆக்கப்பட்டுள்ளது. தற்போது 100 ரூ. வரி தான் கட்டியிருக்கிற சிறு விவசாயிகள் அடுத்த ஆண்டிலே 300 ரூ. கட்ட வேண்டி வரும். இதை

விவசாயிகள் வரவேற்காவிட்டாலும் எதிர்ப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், வருடத்திற்கு 18 ஆயி ரத்திற்கு மேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு 100 ரூ. வரி கட் டச் சொன்னால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆர்ப்பாட் டம் நடத்தப் போவதாக அறிக்கை விடுகிறார்கள். தற்போ துள்ள நெருக்கடியிலே அவர்கள் அரசோடு ஒத்துழைக்க வேண் டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாகக்கேட்டுக் கொள்கிறேன்

தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதை உளளபடியே நான் வரவேற்கிறேன். விழுப்புரம் வள்ளலார் மாவட்டத்தினுடைய எல்லைகளை நிர்ணயிக்கின்ற நேரத்திலே ஊராட்சி ஒன்றியங்களுடைய எல்லைகளையும் மாற்றியமைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மயிலம் ஊராட்சி ஒன் றியத்திலுடைய அருகில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள கீழ இடையாளம், கன்னிகாபுரம் போன்ற கிரா மங்கள் 50 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கும் மரக் காணம் ஊராட்சி ஒன்றியத்திலுடைய எல்லைக்குள் உட்படுத்தப் பட்டுள்ளன. இது போன்ற கோரிக்கைகளை புதிய மாவட்டம் உருவாக்கும்போது தீர்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டு தோறும் 200 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத் துவது வழக்கம். தற்போது பல மடங்கு உயர்த்தி 400 கால் நடை மருந்தகங்கள் தொடங்குவது உண்மையிலேயே மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும். மயிலம் ஊராட்சி ஒன்றியம் விடூர் கிரா மத்தில் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் தொடங்க வேண்டு மென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்விக்காக அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களிலே கல்வியின் தரம் உயர வேண்டுமானால் போதிய ஆசிரியர்களும் கட்டிட வசதிகளும் அமைய வேண்டும். 1,400 இடை நிலை ஆசிரியர்களின் பதவிகளை ஏற்படுத்தி இருப் பது சிறிது ஆறுதலாக உள்ளது. ஆனால் அதை விட 4, 5 மடங்கு கூடுதலாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். கட்டிட வசதிக்கு முன் உரிமை கொடுத்த பின்பு இத் திட்டம் தொடங்க வேண்டுகிறேன். கிராமப் புறங்களிலே தொடக்கப் பள்ளிகளிலேயும் சரி உயர்நிலை வகுப்புகளிலேயும் சரி மாணவர்களுக்கு வகுப்பறை வசதி என்பதே இல்லை. திண்டிவனம் கலைக் கல்லூரியில் இளம் அறிவியல்-வேதியியல் தமிழ் வழி வகுப்பு, வரும் கல்வி ஆண்டிலே தொடங்குவதற்கு அனுமதி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு மையங்களிலே திடீரென்று எண்ணிக்கையை 30 பெர்சன்டிலேயிருந்து 50 பெர்சென்ட் வரையில் குறைத்திருக் கிறார்கள் இது பற்றி அமைச்சரோ அல்லது அதிகாரிகளோ





எதுவுமே அறிவிப்பு செய்யவில்லை. ஆனால் எண்ணிக்கை மட் டும் ஒரேயடியாக பாதியாகக் குறைந்துள்ளது. கிராமப்புறங் களிலே சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. விடூர் நீர்த்தேக்கத் திற்கு பராமரிப்புப் பணிக்காக....(குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் சனிக் கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் உண்மையான வருகையை எடுத்து அதன் மூலமாகத்தான் குறைக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, ஒரேயடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது தவறு. அங்கே வருகிற வருகைப் பதிவேட்டின்படி எவ்வளவு குழந்தைகள் வருகிறார் களோ அவ்வளவு குழந்தைகளுக்கும் உணவு அளிக்கப்படுகிறது. எவ்வளவு குழந்தைகள் வந்தாலும்—100 குழந்தைகள் வந் தாலும் அந்த 100 குழந்தைகளுக்கும் உணவு அளிக்கப்படுகிறது. அதற்கு எங்கேயும் குறைபாடு இல்லை. ஆகவே, குழந்தை களுக்கு சாப்பாடு இல்லாத சூழ்நிலை, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் எந்த சத்துணவுக் கூடத் திலும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

<u>திரு சா. பன்னீர்செல்வம் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி, ஆனாலும் என்னுடைய தொகுதியிலே இப்படிப்பட்ட ஒரு குறை இருக் கிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அந்தக் குறையை அவர்களிடத்தில் நேரடியாகச் சொன்னால் அதை அவர்கள் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்து, விடூர் நீர்த்தேக்கத்திற்கு பராமரிப்புப் பணிக்காக ஆண்டுக்கு ரூ. 3.5 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இந்தப் பணம் அங்கு எலக்ட்ரிக் செலவினங்களுக்கும், ஷட்டர், கதவு பராமரிப்பு டெலிபோன் பில் போன்றவைகளுக்கும் மட்டுமே செலவு செய்ய போதுமானதாக உள்ளது. அந்த அணை 3,600 ஏக் கருக்கு பாசனம் அளிக்கிறது. அதனுடைய கால்வாய் வாய்க்கால் பராமரிக்கப்படுவதில்லை. அணையை அழகுபடுத்துவது இல்லை. இந்த அணை 66 ஆம் ஆண்டு உடைந்து போவதற்கு முன்னால் அழகுற அமைந்திருந்தது. பூங்காக்கள், மாதிரி அணை, புல் வெளிகள், நீர் வீச்சுவது இப்படி பார்ப்பதற்கு ரம்யமாக இருந்

[திரு. சா. பன்னீர்செல்வம்] [1992 மார்ச் 12

நது. இப்போது அப்படி இல்லை. குறைவான நிதி ஒதுக்கீடே
இதற்குக் காரணம் என்று சொல்கிறார்கள். எனவே அதற்கு
கூடுதலான நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமாய் இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ஒரு கோடி ரூபாய் ஒரு
யூனியனுக்கு என்பது எங்கள் மாவட்டத்திலே இதுவரையிலும்
அமல்படுத்தப்படவில்லை. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டப்
பணிகளின் ஒன்றிய அதிகாரிகள் சரியாகச் செயல்படுவதில்லை.
உள்ளாட்சிகளிலே உறுப்பினர்கள் இல்லாததால் அதிகாரிகள்
தன்னிச்சையாக முடிவு செய்கிறார்கள். நான் என்னுடைய
தொகுதியிலே ஒன்றிய அதிகாரிகளை அழைத்துக்கொண்டு
குறைகளை அறிய கிராமம் கிராமமாகப் போனேன். அங்கு
மக்கள் சொன்ன கோரிக்கைகளையும் தேவைகளையும் குறித்
துக்கொண்டு வந்தோம். ஆனால் அவைகளைச் செயல்படுத்
தாமல் ஆதாயம் வரும் பணிகளாகப் பார்த்து ஜேவிடி வேலை
செய்கிறார்கள். மக்கள் கேட்ட கோரிக்கைக்கும் ஜேவிடி
வேலைக்கும் சம்பந்தமே இல்லை. ஒரு கிராமத்திலே குடிநீர்
விநியோகம் இல்லை என்று அந்த மக்கள் அதற்கு முன்னுரிமை
கொடுக்கிறார்கள். ஆனால் அதை விட்டுவிட்டு தெருக்களுக்கு
பார் மண் அடிப்பதற்கு அந்தக் கிராமத்திற்கு ரூ. 45,000 ஒதுக்
கப்படுகிறது. அடுத்து, ஒரு கிராமத்திற்கு இணைப்புச் சாலை
வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். ஜேவிடியிலும் போது
மான பணம் உள்ளது. அந்தப் பணியைச் செய்யாமல் தெருக்
களுக்கு ஸைடு வெட்டுவதற்காக ரூ. 40,000 அந்த பஞ்சாயத்
துக்கு ஒதுக்கப்படுகிறது. இப்படியே போனால் ஜேவிடி
யினுடைய அர்த்தமே இல்லாமல் போய்விடும். எம்.எல். ஏக்
களாகிய எங்களிடம் தான் கிராம மக்கள் முறையிடுகிறார்கள்.
ஆனால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஜேவிடி
வேலைகளை முடிவு செய்யும் அதிகாரத்தை எம். எல். ஏக்
களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
18—2—1992 அன்று திண்டிவனத்தில் கோரமான சாலை
விபத்து நடந்துள்ளது. செண்டூர் நெடி, சித்தனி இந்த கிராமங்
களிலிருந்து ஆதிதிராவிட விவசாயக் கூலிகள் பிழைப்பதற்காக
சென்னையை அடுத்துள்ள மதுரவாயில் பக்கம் நெல் அறுக்க
லாரியிலே சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்த
போது, 17 பேர்கள் ஸ்தலத்திலேயே கோரமாக மாண்டு
போனார்கள். அந்தக் குடும்பங்களுக்கு வேறு ஆதரவு இல்லை.
நிர்கதியாக நிற்கும் 17 குடும்பங்களுக்கு முதல்வர் அவர்கள்
நிவாரண நிதியிலிருந்து குடும்பம் ஒன்றுக்கு ரூ. 25,000 நிதியுதவி
அளிக்க அந்தக் குடும்பங்களின் சார்பிலே முதல்வர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் கடந்த நிதி நிலை அறிக்கையின் போதே
கூட எங்களுடைய மயிலம் ஒன்றியத்தைச் சேர்ந்த ரெட்டணை
கிராமத்திற்கு மேம்பாலம் ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று



1992 மார்ச் 12] [திரு. சா. பன்னீர்செல்வம்]

கேட்டிருந்தேன். இந்த நிதிநிலை அறிக்கையிலாவது அதை
நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று சென்னை—திருச்சி நெடுஞ்சாலையில் மையப்
பகுதியிலே திண்டிவனம் அரசு மருத்துவமனை இருப்பதால்
சாலை விபத்து ஏற்படுகின்றது. அந்த விபத்திலே பாதிக்கப்
பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு விபத்துப் பிரிவையும்
நான் கேட்டிருந்தேன். அதையும் இந்த முறை நிதியமைச்சர்
அவர்கள் கவனமாகப் பரிசீலனை செய்து இந்த முறை நிறை
வேற்றிக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டு முடிக்கிறேன், நன்றி,
வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு கா. பூ. முனுசாமி.
இருக்கையில் இல்லை. திரு. ஆ. சுப்புரத்தினம்.

<u>திரு ஆ. சுப்புரத்தினம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1992–93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை
மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய
எண்ணங்களை வெளிப்படுத்த வாய்ப்பு அளித்த தங்களுக்கு
முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரியப்படுத்திக்கொள்
கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் புனித பொற்
கால ஆட்சியில் நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால்
அளிக்கப்பட்டுள்ள இந்நிதிநிலை அறிக்கை அனைவராலும் மிகவும்
வியந்து பாராட்டப்பட்டு வருகின்றது.

பிற்பகல் 1-10

எப்போதும் விழிப்புடன் இருத்தல், தெளிந்த அறிவைப்
பெற்றிருத்தல், துணிந்து செயல்படுதல் ஆகிய இம்மூன்றும்
ஒவ்வொரு அரசும் கொண்டொழுக வேண்டியவை என வள்ளுவப்
பெருந்தகை குறிப்பிடுகிறார். இம்மூன்று பண்புகளின் பிரதி
பலிப்பே மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் என இவ்வுரையில் குறிப்பிட்டிருப்பது எண்ணுந்
தோறும் இன்பமளிப்பதாகும்.

''மங்கையரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் சாக்காடுமில்லை, போருமில்லை'' என்ற புரட்சிக்
கவிஞர் பாரதிதாசனின் கவிதா அடிகளுக்கு உண்மைப் பொருளாய்
விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் இந்நாட்டின் சட்டத்தையும், சமுதாயத்தை

யும் சீர்குலைத்து வந்த விடுதலைப் புலிகள் போன்ற பயங்கரவாத சக்திகளிடமிருந்து தமிழகத்தை மீட்டு அமைதியை நிலைநாட்டியமைக்கு தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை தமிழ்த்தாயாக ஏற்று போற்றி கைகூப்பி வணங்கும் என்பது திண்ணம்.

சமீபத்தில் புதுடெல்லியில் ஏற்பட்ட அரசியல் தட்பவெப்ப நிலை மாற்றத்தின் காரணமாக மத்திய அரசின் ஸ்திரத்தன்மையே வினாக் குறியாக்கப்பட்டபோது இந்த அரசியல் புயலில் மத்திய அரசு மூழ்கிவிடும் என்றெல்லாம் அரசியல் ஆருடம் கணிக்கப்பட்டது.

மத்திய அரசு கவிழ்ந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்று தனக்கே உரித்தான தன்மையில் மரியாதைக்குரிய எல். கே. அத்வானி அவர்கள் தெரிவித்தார்கள். இடைத்தேர்தல் வந்தால் மக்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று வி.பி. சிங் அவர்கள் ஒருவித எதிர்பார்ப்பு உணர்வுடன் முழங்கினார்.

மாண்புமிகு பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களும்

"If the Government is defeated on the floor of the House, I will not go to the Central Hall or to my Office but will Striataway drive to Rashtrapathi Bhavan to tender my resignation' என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் உருவெடுத்தன என்பதை நாம் மறக்க முடியாது. அந்த 9 ஆம் தேதிய பலப் பரீட்சையில் பிரதமருக்கு ஆதரவாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தோன்றாத் துணையாக இருந்து,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கிணங்க நட்பிற்கு இலக்கணம் வகுத்துத் தந்தார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். மத்திய அரசும் வென்றது; நாடு நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

பிரதமர் அவர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு தொலைபேசி மூலம் நன்றி தெரிவித்த செய்தியைப் பார்த்து நாமெல்லாம் மகிழ்ந்தோம். இந்நிலையில் நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நன்றியை செயலளவில் மத்திய அரசாங்கத்தார் காட்டுவார்கள் என்பதுதான்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் மத்திய அரசினுடைய அனுமதியும், உதவியும் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் எதிர்பார்த்து இருக்கக்கூடிய மாநிலத்



திட்டங்கள் பற்றி ஆங்காங்கே கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலும் இவைபற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பேரவை மத்திய அரசிடம் எதிர்பார்ப்பதும், வேண்டுவதும், உங்களிடம் நிலுவையில் உள்ள தமிழக திட்டங்கள் யாவற்றையும் விரைந்து அங்கீகரித்து, அனுமதியும் நிதியுதவியும் வழங்கி தாங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு காட்டும் நன்றிக்கு செயல்வடிவம் கொடுங்கள் என்பதுதான். இதைத் தோழமை உணர்வு படைத்த யாவரும் வரவேற்பார்கள் என நான் நம்புகிறேன்.

சமீபத்தில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்கள் சமர்ப்பித்தது நேரடியாகத் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. இதைப் பொதுமக்கள் ஆவலுடன்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ஆ. சுப்புரத்தினம் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள் நீங்கள் இன்னும் மத்திய பட்ஜெட்டிலேயே இருந்தால் பழனிக்குப் போய்ச் சேரமாட்டீர்கள். (சிரிப்பு)

<u>திரு. ஆ. சுப்புரத்தினம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய பட்ஜெட் போல தமிழக பட்ஜெட்டையும் மற்றும் முக்கியமான சட்டசபை நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் காட்டினால் மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்ற என்னுடைய கோரிக்கையை விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்சமயம் இலவச மின்சாரமானது எல்லாத் தரப்பினர்க்கும் வழங்கப்படுகிறது. நிதிநெருக்கடி மிக்க இக்காலக்கட்டத்தில் இதை மறுபரிசீலனை செய்தாக வேண்டும். சிறு, குறு, விவசாயிகள் தவிர்த்து பெரு விவசாயிகளுக்கு மின் கட்டணம் வசூலித்தால் நிதி ஆதாரப்பெருக்கத்திற்கு வழி கோலுவதாய் அமையும். There is no greater gift than the gift of health என்றும் நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம் என்றும் குறிப்பிடுவர். புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம் மக்கள் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. உணவு, உடை, உறைவிடம் இவற்றுடன் சுகாதாரமும் மனித வாழ்வின் அடிப்படைத்தேவை என தொலைநோக்குச் சிந்தனையுடன் உலகிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காட்டும் ஒரு வழிகாட்டித் திட்டம் தான் இம்மருத்துவ நலத்திட்டமாகும்.

இரு பெண் குழந்தைகளுடன் கருத்தடை செய்து கொண்டுள்ள குடும்பங்களுக்கு பயனளிக்கும் விதத்தில் அத்தகைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000 நிதி நிறுவனம் ஒன்றில் முதலீடு, செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது பாராட்டுவதற்

குரியது. பெண் குழந்தைகள் ஒரு பொருளாதார சுமை என்று
பல பெற்றோர்கள் கருதுகிறார்கள். அத்தவறான கருத்தில்
— மனநிலையில் மாற்றம் வேண்டும். மாதராய்ப் பிறப்பதற்கே
இங்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா என்று பாடினார் பாரதி
யார். புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் பிறக்கும்
பெண் குழந்தைகளுக்கு, பாரதியாரின் கவிதை, வார்த்தைக்கு
வார்த்தை பொருந்தும்.

இளைஞர்கள்— குறிப்பாக கல்லூரி மாணவர்கள்— போதை
மருந்துகளுக்கு அடிமையாகும் துரதிருஷ்டவசமான நிலைமையை
இன்றைக்கு மத்திய மாநில அரசுகளும், சமூக நலனில் அக்கறை
கொண்ட தற்சார்பு நிறுவனங்களும் கவலையோடு அணுகிக்
கொண்டிருக்கின்றன.

மிகப்பெரும் சமூகத் தீமையான இந்தக் கொடிய பழக்கத்தை
வேரறுக்க ஐ.என். டிரக் கன்ட்ரோல் புரோகிராம் என்ற திட்
டத்தின் கீழ் 25 இலட்சம் டாலர்களை இந்தியாவுக்கு உதவி
யாக ஐ.நா. நிறுவனம் வழங்கியிருப்பதாக சமீபத்தில் மத்திய
அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சீதாராம் கேசரி
அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்த உதவித் தொகையில்
ஒரு பகுதியை நமது மாநிலத்திற்கும் பெறுவதற்கு நமது அரசு
முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

சமையல் எண்ணெய் பற்றாக்குறையால் பாமாயிலை பயன்
படுத்த வேண்டிய நிலை உள்ளது. பாமாயிலை மத்திய அர
சிடமிருந்து பெறுவது சிரமமாக உள்ளது. இறக்குமதி செய்
வதன் மூலம் அந்நியச் செலாவணியும் வீணாகிறது. நமது
மாநிலத்திலேயே பாமாயிலை உற்பத்தி செய்வதற்குரிய முறை
யில் எண்ணெய் தரும் பனைமரங்களை வளர்ப்பதற்காக ஒரு
திட்டத்தை ரூ. 24.89 கோடி செலவில் மேற்கொள்ள அரசு
திட்டமிட்டிருப்பது மிகவும் வரவேற்பிற்குரியதாகும்.

சென்ற ஆண்டு கல்விக்கான நிதி ஒதுக்கீடு 1,300 கோடி
ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு ரூபாய் 1,518 கோடியாக
உயர்த்தப்பட்டுள்ளது மிகவும் போற்றுதலுக்குரியது. இந்த
நேரத்தில் இன்னொரு கருத்தைச் சுட்டிக்காட்டிடும் கடமை
யும் கடப்பாடும் எனக்கு உண்டு. அடிப்படைக் கல்விக்கு,
ஆதாரக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பது
மகாத்மாவின் கனவு. இதை உணர்ந்த நம்முடைய மாநில
அரசு அடிப்படைக் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க தக்க
விதத்தில் தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்த ரூ. 62.47





கோடி செலவிலான திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்
தப்பட்டதால் உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்கால
சமுதாயம் பாழ்பட்டு விடாது என்ற நம்பிக்கை தழைக்கிறது.

உயர்கல்வி பயில வருபவர்களிடம்...... (மணியடிக்கப்
பெற்றது)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. ஆ. சுப்புரத்தினம்</u> : சற்று அதிகமாகக் கட்டணம்
வசூல் செய்ய வேண்டியதன் தேவை பற்றியும் நிதிநிலை அறிக்
கையில் சொல்லப்பட்டுள்ளது. இது, இக்காலகட்டத்தில்
தவிர்க்க இயலாதது என்பது மட்டுமல்ல; கண்டிப்பாகச் செய்ய
வேண்டியதும் கூட. மாணவர்களிடையே ஒரு பொறுப்புணர்ச்சி
யையும், கல்லூரிகளில் பேராசிரியர்களை நல்ல முறையில்
பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற உணர்வு மாணவர்
களிடையே உருவாவதற்கும் இது உதவும் என கூறி, இந்த நல்ல
நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை
பெறுகிறேன், வணக்கம்.

5. அறிவிப்பு— தொடர்ச்சி

(ஆ) <u>பார்வையாளர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கும்
போது உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்
குறித்து</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை உறுப்பினர்
களுக்கு ஓர் அறிவிப்பு.

சிலபல காரணங்களால் பார்வையாளர் மாடத்துக்கு
வருகிற பார்வையாளர்களிடத்தில் சில பாதுகாப்பு விதிகள்
கடுமையாக்கப்பட்டு இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்
பினர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். எனவே, பார்வை
யாளர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குகிற மாண்புமிகு உறுப்
பினர்கள் முழுமையாக அவர்களைத் தாங்கள் தெரிந்து இருந்
தால் மட்டும் கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன். சில
மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கையொப்பத்தை
மட்டும் போட்டு சில அனுமதிச் சீட்டுகளை வெளியே கொடுத்து
விடுகிறார்கள். அதைப் பெற்றுக்கொண்டு தங்களுடைய
பெயரை அங்கே பூர்த்தி செய்துகொண்டு பார்வையாளர்களாக

மேலே வருகிற வாய்ப்பைச் சிலர் பெற்று விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நபர், ஒரு கத்தியோடு வெளியிலே தற்போது பிடிபட்டு காவல்துறையினர் அழைத்துச் சென்று இருக்கிறார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர், ''நான் தவறுதலாகக் கொடுத்து விட்டேன்'' என்று சொல்கிற நிலைமையெல்லாம் ஏற்படுகிறது. எனவே, தங்களுக்கு நேரிடையாகத் தெரிந்தவர்களுக்கு மட்டும் தங்கள் கைப்படவே அவர்களுடைய பெயரைப் பூர்த்தி செய்து பார்வையாளர் அனுமதிச் சீட்டுகள் கொடுத்தனுப்புமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 4. வரவு—செலவுத் திட்டம், 1992—93, பொது விவாதம்— தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன், 7 நிமிடத்திலும் பேசி முடிக்க முடியும் என்பதை இன்றைக்கு நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது நடைபெறும் பொது விவாதத்தில் பேச வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிதனை காணிக்கையாக்குகின்றேன். அங்கிங்கெனாதபடி எங்கும் ஊடுருவி, அமைதிப் பூஞ்சோலையாக விளங்கிய தமிழ் மண்ணை சிவக்க வைத்து, சுதந்திரமாய் சிவப்பு ரோஜாவாக பவனி வந்த எங்கள் தங்கத் தலைவனாம் ராஜீவ் காந்தியை வெடிகுண்டு கலாச்சாரத்திற்கு இரையாக்கி அவர்தம் பொன்னுடலை சுக்கு நூறாக்கிய விடுதலைப் புலிகளை, முதல்வராகப் பதவியேற்றவுடன் முதல்வேலையாக, முறத்தால் புலியை அடித்துத் துரத்திய புறநானூற்றுப் பெண்ணாகக் காட்சி தந்து, தன் திறத்தால் விரட்டி அடித்து, வேரறுத்து, புதியதோர் புரட்சிதனை தமிழ் மண்ணில் படைத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவிக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மலரும் மணமும் பிரிக்க முடியாததைப்போல, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக— காங்கிரஸ் உறவு பிரிக்க முடியாதது என்பதை இரண்டு நாட்களுக்கு முன்னாலே மத்தியிலே காங்கிரஸ் கட்சிக்கு பெரிய சோதனை என்ற



போதும், முன் வைத்த காலை பின்வாங்காமல், ஒரே கொள்கையில் உறுதியாக நின்று, தோழமைக்கு இலக்கணம் வகுத்து, நல்லாதரவை கனிவோடு தந்து சாதனை படைத்த மாண்புமிகு புரட்சித் தலைவிக்கு நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மழை விட்டாலும் இன்னும் தூவானம் விடவில்லை. விடுதலைப்புலிகள் விரட்டப்பட்டனர். ஆனால் விடுதலைப் புலிகளுக்கு அன்று ஆதரவாக இருந்த, இன்று இன்னும் இருந்துகொண்டிருக்கிற சில இயக்கங்கள் இன்னும் தமிழ் மண்ணிலிருந்து விரட்டப்பட்டபாடில்லை. விடுதலைப் புலிகளை வேரறுத்த தாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, பத்திரிகைகளில் அவர்களுக்கு வக்காலத்து வாங்கி, ஸ்டேட்மெண்ட் விட்டு, பகிரங்கமாகச் செயல்படும் இயக்கங்களை முதல்வர் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதோடு அன்றி, அவற்றை அறவே தமிழகத்தில் தடை செய்ய வேண்டும்.

பிற்பகல் 1—20

சென்ற ஆட்சியிலே கட்டுண்டு கிடந்த காவல்துறை இப்பொழுது சீருடனும், சிறப்புடனும், திறமையுடனும் கடமையாற்றி வருவது கண்டு பாராட்டுகின்றோம். காவல் துறை இன்னும் விழிப்போடு பணியாற்றி, வேகத்தோடு செயல்பட்டு, தமிழகத்தில் ஆங்காங்கே உற்பத்தியாகியுள்ள சாராய ஆறுகளை, ஆற்று ஊற்றுகளைத் தடுத்தால் நலமாக இருக்கும். பெருகிவரும் கொலை, கொள்ளை, திருட்டு, செயின் பறிப்பு போன்ற குற்றங்களைத் தடுத்தால் சிறப்பாக இருக்கும். காவல் துறைக்குச் சென்ற ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 10 கோ... நவீனப்படுத்த ஒதுக்கப்பட்டது. ரூபாய் 80.45 கோடி செலவிலே காவல் துறையைப் புதுப்பிக்க சென்ற ஆண்டு பட்ஜெட்டில் திட்டம் தீட்டப்பட்டதையே இவ்வாண்டு பட்ஜெட்டிலும் சொல்லப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ஒதுக்கியது 10 கோடி என்னும்பொழுது இவ்வாண்டு புதிய ஒதுக்கீடு எவ்வளவு? பழைய 10 கோடியே இப்பொழுதும் சொல்லப்பட்டுள்ளதா, அல்லது இது புதிய 10 கோடியா என்று அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

காவல்துறையை நவீனப்படுத்தினால் மட்டும் போதாது. காவலர்கள் நிறையப் பேரை புதிதாக அரசு நியமனம் செய்ய வேண்டும். போதிய பி.சி. ஸ்ட்ரெங்த் இல்லாத காரணத்தினாலே சட்டம்—ஒழுங்கு ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது. திருட்டு, கொள்ளை, செயின் பறிப்பு போன்ற குற்றங்கள் நடந்த வண்ணமாக உள்ளன. எனவே இவ்வாண்டே மாண்புமிகு முதல்வரவர்கள் நிறைய பி.சி.ஸ். அப்பாயிண்ட்மெண்டைச் செய்ய வேண்டும். வேலூர் சத்துவாச்சாரியில் பெண் போலீஸ் ஸ்டேஷன் ஒன்றை நிறுவ வேண்டும். வாணியம்பாடி

[திரு. சி. ஞானசேகரன்] [1992 மார்ச் 12

தாலுக்காவில் உள்ள வெள்ளக்குட்டையில் புதிய போலீஸ்
ஸ்டேஷன் ஒன்றை அமைக்க வேண்டும். வேலூர் நகரில்,
டி.எஸ்.பி. யை எடுத்து விட்டு, இளம் ஏ.எஸ்.பி.யை போட
வேண்டும். ஆர்.டி.ஓ. வை எடுத்து விட்டு அசிஸ்டென்ட்
கலெக்டரைப் போட வேண்டும். எல்லாக் காவல் நிலையங்
களிலும் வழக்கறிஞர்களைப் ப்ராசிகியூட்டிங் இன்ஸ்பெக்ட
ராக நியமிக்க வேண்டும்.

வேலூரில் அரசு வேளாண்மை, மருத்துவ, சட்டக் கல்லூரி
கள் வரும் ஆண்டிலே துவக்கப்பட வேண்டும்.

வடார்க்காடு—அம்பேத்கார் மாவட்டம், டேனரி கழிவுநீர்
காரணமாக பாதிக்கப்பட்டு வருகிற காரணத்தால் வேலூரில்
கடந்த 15 ஆண்டுக் காலமாக இயங்கி வரும் சாயில் கன்சர்
வேஷன் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றாமல் இருக்க
வேண்டும்.

உலகத்திலேயே முதல்தரமான சந்தன மரங்கள் வடார்க்
காடு—அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாது மலையிலேதான்
கிடைக்கின்றன. சந்தன மரக் கடத்தல் இன்னும் ஓய்ந்த
பாடில்லை. அப்பகுதியிலே வனத்துறை கீழ்மட்ட அதிகாரிகள்
பல கடத்தல்காரர்களுக்கு உடந்தையாக உள்ளனர். அத
னால் கோடிக்கணக்கான மதிப்புள்ள சந்தன மரங்கள் வெளி
மாநிலம், வெளி நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன. அதைத்
தடுக்க சீஃப் கன்சர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட் அலுவலகத்
தையே நீங்கள் வேலூருக்கு மாற்றி கண்காணிப்புப் பணிகளைத்
தீவிரப்படுத்த வேண்டும். புதிதாக வனக் காவலர்களை நிய
மனம் செய்தும், சமூக நலக் காடுகளில் பணிபுரியும் வனத்துறை
அதிகாரிகளை வைத்தும் 10 கிலோ மீட்டர் பரப்பளவுக்கு
ஒரு காவலர் என்று பீட் போட்டு அந்த 10 கிலோமீட்டர்
பரப்பிலே சந்தன மரம் கடத்தப்பட்டால், அதிகாரி வேலை
நீக்கம் செய்யப்பட வேண்டும்.

சென்ற ஆண்டு பட்ஜெட்டில் சந்தன மரக் கடத்தலைத்
தடுக்க, பாதுகாப்புப் பணியை வலுப்படுத்த, 40 இலட்சம்
ரூபாய் செலவில் நவீன ரக துப்பாக்கிகள், தகவல் தொடர்பு
சாதனங்கள் வழங்கப்படும் என்று அறிவித்தீர்கள். இவ்வாண்டு
பட்ஜெட்டிலும் அதற்காக 65 இலட்சம் ஒதுக்கியுள்ளதாகச்
சொல்லப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 40 இலட்சம் அதற்
காகச் செலவிடப்பட்டதா? எது எது வாங்க எவ்வளவு செல
விடப்பட்டது? சென்ற ஆண்டு 40 இலட்சத்தைச் சேர்த்துத்
தான் இந்த ஆண்டு 65 இலட்சம் ஒதுக்கப்படுகிறதா என்பதை
அரசு அவையிலே விளக்க வேண்டும்.



1992 மார்ச் 12] [திரு. சி. ஞானசேகரன்]

வேலூரில் அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்க வேண்
டும், அதில் பி.எஸ்.ஸி. டைரியிங் என்ற ஒரு கோர்ஸை ஆரம்பிக்க
வேண்டும்.

வேலூர் தொகுதியில் உள்ள அலமேலுமங்காபுரம் என்ற
ஊரில் உள்ள கால்நடை சப் சென்டர் டிஸ்பென்சரியாக
மாற்றப்படும் என்று மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சரவர்
கள் கலவையிலே நடந்த அரசு விழாவிலே இரண்டு மாதங்களுக்கு
முன்னாலே அறிவித்தார்கள், அதை உடனே டிஸ்பென்சரியாக
மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும்.

சென்ற ஆண்டு பட்ஜெட்டில் கல்வித் தரத்தை உயர்த்தும்
பொருட்டு புதிதாக 1,200 இடைநிலை ஆசிரியர்கள், 145 பட்ட
தாரி ஆசிரியர்கள். தமிழ்ப் புலவர்கள் பதவிகள் உருவாக்கப்படும்
என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுவரை அவ்வாறு ஆசிரியர்
கள் நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை, இவ்வாண்டு பட்
ஜெட்டில் 1,400 இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும்
என்று சொல்லப்பட்டுள்ளது. போன ஆண்டு 1,200 ஆசிரியர்கள்
நியமனம் ஆகாத சூழ்நிலையில் 1,200 ப்ளஸ் 1,400 என 2,600
ஆசிரியர்களை அரசு நியமிக்கப் போகிறதா? 145 பட்டதாரி
ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதாக தெரியவில்லையே, அவர்களை
இவ்வாண்டு நியமிப்பீர்களா என்று அரசு தெளிவுபடுத்த
வேண்டும்.

வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் வெள்ளக்
குட்டை, புனவட்டம், தொரப்பாடி ஆகிய உயர்நிலைப்பள்ளி
களை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக அரசு மாற்ற வேண்டும்.
வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம் பிற்படுத்தப்பட்ட
ஒரு மாவட்டம், ஏழைகள் அதிகம் உள்ள இடம். எனவே,
ஏழைகள் படிக்க வசதியாக உள்ள வேலூரிலே இயங்கி வரும்
அரசு பொறியியல் கல்லூரியைத் திருவண்ணாமலைக்கு மாற்றா
மல் வேலூரிலே தொடர்ந்து நடைபெற உத்தரவு பிறப்பிக்க வேண்
டும். ஞானசேகரன் எம்.எல்.ஏ., வாக வந்து, கவர்ன்மெண்ட்
என்ஜினியரிங் காலேஜைக் கோட்டை விட்டார் என்ற அவப்
பெயர் எனக்கு வராமல் மாண்புமிகு முதல்வரவர்கள் தடுக்க
வேண்டும். திருவண்ணாமலையில் வேறொரு புதிய பொறியியல்
கல்லூரியைத் திறக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 1—25

பள்ளி நிர்வாகம் மாநில அளவில் தேக்கம் அடைந்துள்ளது,
அதைச் சரிக்கட்ட, பள்ளிக் கல்வி இயக்குநர்களாக ஐ.ஏ.எஸ்.
படித்தவர்களை, அரசு நியமிக்க முன்வரவேண்டும். அறிவொளி
இயக்கம் என்பது, மத்திய, மாநில அரசுகளின் உதவியோடு

[திரு. சி. ஞானசேகரன்] [1992 மார்ச் 12

செய்யப்படும் ஒரு அருமையான திட்டம். ஆனால் அதில் ஈடுபடுத்தப்படும் ஆசிரியர்கள், வங்கி, இரயில்வே ஊழியர்கள், தீவிர கம்யூனிசக் கொள்கைகள் என்று விஷ வித்துக்களை நாடெங்கிலும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அரசு அந்த சி.ஐ.டி. போலீஸ் உதவியுடன் கண்டுபிடித்து. களையெடுக்காவிடில் தீவிரவாதம் மீண்டும் வேரூன்ற அது வழிவகை செய்யும். அறிவொளி இயக்கத்தின் நிகழ்ச்சிகளை கலெக்டர் மட்டுமே முடிவு செய்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளாம் எம்.எல்.ஏ.,கள் இதுபற்றி கலந்தாலோசிக்கப்படுவதில்லை. இது போன்றவை பேராபத்தை எதிர்காலத்தில் உருவாக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

மாநில பள்ளிசாராக் கல்வித் திட்டம் என்று ஒன்று, ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் என்ற வகையில் சென்ற பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. பகுதிநேர ஊழியர்களாக பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்களை சத்துணவுப் பணிக்குப் பிறகு, இந்தத் திட்டத்தில் பயன்படுத்தி, முழு நேர ஊழியர்களாக அரசு அறிவிக்கலாம். அவர்களின் குறைந்த சம்பளத்தை இந்தத் திட்டப் பணத்தை வைத்து உயர்த்தினால், சத்துணவுப் பணியாளர்களும் பயனடைவார்கள். இதை அரசு தீவிரமாக யோசித்து செயல்படுத்தினால் இரு திட்டங்களும் வெற்றியடைய வாய்ப்புண்டு. உயர்கல்விக்கு கட்டணம் வசூலிக்கும் எண்ணத்தை அரசு முழுமையாக கைவிட வேண்டும். இது ஏழை, எளிய மாணவர்களைப் பெரிதும் பாதிக்கும். சத்துணவுக்கு இரண்டாண்டுக்கு முன்னாலே ரூ. 180 கோடி ஒதுக்கப்பட்ட போது இருந்த மாணவர்களைவிட, ரூ. 256.32 கோடி ஒதுக்கப்பட்டும், இப்போதைய நிலையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது. வேலை நாட்களில் 25 சதவீதமும், விடுமுறை நாட்களில் 50 சதவீதமும் மாணவர்களைக் குறைக்க அதிகாரிகள் எழுத்து மூலம் உத்தரவு போட்டு ஊரெல்லாம் ஒரே ரகளையாக உள்ளது, சத்துணவு அமைப்பாளர்களை அடிக்க முற்படுகிறார்கள்.

முதியோர், விதவைகளுக்கு இந்த அரசு மாதத்திற்கு ரூ. 25—ஐ ஏற்றியுள்ளது. நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்களுக்கு தினக்கூலி 14 ரூபாய் கிடைக்கும் வண்ணம், புதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து 10 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது, 30 நாட்களுக்கு 14 ரூபாய் தினக்கூலி மூலம் விவசாய வேலைக்கு, மாதம் ரூ. 420 சம்பளம் பெறும் வாய்ப்பை உருவாக்கி சாதனை படைத்திருக்கிறார்கள், அதே நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிய இந்த சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கும் குறைந்தபட்சம் 500 ரூபாய் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை



1992 மார்ச் 12] [திரு. சி. ஞானசேகரன்]

யுள்ளத்தோடு அறிவிப்பார்கள் என்று மலைபோல் நம்புகிறோம். தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு 250 கோடி ரூபாய் செலவில் ஹொகேனகல் குடிநீர்த் திட்டம் கொண்டு வரும் முதலமைச்சருக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல பக்கத்து மாவட்டமான வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் பாலாற்றை ஹொகேனகல் காவிரியோடு இணைத்து, முதலமைச்சர் புரட்சிதலை செய்தால் எங்கள் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையும் தீரும். வேலூருக்கு நிரந்தரமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க 5 கோடி ரூபாயை ஒதுக்கி, 14 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பொன்னையாற்று பாலாற்றில், பெரிய இராட்சத கிணறுகளைத் தோண்டி குடிநீர்த் திட்டம் வகுக்க வேண்டும். வேலூரில் ரோடே தெரியாத அளவுக்கு சாக்கடை நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் கொசுக்களும், பன்றிகளும் உருவாகும் ஒரு பெரிய சிறப்புப் பண்ணையாக அது விளங்கிக் கொண்டிருக்கிறது, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை ரூ. 3 கோடியளவில் உருவாக்கினால்தான் பன்றிகள், கொசுக்கள் ஆகியவற்றின் தொல்லைகளிலிருந்து நாம் விடுதலை பெற இயலும்.

வேலூர், சத்துவாச்சாரியிலே புரட்சித் தலைவர் காலத்தில் 11 ஆண்டுகளுக்கு முன்னாலே வாங்கப்பட்ட 10.22 ஏக்கர் நிலத்தில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ஒன்று 5 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட வேண்டும். ஏற்கனவே இம்மாமன்றத்தில், நீதிமன்ற வளாகம் அமைக்க இருமுறை சட்டத்துறை அமைச்சர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். நன்றி. ஆனால். இதுவரை அந்த வேலை துவங்கப்படவில்லை, உடனே அதை துவங்க ஆவன செய்ய வேண்டும்.

பால் விலையை அரசு சற்று குறைத்து, இன்று பால் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கிற குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும், அவர்களுடைய வயிற்றில் பால் வார்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்,

அதோடு, இலவச வேட்டி, சேலைகள் போன 29 தேதிக்குள் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அறிவித்தார்கள். இன்னும், என்னுடைய பகுதிக்கு சேலைகள் வராமல் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, இன்னும் சேலைகள் வராத இடங்களுக்கு உடனே வழங்க உத்தரவிடும்படி கோரி, வேண்டி, இந்த இனிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு பட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

[1992 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி,

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பு கொடுத்து, மிகவும் நலிவுற்று, தாழ்வுற்று கிடக்கும் எனது தாராபுரம் தொகுதி மக்களின் குறைகளை சுட்டிக்காட்ட வாய்ப்பு கொடுத்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவர் மறைவுக்குப் பின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நாடோடிகள் என்று சிலர் வாய்க்கு வந்தபடி பேசிவந்த வேளையிலே, அ.தி.மு.க. வினர் நாடோடிகள் அல்லர் : என்றுமே நாடாளும் மன்னர்கள் தான் என்று நிரூபித்து திராவிடத் திருநாட்டை சிறப்பாக ஆட்சி செய்யும் எங்கள் தெய்வத்தாய் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்,

" தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு "

பிற்பகல் 1—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : எப்பொழுதும் விழிப்புடன் இருத்தல், தெளிந்த அறிவைப் பெற்றிருத்தல், துணிந்து செயல்படுதல் ஆகிய இம்மூன்று நெறிகளும் ஒரு அரசு தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியவை என்ற வள்ளுவன் வாய்மொழிக் கிணங்க, நல்ல பல திட்டங்களை டாக்டர் நாவலர் அவர்கள் நாட்டுக்கு அளித்த நிதி நிலை அறிக்கை நாடு நலம் பெற எண்ணும் நல்லெண்ணம் கொண்டவர்கள் பாராட்டக்கூடிய ஒன்றாகும்,

நிதிநிலை அறிக்கையிலே காவிரி குடிநீர் திட்டத்தில் எனது தாராபுரம் நகராட்சியை சேர்த்ததற்கு நன்றி கூறி, மேலும் பெரியார் மாவட்டத்தில் மிகவும் வறட்சிப் பகுதியாகிய தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தையும் காவிரி குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கும்படியாக நான் இங்கே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1992 மார்ச் 12] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி]

மேலும் உடுமலை தாலூக்காவில் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியமும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியமும் குடிநீர்ப் பிரச்சினையால் மிகவும் பாதிக்கப்பட்டு, மக்கள் ஊரை விட்டே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை 2—3—1992 அன்று கோவை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மேலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் 4—3—1992 அன்று எழுத்து மூலமும் கொடுத்திருக்கிறேன். இப்போதும் எடுத்துக் கூறியுள்ளேன், இனிமேலும் இந்தக் குடிநீர்ப் பிரச்சினை பற்றி கூறாமல் இருக்க ஆய்வு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தாமரவாடி குடிநீர் திட்டம் அமராவதி ஆற்றிலிருந்து நீர் எடுத்து உடுமலை தாலுக்காவில் உள்ள மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கும் குடிதண்ணீர் வழங்க உலக வங்கியின் உதவியோடு முன்பு அமைக்கப்பட்டதுதான். தற்போது அத்திட்டத்தின் செயல்பாட்டில் குறைபாடு உள்ளது. அக்குறைபாட்டை நீக்கி சற்று விரைவாகச் செய்தால் இன்னும் பல ஊர்களும் இத்திட்டத்தின் மூலம் பலன் பெறும் என்பதை நான் இங்கே பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது எவ்வளவோ நிதி நெருக்கடி இருந்தபோதிலும், புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைப் புதுப்பிக்கவும் ரூ. 22.35 கோடியிலிருந்து ரூ. 314.51 கோடியாக உயர்த்தி இருப்பது மிகவும் தேவையான ஒன்று. மேலும் எனது தொகுதியிலே அனைத்துச் சாலைகளும் ஒருவழிச் சாலைகளாக உள்ளன. தொழில் முன்னேற்றத்தில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தாராபுரம் தொகுதியில் தாராபுரம்—காங்கேயம் சாலை, தாராபுரம்—திருப்பூர் சாலை, தாராபுரம்—வெள்ளக்கோவில் சாலை, தாராபுரம்—ஒட்டன்சத்திரம் சாலை, தாராபுரம்—சின்ன தாராபுரம் சாலை தாராபுரம்—உடுமலைப்பேட்டை சாலை, தாராபுரம் பகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டையிலிருந்து பல்லடம் செல்லும் சாலை ஆகிய அனைத்துச் சாலைகளுமே ஒருவழிச் சாலைகளாக உள்ளன. இவைகளை இருவழிச் சாலைகளாக மாற்றிக் கொடுக்கும்படி நான் இங்கே கருணை உள்ளம் கொண்ட காவல் தெய்வத்திற்கு பரிந்துரைக்கிறேன்.

அதேபோல், கல்வி நிலையங்கள் அரசு தரப்பிலும், தனியார் தரப்பிலும் அதிகமான அளவில் எனது தொகுதியில் இல்லை. மாறாக, மேல்நிலைப் பள்ளிகள் தாராபுரம், காங்கேயம், வெள்ளக்கோவில், இதன் சுற்றுப்புறங்களில் அதிகமாக உள்ளன. வசதி வாய்ப்பு உள்ள மாணவ, மாணவியர்கள்

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி] [1992 மார்ச் 12

மேற்படிப்புக்கு வெளியே சென்று படிப்பைத் தொடருகிறார்கள். ஆனால் வசதி வாய்ப்பற்ற மாணவ, மாணவியர்கள் குடும்ப சூழ்நிலைமையின் காரணமாக படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசு தரப்பில் ஒரு கலைக் கல்லூரியோ அல்லது ஒரு தொழில் நுட்பக் கல்லூரியோ வரும் நிதி ஆண்டில் அமைத்துக் கொடுத்து உதவிடுமாறு அந்த ஏழை எளிய மாணவ, மாணவியர்கள் சார்பாகவும், தங்களது பிள்ளைகளுக்கு படிப்பைத் தொடர்ந்து கொடுக்க முடியாத ஏழைப் பெற்றோர்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் காற்று சக்தியின் மூலம் இயங்கும் 100 மெகாவாட் மின்சக்தித் திறன் கொண்ட பிரிவு ஒன்றை அமைக்க நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. இயற்கையிலேயே தாராபுரம் நகரத்தில் வருடத்தில் 4 மாதங்கள் காற்று அதிகமாக வீசும். எனவே மேற்கூறிய திட்டத்தை எனது திருப்பூர் தொகுதியில் அமைத்தால் அது சிறப்பாகச் செயல்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் தொழிலில் மகளிருக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று 6 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படுமென நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. அதிலே எங்கள் பெரியார் மாவட்டமும் இடம் பெறுகிறது. ஆகவே, தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக இருக்கும் எனது திருப்பூர் தொகுதியிலே, அங்குள்ள மகளிருக்கு பயனளிக்க வேண்டி, வேளாண்மைப் பயிற்சி மையத்தை தாராபுரத்தில் அமைக்க பணிவுடன் வேண்டுகிறேன்.

நெசவாளரது நலனுக்காக வழங்கப்படும் ஈட்டுறுதித் திட்டம் ரூ. 10,000—த்திலிருந்து ரூ. 15,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இறந்துபோகும் நெசவாளர் குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 250 வழங்கும் திட்டம் ஒன்றும் கூறப்பட்டுள்ளது. அது மிக மிக வரவேற்கக் கூடிய நல்ல திட்டமாகும். வரும் நிதி ஆண்டில் தறிக் கூடம் இணைந்த 2,000 வீடுகள் கட்டப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதுவும் நல்ல திட்டம் ஆகும். எனவே, எனது தொகுதியில் வாழும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையிலே அவர்களுக்கும் கணிசமான அளவு வீடு ஒதுக்கித்தரும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரம், குடும்ப நலம் என்ற தலைப்பின் கீழ் 3 மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் செவிலியர்கள் பயிற்சிப் பள்ளி தொடங்க உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது மிக நல்ல



1992 மார்ச் 12] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி]

திட்டம். இத்திட்டத்தை எங்கள் பெரியார் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும் அமைக்க வேண்டுமென மாவட்ட மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறிய அனைத்துக் குறைகளையும் நீக்கி, நல்ல பல திட்டங்களையும் செயல்படுத்தி, சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களும், கருணை உள்ளம் கொண்ட காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் பரிசீலிக்க பணிவுடன் பரிந்துரைத்து வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 1-35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். அன்பழகன்.

<u>திரு. எஸ். அன்பழகன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடத்தின் திருவிளக்கு, தமிழகத்தின் குல விளக்கு, பெண்குலத்தின் பொன்விளக்கு, எங்கள் கழகத்தின் ஒளிவிளக்கு, முகராசி கொண்ட மகராசியின் மகத்தான ஆட்சியில் நடமாடும் பல்கலைக்கழகம் டாக்டர் நாவலர் அவர்களால் வழங்கப்பட்ட 1992—93 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடுமையான நிதி நெருக்கடியிலும் பல அம்சங்கள் பொருந்திய இந்த பட்ஜெட் பாமர மக்களும் பாராட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டதை யாரும் மறுக்கமாட்டார்கள். எல்லாத் துறைகளுக்கும் சமவாய்ப்பு வழங்கியுள்ளது இந்த பட்ஜெட். குறிப்பாக காவல் துறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்ட அதாவது இந்த ஆண்டும் 1,000 வீடுகள் ஒதுக்கப்பட்டதை மனதார பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டில் மகளிரும் பயனடையும் அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதை பெண்கள் வரவேற்று மகிழ்கிறார்கள்.

கல்வித் துறையைப் பொறுத்தவரை தமிழகத்தில் இனி ஓராசிரியர் பள்ளியே இருக்காது என்ற அளவுக்கு வழிவகை செய்யப்பட்டதை நானும் ஒரு முன்னாள் பள்ளி ஆசிரியர் என்ற முறையில் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். அது மட்டுமல்ல, இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளிகள், மேல்

நிலைப் பள்ளிகள், திறந்து இருப்பதைப் பாராட்டுவதோடு பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டி இருப்பதையும் வரவேற்கிறேன்.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் பொதுமக்கள் அனைவருக்கும் நல்வாழ்வுத் திட்டம் என்ற உயர்ந்த கோட்பாட்டின்படி உருவாக்கப்பட்டது. இது கிராமத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. குறிப்பாக ஏழை எளிய மக்கள் அதிகம் பயன்பெறுகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் தமிழகம் முன்னேற சிறு தொழில்களை வளர்க்க இந்த அரசு தயாராக இருப்பதை வரவேற்கிறேன், இதன்மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்கவும், வெளிநாட்டு மூலதனத்தைப் பயன்படுத்தவும் தயாராக இருப்பதை பாராட்டுகிறேன்,

ஆதிதிராவிடர் நலனைப் பொறுத்தவரையில் 10 அம்சத் திட்டம் சிறப்பாகக் கொண்டு வரப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். குறிப்பாக ஆதிதிராவிடர் வாழக்கூடிய பகுதிகளில் குடிநீர், சுகாதாரம், மின்விளக்கு, சாலைவசதிகள் போன்றவற்றை ஏற்படுத்துவதில் சிறப்பாகச் செயல்படுவதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து மகளிர் மேம்பாடு. இந்த ஆண்டு இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வகை செய்யப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். குறிப்பாக எனது மாவட்டமும் அதில் இடம் பெற்று இருக்கிறது என்பதற்காக நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அறிவித்திருக்கின்ற பட்ஜெட் வந்திருக்கிற நிலையில் எனது தொகுதி பற்றியும் ஓரிரு கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி ஆற்றிலிருந்து நாமக்கல் கால்நடைக் கல்லூரி வழியாக வரும் கிராம கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரைவில் செயல்படுத்தினால் பல கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினையே இருக்காது.

அடுத்து காவிரியிலிருந்து எனது தொகுதியிலுள்ள எருமைப்பட்டி ஒன்றியம் பவித்திரம் வரை வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுகிறேன்.



நாமக்கல்லில்
சேலம் மாவட்டத்தில் பெரிய வட்டமான ... அர்பன் என்று
உள்ள காவல் நிலையத்தை ரூரல் மற்றும் அனுமதி வழங்க
இரண்டாகப் பிரித்துச் செயல்படுத்த
வேண்டுகிறேன்,

நாமக்கல்லில் காவலர் குடியிருப்பு இல்லாததால் அவர்களது
குறையைப் போக்கிட காவலர் இல்லம் கட்டித் தர வேண்டு
கிறேன். அதற்கான நிலமும் தயாராக இருக்கிறது என்பதை
யும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருப்பதால்
மாவட்டத் தலைமை மருத்துவமனையை நாமக்கல்லுக்கு
மாற்றித்தர அன்புடன் வேண்டுகிறேன்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள தேசிய
நெடுஞ்சாலையில் புறவழிச் சாலை அதாவது
'பைபாஸ் ரோட்' இல்லாத நகரம் நாமக்கல்லாகும், அதற்
கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதற்காக 50 இலட்சம்
ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியும் இன்னும் நில ஆர்ஜிதம்
செய்யப்படவில்லை. மத்திய அரசும் மாநில அரசும் கலந்து
பேசி இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று
அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அங்கே விரைவில் புற
வழிச்சாலை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூரிலிருந்து கரூருக்கு காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு
கிலோ மீட்டர் தூரம் வரை மேம்பாலம் கட்டினால் 18
கிலோ மீட்டர் போக்குவரத்து குறையும் என்பதைத்
தெரிவித்து இங்கே இந்த மேம்பாலத்தைக் கட்டித்தர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இன்னும் வெள்ளி
விழா கொண்டாடாத நிலையில் இருக்கிறது. இந்த
ஆண்டாவது கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரிக்கும்
போது, பெரிய மாவட்டமான சேலம் மாவட்டத்தை இரண்
டாகப் பிரித்து நாமக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு
புதிய மாவட்டம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். நாமக்கல்லில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தங்கி
பல வழக்குகளை நடத்தியுள்ளார். எனவே அங்கே அந்த
நாமக்கல் மாவட்டத்திற்கு. ராஜாஜி பெயரை வைக்க
வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏன்

இந்த நேரத்தில் ராஜாஜி பெயரைக் குறிப்பிடுகிறேன் என்றால் இங்கே உள்ள ஒரு காட்சியை நீங்கள் பார்க்கவேண்டும், இங்கே இருக்கிறாரே தேவர் திருமகனார், அவர்கள் பெயரிலே சிவகங்கை மாவட்டம் இருக்கிறது. தந்தை பெரியார் பெயரிலே ஈரோடு மாவட்டம் இருக்கிறது. அண்ணல் காந்தி அவர்களின் பெயர் அவர் பிறந்த மாநிலமான குஜராத்தில் ஒரு இடத்திற்குச் சூட்டப்பட்டு காந்தி நகர் என்று இருக்கிறது. அண்ணல் அம்பேத்கார் பெயரில் வேலூரை தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் இருக்கிறது. கண்ணியமிக்க காயிதே மில்லத் பெயரால் மாவட்டம் தொடங்கப்பட்டுள்ளது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரைக் கொண்டு விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் இருக்கிறது. திருவள்ளுவர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு அதுவும் வரக் காத்திருக்கிறது, பேரறிஞர் அண்ணா பெயரால் திண்டுக்கல் மாவட்டம் இருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் பெயராலே செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தை ஏற்படுத்தியுள்ளார், இன்னும் ஒரே ஒரு இடம்தான் பாக்கி இருக்கிறது, ராஜாஜி அவர்கள் பெயரிலே நாமக்கல்லைத் தலைநகரமாகக்கொண்டு அந்த மாவட்டத்தை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1–40

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு, கோ, ஜானகிராமன்.

<u>திரு, கோ. ஜானகிராமன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், இன்றைய தினம் இங்கே தாக்கல் செய்திருக்கின்ற வரவு-செலவுத் திட்டம், பட்ஜெட் ஆனது ஏழை எளிய மக்களை எந்த அளவிலும் பாதிக்காத அளவிலே, அவர்களுடைய முன்னேற்றத்தையே கருத்திலே கொண்டு தான் இந்த வரவு–செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதனைக் கண்டு உள்ளபடியே தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு, நரசிம்மராவ் இந்தியாவி
னுடைய பொருளாதார வளர்ச்சியிலே புரட்சிகரமான
மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று புதிய பொருளாதார
திட்டத்தை அறிவித்துள்ளார்கள், இதனால் உலக அரங்கிலே
இந்தியாவினுடைய தனித் தன்மையையும் பெருமையையும்
உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

தொழில் முன்னேற்றத்திலே உற்பத்தி செய்யவும், உற்பத்தி
செய்த பொருள்களை ஏற்றுமதி செய்யவும் பல சலுகைகளை
அறிவித்துள்ளார், இதனால் கிராமங்களிலே வளர்ச்சி அடை
யவும், ஏழ்மை நிலைமையை அகற்றவும், படித்த இளைஞர்
களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதம் ஏற்படுத்தியிருக்கின்றார்
கள் என்பதை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும்,

கள்ளக் கடத்தலை ஒழிக்க வேண்டும் என்பதற்காக வெளி
நாடுகளிலே இருந்து 5 கிலோ தங்கம் இந்தியாவுக்கு கொண்டு
வரலாம் என்று அறிவித்துள்ளார்கள், இதனால் தங்கத்து
னுடைய விலை இன்றைய தினம் குறைந்திருக்கிறது. இதனை
நாட்டிலுள்ள அனைத்து பெண்களும், நடுத்தர மக்களும் வர
வேற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

மத்திய வரவு–செலவு பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு உர
மானியமாக ரூ. 5,000 கோடி வரை சலுகைகள் கொடுக்கப்
பட்டுள்ளது, இதையெல்லாம் கருத்தில் கொண்டு மத்திய
அரசை நான் இந்த அவையின் மூலமாகப் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசுக்கு முன்பு ஆட்சியிலே இருந்த திராவிட முன்
னேற்றக் கழக அரசு ஆட்சியிலே செய்த தவறுகளின் காரணமாக
இங்கே சட்டம் ஒழுங்கு சீர் கெட்ட நிலைமையிலே இருந்த
நிலைமையும், தேசிய ஒருமைப் பாட்டுக்கே குந்தகம் விளைகின்ற
நிலைமையும் தமிழ்நாடு சுடுகாடாக மாறிய நிலைமையுமிருந்தன
அதை எல்லாம் மாற்றி, இந்த அரசு தேச விரோத சக்திகளை
யும் தீவிரவாதிகளையும் அடக்கி ஒடுக்கிய பெருமை தமிழக
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சாரும் என்று
இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிரு
க்கிறேன்.

காவல் துறை வளர்ச்சிக்காக இன்றைய தினம் 276.31 கோடி
ரூபாய் ஒதுக்கியுள்ளது உண்மையிலேயே பாராட்ட வேண்டிய
ஒன்றுதான், போலீஸ் அதிகாரிகளுக்கு நவீன ஆயுதங்களை
வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீசார் கடமைகள் பாராட்டக் கூடியதாக இருந்தபோதிலும் இந்த அரசு அவர்களுடைய கடமைகளை சரிவர செய்ய கடுமையான உத்தரவுகளைப் போட வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய கடமைகளை செய்யும்போது இறக்க நேரிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு உயர் கல்வியிலே, தகுதியின் அடிப்படையிலே வேலை வாய்ப்புக்கு சலுகை தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்ததை கண்டு மக்கள் எல்லோரும் பாராட்டினார்கள், ஆனால் தற்காலத்தில் அவ்வளவு வேகம் இல்லாமை கண்டு மக்கள் கவலை அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசு நல்ல முறையிலே நடக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி நினைக்கிறது. அதற்காக ஒத்துழைப்பு கொடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் கள்ளச் சாராயத்தின் மூலமாக இந்த அரசுக்கு களங்கம் ஏற்பட வேண்டும் என்று சில போலீஸ் அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில், விவசாயத் துறைக்கு இந்த ஆண்டு 215.75 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது பாராட்டக் கூடிய விஷயமாகும். இந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு மானிய விலையிலே உரம், பூச்சி மருந்து அளிக்க வேண்டும். உரம், பூச்சி மருந்துகள் உரிய விவசாயிகளுக்குப் போய் சேரவில்லை என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு மோட்டார் மின் இணைப்பு கொடுப்பதிலே, 11 ஆண்டுகளுக்கு முன்பு மின் இணைப்பு கேட்டு, பதிவு செய்த சிறு விவசாயிகளுக்குக் கூட இன்றைய தினம் 25 ஆயிரம் ரூபாய் கட்டினால் மின் இணைப்புத் தருகிறோம், தருவதிலே முன் உரிமை தருகிறோம் என்று அறிவித்துள்ளார்கள். இதனால் சிறு விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இந்த உத்தரவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், தென் ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து விழுப்புரம் நகரை மாவட்ட தலைநகரமாக அமைக்க இந்த பட்ஜெட்டிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. அது உண்மையிலேயே மகிழ்ச்சியான



ஒன்று தான், அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் என்னுடைய சார்பிலும் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பிலும் மனமார பாராட்டுகிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி பிரிக்கின்றபோது, செஞ்சி தாலுகாவை, மிக மிக பிற்பட்ட தாலுகாவை இரண்டாகப் பிரித்து மேல் மலையனூரை மையமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்க வேண்டும். அதுபோல திருக்கோவிலூர் பெரிய தாலுக்காவாக உள்ளது. அதனையும் இரண்டாகப் பிரித்து முகையூரை மையமாகக் கொண்டு ஒரு முகையூர் தாலுகாவை உருவாக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது),

பிற்பகல் 1.45

புதிதாக அமைக்க இருக்கும் விழுப்புரம் வள்ளலார் மாவட்டத்திற்கு என்று தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அம்மாவட்டம் வளர்வதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> முடியுங்கள்.

<u>திரு. கோ. ஜானகிராமன் :</u> அதே போல விழுப்புரத்தில் டிஸ்ட்ரிக்ட் அண்ட் செஷன்ஸ் கோர்ட் அமைக்கின்றபோது., தற்சமயம் கோர்ட் நடைபெறும் வளாகத்திலே போதிய இடம் இருப்பதால் அங்கேயே அனைத்து கோர்ட்டுகளையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்கள் (மணியடிக்கப்பெற்றது)....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஆ.கு. சீனிவாசன்.

<u>*திரு. ஆ.கு. சீனிவாசன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தமிழ்த் தாயும், காவல் தெய்வமுமாகிய மாண்புமிகு புரட்சித் தலைவி ஆகிய தமிழக முதல்வருக்கு பெரணமல்லூர் தொகுதி மக்களின் சார்பில் என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழக மக்களின் நலன் கருதி அடிப்படை வசதி மூலமாகத்தான் வளர்ச்சியைக் காண முடியும் என்று வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. அடிப்படை வசதிகள் வளர்ச்சித் திட்டப் பணிகளின் மூலமாக என் தொகுதியில் எல்லா பணிகளும் மக்கள் திருப்தி

[திரு. ஆ. கு. சீனிவாசன்] [1992 மார்ச் 12

அடையும் அளவிற்கு நடைபெற்றுக் கொண்டு வருகின்றன, அடிப்படை வசதி சம்பந்தப்பட்ட எல்லா பணிகளும் இப்பொழுது முடிவடையும் தருவாயில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதற்கு மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடப்பாண்டில் நிதிநிலை அறிக்கையில் ஏழையெளிய மக்கள், நலிந்த குடும்பத்தினர்கள், தாய்க் குலத்தை சேர்ந்த மகளிர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள், முதியோர்கள், விதவைகள், அத்தனை தளர்ந்த குடி வகுப்பை சேர்ந்தவர்களுக்கும் மாதந்தோறும் ஊதிய உதவித் தொகை பெறுபவர்களுக்கு மேலும் கூடுதலான பணமும், மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கு மேலும் அதிகப்படியான சம்பளம் பெறுவதற்கும், வேலை வாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய பயிற்சி, திட்டப் பணிகளும், கடனுதவி வழங்குதலும், மகளிர்களுக்கு வேலை வாய்ப்பு திட்ட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கையில் இத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளது மிக்க மகிழ்ச்சியினை அளிக்கின்றது.

தமிழ் நாட்டை கட்டிக் காக்க, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க நவீன முறையில் செம்மைப் படுத்த வேண்டி புரட்சித் தலைவி மேற் கொண்டுள்ள காவல் துறைக்கு புத்துணர்ச்சியும் புதிய தெம்பும் வழங்கப்பட்டு வருகின்ற சீர்திருத்த நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. மேலும் காவல் துறையினருக்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை செய்து கொடுப்பதன் மூலம மேலும் அவர்களுடைய முழு வேலைத் திறனையும் நாம் எதிர்பார்க்க முடியும் என்ற என் கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு பெற வேண்டி ஏற்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களும், மகளிர் மேம்பாட்டு வேலை வாய்ப்புத் திட்டங்களும், தொழில்நுட்பப், பயிற்சியின் மூலம் வேலைவாய்ப்பு பெற உள்ள திட்டங்களும் மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றன. (மணி அடிக்கப்பெற்றது). ஆதி திராவிட மக்கள் நலன் கருதி 10 அம்சத் திட்டங்களை மேற்கொண்டுள்ளதற்கு மிக்க நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, என் தொகுதியில் மருத்துவ வசதி, கல்வி வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. மருத்துவ சிகிச்சைப் பெற, குறிப்பாக ஒரு குளுக்கோஸ் ஏற்றுவதற்குக் கூட அங்கே இடமில்லாத வகையில் பி. எச். சி. இருக்கிறது. அதனை அப்கிரேட் பண்ணி பெரணமல்லூர் டவுனில் அதற்குரிய வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1992 மார்ச் 12] [திரு. ஆ. சீறுவாசன்]

அதே நேரத்தில் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மரத்தடியில் படிக்கிறார்கள், கட்டிட வசதி இல்லை. அங்கு 12 லட்சம் ரூபாயில் எஸ்டிமேட் போட்டு அது அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. அதை சேங்ஷன் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-50

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அப்படியே நன்றி சொல்லி முடியுங்கள்.

<u>திரு. ஆ. கு. சீனிவாசன் :</u> மேலும் என்னுடைய தொகுதியில் பெரணமல்லூர் டவுனில் 55 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர் திட்டம் போடப்பட்டு, இன்னும் இரண்டு மாதங்களில் முடியும் தருவாயில் இருக்கிறது. நலிந்த குடும்பமாகிய குசேலர் வீட்டுக்கு கண்ணபிரான் விஜயம்செய்து குசேலர் வீட்டை எப்படி பெருமை அடையச் செய்தாரோ அதைப்போல நலிந்த பகுதியான பெரணமல்லூர் டவுனுக்கு தமிழ்த்தாய் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விஜயம் செய்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் திறந்து வைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

<u>திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்தச் சபையில் விவாதத்திற்கு இருக்கக் கூடிய 1992-93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அனுபவமும், செயல் திறனும் உள்ள நிதியமைச்சர் அவர்களாலே வைக்கப்பெற்றிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையானது இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்க முயன்றிருக்கிற மத்திய அரசின் புரட்சிகரமான நிதிநிலை அறிக்கைக்கு சமமாக இல்லாவிட்டாலும் கூட, இன்றைய நாட்டின் நிலைமையை மனதில் கொண்டு மிக்க பொறுப்புணர்வோடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே மனதார இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்கிறேன்.

ஆனால் பற்றாக்குறையினை சமாளிக்கும் விதத்தில் நிதி ஆதாரத்தைத் திரட்டக் கூடிய எதிர்காலத் திட்டங்கள் எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை என்பதும், எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் கை காட்டுவதும், குறைபட்டுக்கொள்வதும்

[திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்] [1992 மார்ச் 12

வருத்தத்திற்கு உரியதாக இருக்கிறது. அதே சமயம் முதல்வரின் மருத்துவ நலத் திட்டம், சென்னை மாநகர் வளர்ச்சிக்கான திட்டம், சென்னை-கடலூர் வரையிலான கிழக்குக் கடற்கரையோர சாலைப் பணி, ஒரு லட்சம் மகளிருக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலனுக்கான 10 அம்சத் திட்டம், கருவுற்ற தாய்மார்களுக்கான உதவியை 300 ரூபாயாக உயர்த்தி இருப்பது, ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத் திட்டம் போன்றவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆனால் ஏரோட்டும் ஏழை இதயம் குமுறினால் போராட்டமே எழும் புவியிலே என்ற கவிஞனின் வரிகளுக்கொப்ப விவசாயிகளுக்கு நிதி ஏற்பாட்டுக் குழுவின் பரிந்துரைப்படி 40 சதவிகிதமாக வழங்கப்பட்டு வரும் முன்னுரிமைத் துறைக் கடன் 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருப்பதற்கு வருத்தம் தெரிவிக்கும் அரசு தொடர்ந்து மத்திய அரசையே குறை சொல்லிய பிறகு, நடப்பாண்டில் மழை நன்றாகப் பெய்துள்ளதையும், விளைச்சல் கண்டுள்ளதையும் சுட்டிக்காட்டி கடன்களை அடைக்கச் சொல்வதோடு விட்டால் பரவாயில்லை. ஆனால் விவசாயியின் துயர் துடைக்கவோ, வளர்ச்சிக்கோ எந்தவிதத் திட்டமோ அறிவிப்போ இல்லாததும், அவன் மீது நிலவரி, உள்ளாட்சி வரி, முத்திரைத்தாள் வரி போன்றவற்றை ஏற்றி வைத்திருப்பது மிகவும் வேதனையாக இருக்கிறது.

கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி; மண்ணிலே முத்தெடுத்துப் பிறர் வாழ வழங்கும் குணமுடைய தன்னலமற்ற உள்ளம் கொண்ட விவசாயி 15 ஆண்டுக் காலமாக வெள்ளம், வறட்சி இவைகளால் பாதிப்படைந்து நொந்து போயிருந்தவனுக்கு இந்த ஆண்டு நல்ல மழையும் விளைச்சலும் மகிழ்ச்சியடையச் செய்திருந்தன. ஆனால் இந்த அரசு விவசாயிகளின் மகிழ்ச்சியைக் குலைத்து விட்டிருப்பது வருத்தத்திற்குரிய விஷயம் என்பதை விட ஏரோட்டும் ஏழைகளின் இதயங்களைக் குமுற வைத்துவிட்டனர்கள்.

காவல் துறைக்காக 276.31 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அது காவல் துறையாகச் செயல்பட அனுமதிக்கப்படல் வேண்டும். மக்களுடைய பாதுகாப்பை மனதிலே கொண்டு காவல் துறையை செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நகரத்தில் டிராபிக் போலீசார் பணி செய்வதை விடுத்து, நகர எல்லைக்கப்பால் சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரை தேசிய நெடுஞ்சாலைகளில் பணி செய்வதைக் கட்டுப்படுத்திடல் வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் டிராபிக் போலீசார் மேற்கொள்ளும் பணி வேறு என்பதை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 மார்ச் 12] [திரு, பி. ஆர். எஸ். வெங்கடேசன்]

அடுத்து, மாண்புமிகு மந்திரிகள் ஒரு தொகுதிக்கு வருகிறார்கள், அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சமயங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு கொடுத்தால் நாங்களும் மந்திரிகளை வரவேற்கவோ, அவர்களுடன் கலந்தாலோசிக்கவோ, எங்கள் தொகுதியின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவோ முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, இனிமேல் மந்திரிகளின் சுற்றுப்பயணங்களின் போது எங்களுக்கும் அறிவிப்பு தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நன்னீர் இறால் மீன் வளர்ப்புத் திட்டம்—brackish water prawn farming—அண்டை மாநிலங்களில் நல்ல பயனளித்து வருகிறது. அந்த வகையில் திட்டம் மேற்கொள்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அதனை விரைந்து சிறிய அளவில் நன்னீர் இறால் மீன் வளர்ப்பை மேற்கொள்ளும் வகையில் செயல்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நன்னீர் இறால் மீன் வளர்ப்புத் திட்டத்தில் உள்நாட்டு மீனவர்களும் பயன்படும் வகையில் திட்டத்தை வகுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழலில் இந்த அரசு அதிக அக்கறை கொண்டு உள்ளதைப் பாராட்டுகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1.55

பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குரிய இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், போதிய கல்வி அளிப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசில் ஆதி திராவிடர், பழங்குடியினர், முற்பட்ட வகுப்பினர் என்ற மூன்றே பிரிவுகளே உள்ள நிலையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு போதிய கல்வி வசதியை அளிக்கும் வகையில் அதிக நிதி ஒதுக்கீடு இல்லாமல், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கு போட்டியிடும் நிலையை, பி.சி., எம்.பி.சி., மாணவர்களுக்கு உருவாக்குவது கடினம். எனவே அதிக நிதி ஒதுக்கீடு தேவை என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இறால் வளர்ப்புப் பற்றிக் குறிப்பிடும்போது மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். தறால் மீன் வளர்ப்பைப் பொறுத்த வரையில், மாண்புமிகு இமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதே நேரத்தில் மூன்று வகையாக, பிரிக்கப்பட்டிருக்கிறது, 'Small Scale entrepreneurs

Medium Scale entrepreneurs and Large Scale entrepreneurs' என்று. 'Small Scale enterpreneurs'-ஐப் பொறுத்த வரையில், ஐந்து ஹெக்டேருக்குக் குறைவாக உள்ள மீனவர்களுக்கு முன்னு ரிமை வழங்கப்படும் என்பதை அவைத் தலைவர் மூலமாக தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : சத்துணவு பற்றிய பாரா 66 மற்றும் 168ல் புள்ளி விவரங்களில் அச்சுப் பிழையால் தவறு நேர்ந்திருக்கிறதா, அல்லது தெரிந்தே விடப்பட்டதா என்பது தெரியவில்லை. பட்ஜெட் புத்தகத்தில், 66-வது பாரா வுக்கும், 168 வது பாராவுக்கும் இடையில் ரூ. 2.65 கோடியைக் காணவில்லை. மரியாதைக்குரிய சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் இதை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'ஒரு சாண் வயிறு இல்லாட்டா இந்த உலகத்தில் ஏது கலாட்டா' என்று ஒரு கவிஞர் சொல்லியது என் நினைவுக்கு வருகிறது. உணவு உண்பதற்காக ஓட்டல்களுக்குச் சென்று விலைப் பட்டியலைப் பார்த்தால் இப்போதே பயமாக இருக்கிறது. ஆகவே நிதியமைச்சர் அவர்கள் அந்த வருமான விகிதாசாரத்தை 18.25 லட்சம் ரூபாயிலிருந்து ரூ. 3 லட்சமாக ஆக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை, நகரங்களி லும் கிராமங்களிலும் தலைவிரித்தாடுகிறது. தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை. நியாய விலைக் கடைகளில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தியிருப்பது பிரச்சினைக்குரியதாக இருக் கிறது. இந்த ஆண்டு சுற்றுலா ஆண்டாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. இந்த மாமன்றத்தில் நான் அன்போடு கேட்டுக் கொள்வது கடலூரை சுற்றுலா மையமாக நீங்கள் அறிவிக்கிற நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். அங்கே அழகிய கடற்கரை இருக்கிறது. பிரசித்தி பெற்ற பாடலீஸ்வரர் கோயில் இருக்கிறது. பிரசித்தி பெற்ற திருவகிந்திபுரம் திருக்கோயில் இருக்கிறது. எனவே தமிழக முதல்வரை நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்வது கடலூரை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் கலைக்கல்லூரி அருகே இடம் அதிகமாக இருக்கிறது. அங்கே கல்லூரி விடுதி அமைக்க உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்புத்





தந்தமைக்கு இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஆர். ராஜு.

* திரு. கே. ஆர். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு புகழ்பெற்ற இம்மாமன்றத்தில் உரை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடை கிறேன்.

இப்பெருமைக்குரிய நல்வாய்ப்பினை வழங்கிய உலகத் தமிழர் போற்றும் உத்தமத் தலைவியாம், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், தங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, புரட்சித்தலைவி அவர் களின் புனித ஆட்சியின் இரண்டாவது வரவு-செலவுத் திட்ட அறிக்கை உலகமே வியந்து பாராட்டும் வண்ணம் அமைந் துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடுமையான நிதி நெருக்கடியிலும் ஏழை எளியோரை பாதிக் காத வண்ணம் பல்வேறு சலுகைகளை அளித்து, குறைந்த அளவிலான வரிகளுடன் எமது அரசு தந்துள்ள இந்த பட்ஜெட் ஏழை கிராம மக்களுக்கும், அனைத்து மக்களுக்கும் ஒரு வரப் பிரசாதமாகும்.

எங்கள் கூடலூர் நீலகிரி தொகுதியைப் பொறுத்த வரையில் மாவட்டத் தலைநகர் ஊட்டிக்கும், கூடலூருக்கும் இடையேயான மலைச் சாலை சுமார் 50 மைல் தூரம் உள்ளதாலும், அடிக்கடி சீதோஷ்ண நிலை மாறுவதாலும் கூடலூர் தொகுதிக்கு சிறப்பான சில வசதி வாய்ப்புகளை அளித்து உதவிட வேண்டுமென்பது எமது தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கைகளாகும்.

இங்கு ஒரு அரசு கலைக்கல்லூரி மற்றும் ஒரு பாலிடெக்னிக் கும் இல்லாமையால், மாணவ மாணவிகள் சுமார் 60 மைல் தூரம் வரை மலைப்பாதையில் பயணம் செய்து கடுமையான பனி, மழைக் காலங்களிலும் உதகை வந்து கல்வி கற்க வேண்டிய சூழ்நிலையில் பலர் கல்லூரிக் கல்வியையே பாதியில் விட்டுவிடும் சூழ்நிலை உள்ளது. எனவே கூடலூரில் ஒரு அரசு கலைக் கல்லூரி யும் ஒரு பாலிடெக்னிக்கும் அமைத்துத் தந்து, எமது நெடுநாள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவீர்கள் என்று நம்புகிறேன்.

அதே போல், கூடலூர் மருத்துவமனையில் நவீன மருத்துவக் கருவிகள் இல்லாமையால் அவசர சிகிச்சைக்காக 60 மைல் தூரம்

1992 மார்ச் 12] [திரு. கே. ஆர். ராஜு]

மலைச்சாலைகளில் பயணம் செய்து உதகை வரவேண்டி யுள்ளது. இதனால் பல நோயாளிகள் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள்.

மேலும் வெளியூர்களில் இருந்து நியமனம் பெறும் மருத்துவர் கள் சீதோஷ்ண நிலை அடிக்கடி மாறுவதால் யாருமே தொடர்ந்து எமது மாவட்ட மருத்துவமனைகளில் பணிபுரிவதில்லை. நிய மனம் பெற்ற ஓரிரு மாதங்களிலேயே மாறுதல் பெற்றோ அல்லது விடுமுறையிலோ சென்று விடுகிறார்கள். மற்றும் கூடலூர் மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் யாருமே இல்லை. இதனால் மக்கள் பெருமளவில் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக தாய்மார்கள், பிரசவம் போன்றவற்றிற்கு பெண் மருத்துவர்களையே நாடுகின்றனர்.

பிற்பகல் 2—00

எனவே இக்குறைகளை நீக்க நீலகிரி மாவட்டத்து மருத்து வர்களையே அதிக அளவில் எங்கள் மாவட்ட மருத்துவமனை களில் நியமிக்க வேண்டும். கூடலூர் மருத்துவமனையில் நவீன மருத்துவக் கருவிகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். கூடலூர் மருத்துவமனையில் மாவட்ட தலைநகர் மருத்துவமனைக்கு உண்டான அனைத்து சிறப்பான வசதிகளையும் செய்து தர வேண்டும்.

கூடலூர் தொகுதி மிகப்பெரிய தொகுதி. மூன்று மாநில எல்லைப் பகுதியான இங்கு இரண்டரை இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அதிக அளவில் காவல்துறை அதிகாரிகளும், காவலர்களும் தேவை. மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை ஏற்று கூடலூர் தாலுக்கா காவல் நிலையங்களில் திறமைமிக்க காவல்துறை அதிகாரிகளை யும், காவலர்களையும் நியமிக்க வேண்டும். மேலும் கூடலூர் தொகுதி காவல் நிலையங்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கிடவும் ஆவன செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பரவலாக கடுமை யான குடிநீர் பற்றாக்குறை உள்ளது. புரட்சித் தலைவி அவர் களின் புனித அரசு தக்க நடவடிக்கையை மேற்கொண்டு அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைத்திட ஆவனசெய்ய வேண்டுகிறேன்.

ஊட்டி, கூடலூர் தாலுக்காக்களை, ஊட்டி குந்தா, கூடலூர் பந்தலூர் என நான்கு தாலுக்காக்களாக பிரிக்க எங்கள் மாவட்ட மக்கள் அரசிடம் வேண்டுகோள் விடுத்து நீண்ட நாள் ஆகிவிட்டது. இதய தெய்வம் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயாவது எமது மாவட்ட மக்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு குந்தா, பந்தலூர் என்று இரு புதிய தாலுக்காக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1992 மார்ச் 12] [திரு. கே. ஆர். ராஜு]

கூடலூரில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள செக்ஷன்-17 நில வழக்கு உச்ச நீதிமன்றத்தில் உள்ளதாக அறிகிறேன். அரசு முயற்சி செய்து வழக்கை முடித்து, அந்த அரசு நிலங்களை அரசே கைப்பற்றி அப்பகுதி ஏழையெளிய நிலமற்ற மக்களுக்கு பட்டா வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட சாலைகள் அனைத்தும் மிகவும் மோசமாக பழுதடைந்து போக்குவரத்துக்கு உபயோகமற்று உள்ளது. சம வெளிப் பிரதேச சாலைகளை செப்பனிடுவதற்கு ஒதுக்கும் நிதி அளவைவிட இரு மடங்கு அளவு நிதி மலைப்பகுதி சாலை களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதனை கருணையுடன் கவனிக்க வேண்டு கிறேன். கூடலூர் பகுதி சாலைகளை பழுது பார்த்து செப்பனிட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் தொகுதியிலுள்ள பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங் கள் கட்டித் தர வேண்டும். பல பள்ளிகளை தரம் உயர்த்த வேண்டுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் இயக்கப்படும் பழுத டைந்த அனைத்து பேருந்துகளையும் புதிதாக மாற்றித் தர வேண்டுகிறேன்.

மழைக் காலங்களில் ஏற்படும் மண் சரிவைத் தடுக்க தக்க ஏற்பாடுகள் செய்திட வேண்டுகிறேன்.

குளுமையான சுற்றுலா சிறப்புமிக்க எங்கள் நீலகிரி மாவட்டம் மென்மேலும் சிறப்புபெற மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் வரவேற்கிறேன். வரும் மே திங்களில் நடைபெறும் ''மலர் கண்காட்சி'' சிறப்பு பெற, சிறப்பு விருந்தினராக எங்கள் இதய தெய்வம், தமிழ் தாய், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதிலே கலந்துகொள்ள வேண்டுமென எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக வருக, வருக, வருக என வரவேற்று வணங்கி, இவ்வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நிறைவாக திரு. தெய்வநாயகம்—இருக்கையில் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13-3-1992) காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை. பிற்பகல் 2—02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

163173

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

12. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 27—8—1991ஆம் நாளிட்ட 306ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

13. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30—8—1991 ஆம் நாளிட்ட 310 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

14. 1990–91 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1|1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

15. 1990–91 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1|1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

16. 1990–91 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1|1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ் ஆங்கிலம்).

17. 1990–91 ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1|1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

18. மனுக்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1991–92.